# முத்துலட்சுமி ராகவன்



# அகல் விளக்கு...

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ அகல் விளக்கு... ★ முத்துலட்சுமி ராகவன்

## முத்துலட்சுமி ராகவன் எழுதிய

## ‘அகல் விளக்கு...’

### ஆசிரியர் கடிதம்...

# மனம் விட்டுப் பேசலாமா..?

என் பிரியத்துக்குரிய வாசக.. வாசகிகளே..!

‘ரயில் பயணங்களில்..’ன்னு ஒரு சினிமா இருக்கு.. அந்தப் படத்தோட டைட்டில் எனக்குப் பிடிக்கும்.. எதனாலன்னு யோசிச்சுப் பார்த்தப்ப ரயில் பயணங்கள் என் வாழ்வில் அரிதானவை என்பதினால்தான்னு பிடிபட்டது.

சென்னையிலே என் தாய்மாமாக்களின் வீடுகள் இருக்கிறதினால சின்ன வயசில ‘மே’ மாத லீவுக்கு சென்னைக்கு வந்து போவோம்.. அப்போது வந்து போன ரயில் பயணங்கள் என் நினைவில் இல்லை..

நினைவு தெரிந்த நாள் முதல் சென்னைக்கு வந்து போனது பஸ்ஸில்தான்.. ரயிலில் இல்லை.. ரயிலில் பயணித்து விட வேண்டும் என்ற என் நீண்டநாள் ஆசைக்காக திருப்பதிக்கு ரயிலில் சென்று வரலாம் என்று கூறினார் என் கணவர்.. சிறுவனாக இருந்த என்மகனும் உற்சாகத்துடன் அதை வரவேற்றான்.. சந்தோசமாக ரயிலில் கிளம்பினோம்.. ரயிலில் பயணித்ததைப் போட்டோ பிடித்துப் பொக்கிசமாக வைத்துக் கொண்ட முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்.. திருப்பதி சென்று ஏழுமலையானையும், அடிவாரத்தில் கோவில் கொண்டிருக்கும் அலமேலுமங்கை நாச்சியாரையும்.. ஸ்ரீனிவாசப் பெருமாளின் திருமணத்திற்கு பொன் நாணயங்களை மரக்காலில் அளந்து செலவு செய்த களைப்பில் தங்க மரக்காலைத் தலைக்கு வைத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் கோவிந்தராஜப் பெருமாளையும் சேவித்து

விட்டுக் காளஹஸ்தி கோவிலுக்குச் சென்று வணங்கி விட்டுத் திரும்பினோம்..

திண்டுக்கல்லை ரயில் அடைந்தபோது இரவுப் பொழுது.. நள்ளிரவைத் தாண்டியிருந்தது.. பிளாட்பாரத்தில் ஒரேயொரு போர்ட்டர் மட்டும் தான் இருந்தார்.. ரயிலை விட்டு நாங்கள் மூவர் மட்டும்தான் இறங்கினோம்.. என் கணவரும், மகனும் பெட்டிகளுடன் பிளாட்பாரத்தில் இறங்கிப் பத்திரமாக நின்ற பின்னால் கடைசியாக நான் இறங்கினேன்..

பொதுவாக நான் பாதங்களை அழுத்தி ஊன்ற மாட்டேன்.. ரயிலின் இரண்டாவது படி வழுவழுப்பாக சிறியதாக இருக்கும்.. அந்தப் படியில் அழுத்தமில்லாமல் நுனியில் நான் காலை வைத்து இறங்கியதில் வழுக்கி விட்டு பிளாட்பாரத்திற்கும், ரயிலுக்கும் இடையில் விழுந்து சொறுகி விட்டேன்.. என் கால் தண்டவாளத்தில் பதிந்திருந்ததா என்பது கூட என் நினைவில் இல்லை.. என் அலறல் சப்தத்தில் பிளாட்பாரத்தில் இருந்த போர்ட்டரும், ரயிலின் ஏஸி கோச்சில் நாங்கள் பயணம் செய்ததால் விழித்திருந்த ஏஸி கோச்சின் ஊழியர்களும் ஓடி வந்து என் கையைப் பற்றினார்கள்.. என் மகன் சிறுவன்.. தூக்கக் கலக்கத்துடன் தள்ளி நின்றவனுக்கு நான் விழுந்ததுகூடத் தெரியாது.. என் கணவர் பாய்ந்து என் தோளைப் பிடித்துத் தூக்க.. மற்றவர்கள் கையைப் பிடித்துத் தூக்க என்று என்னை நொடிப் பொழுதில் பிளாட்பாரத்தில் தூக்கி நிறுத்தி விட்டார்கள்.

நான் விடுபடுவதற்கும், ரயில் நகர்வதுக்கும் சரியாக இருந்தது.. நன்றி ஏழுமலையானுக்கு..

அதற்குப் பின்னால் ரயிலை நினைத்தாலே குளிர் ஜீரம் வந்து விட்டதால் ரயில் பயணத்தைப் புறக்கணித்துக் கொண்டிருந்தேன்.. கோபி செட்டிப் பாளையத்தில் நடந்த கானபிரியாவின் திருமணத்திற்கு நான் ரயிலில் போக

வேண்டியதாகி விட்டது.. நல்லவேளையாக ஊடே ஏறி இறங்க வேண்டிய அவசியமில்லாமல் சென்னை ஈரோடு எக்ஸ்பிரஸ்ஸிலேயே போய் வந்து விட்டோம்.. அந்தப் பயணத்தைக் குறித்த என் ஆயிரம் கேள்விகளுக்கு லட்சுமி மோகன் பொறுமையாகப் பதில் சொன்னது தனிக் கதை..

பவானி ஆற்றங்கரையை ரசிக்க முடிந்த அந்த ரயில் பயணத்தில் திரும்பும் போது.. எங்களின் கம்பார்ட்மெண்டில் என் கணவருடன் பேசிக் கொண்டிருந்த சக பயணிகள் அவர் நாவல் வெயிட்டாளர் என்பதில் ஆர்வம் காட்டிப் பேசினார்கள்.. அதில் ஒருவர் என் கதையைப் பற்றி வியந்து பேசினார்.. கடைசிவரை நான்தான் அந்தக் கதைகளை எழுதிய எழுத்தாளர் என்பதை நான் வெளிப்படுத்தவே இல்லை.. மௌனமாக அவர்களின் பேச்சைக் கவனித்தபடி தூங்கி விட்டேன்.. நான் யாரென்பதை அறியாமலே அவர் இறங்கிப் போய் விட்டார்.. இதுவும் நன்றாகத்தான் இருக்கிறது.

அரிதான எதுவும் ஆகர்ஷிப்பதுதான்.. ரயில் பயணங்களைப் போல.. அடுத்த ஆசிரியர் கடிதத்தில் பேசலாமா..?

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

## கவிதை சொல்லவா..?

*இருள் நிரம்பிய என் வாழ்வில்*
*வெளிச்சப் புள்ளிகள் நிறைவது எப்போது..?*
*காத்திருக்கிறேன்.. விளக்கின் சுடர் தேடி..*
*அருள்தீபம் நீயேந்தி*
*அருகில் வா..*
*என் மன இருளை விரட்டி*
*மகத்துவம் தா..*

*- முத்துலட்சுமி ராகவன்*

# 1

மழையும் இல்லாத வெயிலும் இல்லாத இதமான நிழல்பொழுது அவளை பால்கனியின் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆட 'வா' என்று அழைத்தது.. ஆசையுடன் போனாள்.. ஓர் இளவரசியைப் போல ஊஞ்சலில் உட்கார்ந்து கால்களை விந்தி ஆடினாள்.. மயில் தோகை போலத் தொங்கிய கூந்தல் தரை தொட முயன்று ஊஞ்சலின் வேகத்தில் அலை பாய்ந்தது.. மஞ்சள் அரைத்துப் பூசியதைப் போன்ற நிறம் கதிரவனின் கதிரில் ஜொலித்தது.. மெலிதாக நீண்டிருந்த நாசியில் இருந்த வைர மூக்குத்தி அவளின் சாத்வீகமான அழகோடு ஒன்றி ஒளிர்ந்தது.

அவள்.. பூர்ணிமா..! கொடி போன்ற உடல் கொண்டவள்.. பூப்போன்ற மனம் கொண்டவள்.. வங்கியில் மேனேஜராக பணிபுரியும் விஸ்வநாதனின் இளைய மகள்.. குடும்பமே உலகம் என்று வாழும் பாகீரதியின் செல்லமகள்.. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று கஞ்சி போட்ட சட்டையை விட விறைப்பாக முறைக்கும் டி.எஸ்.பி பூபாலனின் அன்புத்தங்கை.. மணாளனே மங்கையின் பாக்கியம் என்று பூபாலனிடம் சொக்கி நிற்கும் ஆனந்திக்குப் பிரியமான நாத்தனார்.. சாக்லெட்டிலிருந்து சகலத்தையும்

பகிர்ந்து கொள்ளும் குட்டிக் குழந்தை ஆஷாவின் அருமை அத்தை..

பூர்ணிமா தென்றலைப் போன்றவள்.. அகல் விளக்கின் அமைதியைத் தருபவள்..

அவள் அட்சயப் பாத்திரம்..! கற்பகத்தரு..! காமதேனுவைப் போலக் கேட்ட வரம் அளிக்கும் காருண்யம் கொண்டவள்..

விஸ்வநாதனுக்கு பூர்ணிமா என்றால் உயிர்.. மகளின் கனிவான சுபாவத்தில் பெருமை கொண்டவர் அவர்.. ஒரு வகையில் மகளைச் செல்வம் போல நினைப்பவர்.. மகள் நடந்தால் அந்த மகாலட்சுமியே நடப்பதைப் போல இருக்கிறது என்று சொல்லிச் சொல்லி மகிழ்வார்..

அமைதி ததும்பும் அகல் விளக்கின் சுடரொளியைத் தன்னுள் கொண்டவள் பூர்ணிமா.. பூவினும் மெல்லிய பாதங்கள் நிலத்தில் பதிந்து நடக்கும் ஒலியை சன்னமான கொழுசின் ஒலி மட்டுமே காட்டிக் கொடுக்கும் இட்ட அடி நோக, எடுத்த அடி கொப்பளிக்க என்று அன்னம் போல நடை பயில்பவள் அவள்..

இதழ்விரித்து சின்னச் சிரிப்பை அவள் சிரிக்கும் விதமே அலாதியானதாக இருக்கும்.. மெல்லச் சிரிக்கும் அவளது சன்னச் சிரிப்பிற்கு இந்த பூலோகத்தையே எழுதி வைத்து விடலாம் போலத் தோன்றும்.. பூலோகத்தில் சதுர அடியின் விலை நாளுக்கு நாள் ஏறி வருவதாலும்.. தனியொரு

மனிதருக்குச் சொந்தமில்லாமல் அனைத்து ஜீவராசிகளுக்கும் அது சொந்தமானதாக இருப்பதாலும் அவளுக்கு பூலோகத்தை எவரும் சாசனம் பண்ணிக் கொடுத்து விட முடியவில்லை என்பதினால் விட்டு வைத்துள்ளார்கள்.

அத்தகைய அகல்விளக்கின் ஒளி வடிவாக விளங்கும் பூர்ணிமா ஆகாயத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்... மைதீட்டிய அவளது மைவிழிகளுக்குள் மையல் ததும்பிக் கொண்டிருந்தது.. இன்னதென்று சொல்லில் வரையறுக்க முடியாத சந்தோசம் அவளது நெஞ்சகத்தில் நிரம்பியிருந்தது.. ரகசியக் கனவுகளை உற்பத்தி செய்யும் அந்த சந்தோசம் சமீப காலத்தில்தான் அவளை ஆக்ரமித்திருந்தது.. பகிர்ந்து கொள்ள அந்தரங்கத் தோழியில்லாத நவின யுகத்தின் இளவரசி அவள்.. தனிமையில் தன் ரகசியக் கனவுகளில் கரைந்து கொண்டிருந்தாள்..

வானம் மேக மூட்டங்களுடன் காட்சி தந்தது.. மீண்டும் மழை வரக்கூடுமோ என்று யோசித்தாள்.. மழை பொழிந்தால் மயிலைப் போலத் தோகை விரித்து நாட்டியமாடப் போகிறாளா என்று அவள் மனம் அவளைக் கேலி செய்தது.. மேகக் கூட்டங்கள் விதம் விதமான வடிவங்களுடன் காட்சி தந்தன.. ஒவ்வொரு வடிவத்திற்கும் உருவம் கொடுத்து அவள் கற்பனை செய்து பார்த்தாள்.. இது யானை, இது குதிரை, இது பறவை என்று

பற்பல பெயர்களைச் சூட்டி அழகு பார்த்தவளை அந்த முரட்டு மேகம் ஈர்த்தது..

'இது.. இது..இது..'

பூர்ணிமாவின் முகத்தில் மென்மை படர்ந்தது.. அவளது மனக்கண்ணில் ஓர் உருவம் விரிந்தது.. ஆறடி உரயத்தில், ஆஜானுபாகுவான தோற்றத்தில், மாநிறத்தில், வடிவான தோற்றத்துடன் கண் சிமிட்டி 'வா' என்றழைத்தது..

'வாவென அழைத்தால் போய்விட முடியுமா..?'

வாட்டத்துடன் கூடிய நாணச்சிரிப்புடன் அவள் காற்றில் விரல்களைச் சுண்டினாள்.. அதைக் காற்று அந்த முரட்டு உருவத்திடம் எடுத்துச் சொல்லுமா என்று யோசித்தாள்.. குழந்தைத்தனமான யோசனையில் சிரிப்பு வந்தது.. மேக உருவத்துக்கு லிகிதம் வரைந்தாலென்ன என்று தோன்றியது.. மேகம் விடு தூதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாள்.. மேகத்துக்கே தூதனுப்ப என்ன செய்வாள்..?

முரட்டு மேகத்தின் பக்கத்தில் துகள் துகளான மேகங்கள் மிதந்தன.. அவற்றில் ஒன்று கரைந்து காகித வடிவில் மாறியது.. பூர்ணிமாவின் மனதில் பாடல் வந்து நின்றது.

**"காதல் கடிதம் தீட்டவே..**
**மேகமெல்லாம் காகிதம்**
**வானின் நீலம் கொண்டுவா..**

*பேனா மையோ தீர்ந்திடும்..*
*சந்திரனும் சூரியனும்*
*அஞ்சல் காரர்கள்..*
*இரவு பகல் எப்பொழுதும்*
*அஞ்சல் உன்னைச் சேர்ந்திடும்..”*

மனதில் வந்த பாடலை வாய் விட்டு அவள் பாடியதில் பக்கத்தில் வந்து நின்ற ஆஷாக்குட்டி ஆச்சரியம் கொண்டு இது அத்தையா இல்லை கானம் பாடும் யட்சக் கன்னிகையா என்று அடையாளம் பார்ப்பதைப் போல உற்றுப் பார்த்து வைத்தாள்..

“பாத்தா பாதின..?” மழலையில் கேட்டாள்..

அவள் சந்தேகமாக கேட்டதில் பூர்ணிமா சிரித்துவிட்டாள்.. அவள் பாடியது பாட்டா இல்லையா… என்று குழந்தை சந்தேகப்படும் அளவிற்கு மட்டக் கேவலமாகவா பாடி வைத்துத் தொலைத்தாள்..?

“நீயே இப்படிக் கேட்டா அத்தை மனசு தாங்குமா.. ஆஷாக்குட்டி..?” குழந்தையை அணைத்துக் கொண்டாள்..

“விது அத்தை..” ஆஷா திமிறினாள்..

“ஏன் குட்டி..?” பூர்ணிமா விடவில்லை..

“பாத்தி உன்னக் கூப்பித்தாங்க..”

அவளது மழலையில் மகிழ்ந்து போனாள் பூர்ணிமா.. மூன்றாம் வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஆஷாவுக்கு ‘ட்’ என்ற எழுத்து

இன்னமும் சரியாக நாவில் வந்து உட்காரவில்லை.. 'ட்'க்குப் பதில் 'த்' என்று உச்சரிப்பாள்.. இன்னும் பல எழுத்துக்களை அவளது வசதிக்கு ஏற்ப மாற்றியமைத்துச் சொல்லுவாள்.. அதைக் கேட்கும் பொழுதெல்லாம் செவிகளில் இன்பத்தேன் பாய்வதைப் போல புளகாங்கிதப் பட்டுப் போவாள் பூர்ணிமா..

**'குழலினிது யாழினிது என்பர் – தம்மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவர்...'**

பொய்யாமொழிப் புலவரின் ஹைக்கூக் கவிதையான திருக்குறள் அவள் மனதில் ஒலித்தது.. வள்ளுவர் மனித மனங்களை எத்துணை நுட்பமாக ஆய்வு செய்திருக்கிறார் என்று எப்போதும் போல அப்போதும் வியந்து போனாள் பூர்ணிமா..

"உங்க பாட்டி என்ன மகாராணியா..? அவங்க கூப்பிட்டதும் ஓடோடி வந்துடனுமா..?" குழந்தையை அள்ளியபடி எழுந்து நின்றாள்..

"ஆமா.." குழந்தை அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டது..

"என் தங்கம்..!"

குழந்தையை முத்தமிட்டபடி தாயைத் தேடிப் போனாள் பூர்ணிமா..

# 2

**வா**ணலியில் எண்ணையை விட்டுக் கடுகைப் போட்டாள் பாகீரதி.. அது வெடிக்க ஆரம்பித்த போது..

“கூப்பிட்டிங்களாம்மா..?” என்று வந்து நின்றாள் பூர்ணிமா..

“ம்ம்ம்.. உன் ஸ்கூட்டி என்ன ஆச்சுன்னு அப்பா கேட்கச் சொன்னார்..” நறுக்கி வைத்திருந்த காய்கறிகளை வாணலியில் போட்டு வதக்கியபடி திரும்பிப் பார்க்காமல் சொன்னாள் பாகீரதி..

தாய் என்னவோ கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டு விட்டதைப் போல விதிர்த்துப் போனாள் பூர்ணிமா.. மலையைப் பெயர்த்துக் கொண்டிருப்பதைப் போல அவளுக்கு வியர்த்துப் போனது.. என்ன சொல்வதென்று தெரியாமல் தவித்தாள்.. சமையலில் கவனமாக இருந்த பாகீரதி மகளின் தவிப்பைக் கவனிக்கவில்லை..

“என்னடி பதிலைக் காணோம்..?” தயாராகியிருந்த பொரியலை வாணலியிலிருந்து பாத்திரத்துக்கு இடம் மாற்றியபடி கேட்டாள் பாகீரதி..

“அதும்மா.. வந்தும்மா.. ஸ்கூட்டிம்மா..”

திக்கித் திணறிய மகளை விசித்திரமாகப் பார்த்து வைத்தாள் பாகீரதி.. மகளிடம் தெரியும்

தடுமாற்றத்தை அவளது புத்தி மிகத் துல்லியமாகக் கவனித்து விட்டது.

'ஏன் இப்படித் தந்தியடிக்கிறா..?'

அதுதான் அவளுக்குத் தெரியவில்லை.. தடுமாறுகிறாள் என்பதால் பூர்ணிமாவைத் தவறாகவும் நினைத்து விட முடியாது.. சின்னச் சமாச்சாரங்களுக்கெல்லாம் பயந்து திக்கித் திணறும் சுபாவம் கொண்டவள் பூர்ணிமா.. அவளது பயம் அவளது அமைதியான அழகை அதிகப்படுத்தும் வல்லமை கொண்டது.. மான் குட்டியைப் போல மருளும் விழிகளுடன்.. இமைகள் படபடக்க அவள் திக்கித் திணறுவதைப் பார்க்கும் எவரும் உடனடியாக பூர்ணிமாவிடம் சரணடைந்து விடுவார்கள்.. பூர்ணிமாவின் மருளலுக்கு அத்தகைய சக்தி உண்டு.. அவளது மருளல் சரணடையாது.. சரணடைய வைக்கும்..

அன்றும் அது போலதான் ஆனது..

"இப்ப நான் என்ன கேட்டுட்டேன்னு இப்படித் திக்கித் திணறி பயந்து முழிக்கிற..? காலையிலே காலேஜீக்குப் போனப்ப ஸ்கூட்டியிலே.. போன.. சாயங்காலம் என்னன்னா நடந்து வர்ற.. பக்கத்து வீட்டு மாமிகிட்டப் பழமை பேசற இண்ட்ரெஸ்டில் நானும் அதைப்பத்தி அப்புறமாக் கேட்டுக்கலாம்ன்னு இருந்துட்டேன்.. இப்ப என்னடான்னா அப்பா வேலை முடிஞ்சு வீட்டுக்கு வந்துட்டார்.. வாரப்பவே போர்டிகோவில்

பூர்ணியோட ஸ்கூட்டி இல்லையே.. இன்னுமா அவ வரலைங்கிற ஆலாபனையோட வர்றார்.. அப்பவே அவ வந்தாச்சுன்னு சொன்னா.. ஸ்கூட்டி எங்கேன்னு கேட்கிறார்.. எனக்குத் தெரியாதுன்னு சொன்னேன்னு வைய்யி.. அவ்வளவுதான்.. என் பொண்ணை நீ கவனிச்சுக்கிற லட்சணம் இதானான்னு தாம்தூம்ன்னு குதிக்க ஆரம்பிச்சுருவார்.. முதல்ல நீங்க பிரஷ்ஷாகிட்டு வாங்க.. சொல்றேன்னு அனுப்பி வைச்சிருக்கிறேன்.. இப்ப வந்துருவார்.. வந்ததும் ஸ்கூட்டியைப் பத்தித்தான் கேட்பார்.. என்னன்னு சொல்றது..? அதான் கேட்டேன்.. அதுக்குப் போயி இப்படித் தந்தியடிப்பியா..? தந்தியடிச்ச காலமெல்லாம் மலையேறிப் போயி இப்ப செல்போன் யுகம் வந்துருச்சும்மா.. இதை நீ சொல்லி நான் கேட்டுக்கனும்.. நம்ம வீட்டில என்னன்னா எல்லாமே தலை கீழா இருக்கு..”

அலுத்துக் கொண்டபடி வாணலியில் பஜ்ஜி போட ஆரம்பித்தாள் பாகீரதி.. இரவு சமையலையும், மாலை டிபனையும் ஒற்றை ஆளாய் செய்யும் அலுப்பு அவள் முகத்தில் அப்பியிருந்தது.. கூடமாட ஒத்தாசைக்கு மருமகள் வந்து நின்றால் தேவலையென்று நினைத்துக் கொண்டாள்.. வெறும் நினைவு மட்டும்தான்.. வெளியில் சொல்ல முடியாது..

பூபாலனின் மனைவியான ஆனந்தி செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவள்.. பணத்தில் மட்டுமல்ல.. அரசியல் பின் புலத்திலும் அவள் குடும்பம் செல்வாக்குக் கொண்டது.. அந்தக் குடும்பத்தில் பெண்ணெடுப்பதா என்று பாகீரதியின் மனதில் உதறல் வந்ததெல்லாம் உண்மைதான்.. மகனின் விருப்பம் அவளது.. அபிப்ராயத்தை வாய் விட்டுச் சொல்ல முடியாமல் தடுத்து விட்டது.

பெண் பார்க்கப் போன போதே எங்கள் வீட்டுப் பெண்ணுக்குச் சமைக்கத் தெரியாது என்று ஆனந்தியின் குடும்பத்தினர் அறிவித்து விட்டார்கள்.. நறுக்காக நான்குபேர்கள் கொண்ட குடும்பத்துடன் விஸ்வநாதன் பெண் பார்க்கப் போயிருக்க.. பெண் வீட்டில் அப்பா, அப்பப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியத்தாத்தா, பெரியம்மா, பெரிய பாட்டி, சித்தப்பா, சின்னத்தாத்தா,
சித்தி, சின்னப்பாட்டி மற்றும் அவர்களது உறவினர்கள் என்று ஒரு படையே நிரம்பியிருந்தது..

தாத்தாமார்களின் விசாரணை சொத்துக்களைப் பற்றியிருந்த தென்றால், பாட்டிமார்களின் விசாரணை விஸ்வநாதனின் வீட்டில் இருக்கும் வேலையாள்களைப் பற்றியதாக இருந்தது..

“என்னது..? சென்னையில சொந்தவீடு.. கிராமத்தில வீடும் தோப்பும், துரவும்தானா..? வேற எதுவும் இல்லையா..?”

தாத்தாமார்கள் உதட்டைப் பிதுக்கிப் பலத்த ஆலோசனையில் இறங்கினார்கள்.. இதற்கு மேல் என்ன சொத்து சுகம் இருக்க வேண்டும் என்று விஸ்வநாதன் திருதிருக்க..

“என்னது..? உங்க வீட்டில ஒரேயொரு வேலைக்காரி மட்டும்தானா..?” என்ற பாட்டிமார்களின் கேள்வியில் பாகீரதி கிறுகிறுத்துப் போனாள்..

வீடான வீட்டிற்கு வேலைக்காரப் பெண் ஒருத்தி மட்டும் இருந்தால் போதாதா..?

“போதாது..” என்றாள் சின்னப்பாட்டி..

“ஒரு நாளு கிழமைன்னா வேலை அதிகமா இருக்கும்.. அப்ப ஒருத்தி மட்டும் இருந்தா வேலைக்காகுமா..?”

“எங்களுக்கு ஆகும்ங்க.. நாங்க நாலே பேர்தான..?”

யதார்த்தமாக வாய் விட்டு விட்டாள் பாகீரதி.. அவ்வளவுதான் அம்மம்மா, அப்பம்மா, என்று அனைத்துப் பாட்டிகளும் ஒன்று சேர்ந்து பாகீரதியை ஆய்ந்து விட்டார்கள்..

“நாலே பேர்தானன்னா.. என்ன அர்த்தம்..? உங்க வீட்டில ஆள் நிறைய இருக்காங்கன்னு சொல்லிக் காண்பிக்கறீங்களா..?”

“அச்சச்சோ.. அப்படியில்லைங்க..”

“எங்களது ஜனக்கட்டான குடும்பம்..”

“பாத்தாலே தெரியுதுங்களே..”

வயோதிகத்தின் சாயல் துளியும் இல்லாமல் கட்டான உடல் வாகுடன் இருந்த பாட்டிகளைப் பொறாமையுடன் பார்த்தபடி சொன்னாள் பாகீரதி..

“எங்க பொண்ணுக்கு வீட்டு வேலை தெரியாது..”

“அதுக்கென்னங்க.. வேலைக்கு ஆள் வைச்சிருக்கோமில்ல.. ஒரு பிரச்னையும் இல்ல..”

இலகுவாக சொல்லி விட்டாள் பாகீரதி.. அவள் நினைப்பதை போல அது இலகுவான ஒன்றல்ல என்பது போகப் போகப் புரிந்தது.. பாட்டிகளின் கூட்டணி பலமிக்கதாக இருந்தது..

“பிரச்னையில்லைன்னு நீ சொல்லக் கூடாதும்மா.. நாங்க சொல்லனும்...”

இடக்காக வந்த பதிலில் பாகீரதி வாயை மூடித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்... மாப்பிள்ளையைப் பெற்றவள் அவள்தானா என்ற சந்தேகம் அவள் மனதில்

மேவியது... பெண்வீட்டாரின் சட்டதிட்டங்களில் அவள் பாவம் மருண்டு போனாள்..

“எங்க பொண்ணுக்கு சமைக்கவும் தெரியாது..”

சாப்பிடத் தெரியுமா என்ற கோபமான கேள்வி பாகீரதியின் தொண்டைக் குழிவரை வந்து விட்டது.. ஆனந்தியின் தாத்தா, பெரியப்பா, அப்பா, சித்தப்பாக்களின் முரட்டு மீசையில் தொண்டைக் குழி வரை வந்த கேள்வி வந்த வழியிலேயே திரும்பி ஓடிப் போய்விட்டது..

அதற்கென்னங்க.. எங்க வீட்டில் சமையலுக்கு ஆள் இருக்கிறாங்க என்று சொல்ல முடியாமல் அவஸ்தைப் பட்டுப் போனாள் பாகீரதி..

அதுவரை விஸ்வநாதனின் வீட்டில் சமையலுக்கென்று ஆள் வைத்துக் கொண்டதில்லை.. பாகீரதிதான் சமைப்பாள்.. இதுவரை சமைத்துப் போட்டவள் இனிமேலும் சமைத்துப் போட மாட்டேனா என்று பாகீரதியினால் சொல்ல முடியவில்லை..

மருமகளுக்குச் சமைத்துப் போடும் மாமியார்கள் குறைவு.. பாகீரதி ஒரு அக்மார்க் மாமியார்..

# 3

இந்தப் பெண் வேண்டாமென்றுதான் தோன்றியது பாகீரதிக்கு.. அதை சமிக்ஞையால் கணவரிடம் தெரிவிக்கத் திரும்பியவள் திகைத்துப் போனாள்..

பெண் பார்க்க வந்திருந்த பாகீரதியின் செல்வப் புதல்வன் செல்வன் பூபாலன்.. செல்வி ஆனந்தியை விழி விலக்காமல் கடித்து உண்ணுவதைப் போல ஆசை பெருகப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் விழிகளில் மையல் சொட்டிக் கொண்டிருந்தது.. அதற்கு 'ஜொள்ளு' என்ற திருநாமமிட்டு மகனை மனதுக்குள் தாளித்துக் கொட்டினாள் பாகீரதி..

'பொண்ணுதான பாக்க வந்திருக்கோம்..? நிச்சயமா பண்ணிப்புட்டோம்..? இப்பவே இவன் பருகு, பருகுன்னு பாத்து ஜொள்ளு விட்டான்னா பொண்ணு வீட்டுக்காரங்க தலைக்கு மேலே ஏறி நிக்க மாட்டாங்களா..?'

அப்படித்தான் ஆனது.. நாள், கிழமையென்று வந்தாலும் அவர்கள் வீட்டுப் பெண்ணான ஆனந்தி துரும்பைக் கூடக் கிள்ளிப் போட மாட்டாள் என்று ஆனந்தியின் பிறந்த வீடு அறிவித்து விட்டது..

பிறகு என்ன கழுதைக்கு கல்யாணம் செய்து கொண்டு புகுந்த வீட்டிற்கு வரப் போகிறாள் என்ற எரிச்சல் மண்டினாலும், மகனின் ஆசைப் பார்வையை மனதில் கொண்டு பேசாமல் இருந்து விட்டாள் பாகீரதி..

வலது காலை எடுத்து வைத்து புகுந்த வீட்டில் பிரவேசித்தாள் ஆனந்தி.. கூடவே வந்து போன

பாட்டியர் கூட்டம் சமையலுக்கு ஆளை அமர்த்திவிட்டுத்தான் காரேறியது..

சமையலுக்கென வந்த அன்னக்கொடிக்கு சமையலைப் பற்றி அரிச்சுவடிகூடத் தெரியவில்லை.. பின் என்ன அலுவலுக்கு சமையல் அலுவலைப் பார்க்க வந்தாள் என்று பாகீரதிக்கு நெஞ்சுவலியே வந்து விட்டது..

அன்னம் வைக்கக் கூடத் தெரியாத அன்னக்கொடிக்கு சமையலைக் கற்றுத்தர முயன்று தோற்றுப் போனாள் பாகீரதி..

“இப்படிச் செய்யனும் அன்னகொடி..” என்று பாகீரதி சமையலைச் செய்து காண்பிக்க..

“அப்படியாம்மா..?” என்றபடி சோபாவில் சாய்ந்து அமர்ந்து சமையலைக் கவனிக்காமல் டிவியில் வரும் சீரியல்களைக் கவனித்துக் கொண்டிருப்பாள் அன்னக்கொடி.. மறக்காமல் பாகீரதி செய்து வைக்கும் சமையலை டிபன் கேரியரில் நிரப்பிக் கொண்டு போய் விடுவாள்.. மருமகளுக்குச் சமைத்துப் போடுவதா என்று கௌரவம் பார்த்த பாகீரதி சமையல்காரிக்குச் சமைத்துப் போடுவதைப் போல ஆகிவிட்டதில் இது வேலைக்கு ஆகாது என்று சமையல்காரியை நிறுத்தி விட்டுச் சுதந்திரமாக சமையலறையில் உலா வர ஆரம்பித்து விட்டாள் பாகீரதி..

மருமகளுக்கு மாமியார் சமைத்துப் போடுவதா என்ற மாமியாரின் கௌரவம் அடிக்கடி அவள் மனதில் தலை தூக்கும்தான்.. அப்போதெல்லாம் தலைவலி, காய்ச்சல் என்று பல்வேறு நோய்கள் அவளுக்கு கை கொடுக்க வந்து நிற்கும்..

“அம்மா.. அப்பா.. முடியலையே..” என்று அவள் கட்டிலில் சாய்ந்து விடுவாள்..

கரண்டியை கையில் பிடிக்கும் ஆனந்தி வஞ்சனையில்லாமல் தான் சமையலைச் செய்வாள்.. அவள் செய்து வைக்கும் சமையல்தான் வாயில் வைக்க முடியாமல் பாகிரதியைப் படுத்தி வைத்து படுக்கையிலிருந்து எழுப்பி விட்டுவிடும்..

“நீயேன் அலட்டிக்கற..? அதான் மருமகள் இருக்காள்ல.. நிம்மதியா ரெஸ்ட் எடு..” என்று சொல்வார் விஸ்வநாதன்..

வாயில் வைக்க முடியாத சமையலைச் சாப்பிட்டாலும் பரவாயில்லை.. மனைவியின் உடல் நலன் பாதிப்படையக் கூடாது என்ற அவரது அக்கறையில் நெகிழ்ந்து போய் விடுவாள் பாகீரதி.. மாமியார் என்ற நினைவு மாறி விஸ்வநாதனின் மனைவி, பூபாலன், பூர்ணிமாவின் அம்மா என்ற நினைவு வந்து கரண்டியை கையில் எடுத்து விடுவாள்..

ஆஷா பிறந்து அவள் பாட்டியான பின்பு தலைவலி காய்ச்சல் என்ற காரணங்களைக் காட்டி அவள் படுக்கையில் விழுவது குறைந்து விட்டது..

“பாகீ..” விஸ்வநாதனின் குரல் கேட்டதும்..

“அப்பா வந்துட்டார்.. உன் ஸ்கூட்டி என்ன ஆச்சுன்னு கேட்பார்.. நீ சொன்னாத்தான் நானும் சொல்ல முடியும்..”

மருமகளை மறந்து விட்டுப் பரபரத்தாள் பாகீரதி..

“அம்மா.. அது வந்து..” மென்று விழுங்கினாள் பூர்ணிமா..

“அதான் வந்துட்டேல்ல.. சொல்லும்மா..” அலுப்புடன் கெஞ்சினாள் பாகீரதி..

“வழியில் டயர் பஞ்சராகிருச்சும்மா.. மெக்கானிக் செட்டில விட்டுட்டு வந்திருக்கேன்..” பூர்ணிமாவின் விழிகளில் பயம் வந்தது.

“இதுக்கா இத்தனை பயம்..? நல்ல பொண்ணும்மா நீ..” மகளை கடிந்து கொண்டாள் பாகீரதி..

“இல்லேம்மா.. காலையில கிளம்பறப்ப நல்லாத்தான் இருந்தது.. சாயந்திரம்தான்..”

“விடு.. டயர் பஞ்சராகிறது சகஜம்தான்..”

பாகீரதி கணவருக்கு டிபன் காபி கொடுக்கப் போய் விட்டாள்.. பூர்ணிமாவின் சுவாசம் சீரானது.. அவள் மெதுவாக நழுவி மாடிக்குப் போகப் போனாள்..

‘நல்லவேளை.. அப்பாகிட்ட மாட்டலை..’

அவளது நிம்மதி சில வினாடிகள்தான் நீடித்தது..

“பூர்ணி..” விஸ்வநாதன் அழைத்து விட்டார்..

‘அப்பா..!’ பூர்ணிமாவின் நாக்கு புரள மறுத்தது..

பாகீரதி கண்டிப்பானவள்தான்.. அவளது தாய்ப்பாசம் எத்தகைய கண்டிப்பையும் மறக்கடிக்க வல்லது.. விஸ்வநாதன் அப்படியல்ல.. அவரது தந்தைப்பாசம் கண்டிப்பை உள்ளடக்கியது..

‘ஸ்கூட்டியைப் பத்திக் கேட்டா என்னத்தைச் சொல்றது..?’

கைகளைப் பிசைந்தபடி டைனிங் ஹாலுக்குப் போனாள் பூர்ணிமா.. அவளது விழிகளில் பயம் அப்பியிருந்தது..

சிறுவயதில் விஸ்வநாதனின் கிராமத்திருவிழாவிற்கு குடும்பத்துடன் அவர்கள் போயிருந்தார்கள்.. விஸ்வநாதனின் குடும்பம் ஊர்ப் பெரியதனக்காரக் குடும்பங்களில் ஒன்று என்பதால் கிராமத்தில் அவர்களுக்குத் தனிமரியாதை கிடைக்கும்.. சென்னை மகாக்கடலின் ஜனத்தொகையில் அடையாளமில்லாமல் கலந்து விட்ட விஸ்வநாதனுக்கு கிராமத்தில் கிடைக்கும் மரியாதையும், கௌரவமும் வேண்டியிருந்ததால் அவர் கிராமத்திலிருந்த தோப்பு, துரவுகளை விற்று விடாமல் கட்டிக் காத்து வந்தார்.. மேற்பார்வைக் கென்று ஒரு கணக்குப் பிள்ளையும், தோட்டத்துத் தோப்பு வீட்டில் குடியிருந்து விவசாயம் பண்ண கணவனும், மனைவியுமாக ஒரு குடும்பமும் விசுவாசத்துடன் வேலை பார்த்ததில் அவரது நிலம் பசுமை குறையாமல் செழிப்பாக விளைச்சலை வாரி வழங்கியது..

விஸ்வநாதன் நல்லவர்.. தாராள மனமுள்ளவர்.. நிலத்தில் வரும் வருமானத்தில் கணக்குப் பிள்ளைக்கும், தோப்பு வீட்டில் குடியிருந்து விவசாயம் பண்ணும் குடும்பத்திற்கும் கணக்குப் பார்க்காமல் சம்பளத்தை அள்ளிக் கொடுத்தார்.. மற்றவர்கள் கொடுக்கும் சம்பளத்தைவிட இரண்டுமடங்கு சம்பளம் அதிகமாகக் கிடைத்ததில் அவர்களும் இடம் மாறாமல் நிலைத்து நின்று விஸ்வநாதனுக்கு விசுவாசமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.. இன்னொன்றும் உள்ளது. அது நிலத்திற்கு உடையவர்கள் பக்கத்தில் நின்று அதட்டி வேலை வாங்கும் கோராமையில்லாமல் சுதந்திரமாக உழைக்க முடிகிறது என்பது..

வருடாவருடம் நடக்கும் ஊர்த் திருவிழாவுக்கு குடும்பத்துடன் போய் விடுவார் விஸ்வநாதன்.. அவரது பரந்த வீடும், தோட்டமும் சென்னையில் நினைத்தும் பார்க்க முடியாது என்பதினால் பதினைந்து நாள்களுக்கும் குறையாமல் குடும்பத்துடன் தங்கியிருப்பார்..

பச்சைப் பசேலென்ற தோட்டத்துக் காய்கறிகள்.. சமைத்துப் போடவும், வீட்டு வேலைக்கும் தற்காலிக சம்பளத்திற்கு சந்தோசமாக வந்து நிற்கும் வேலையாள்கள் என்று பாகிரதிக்கு அந்த இருவாரமும் ஆசுவாசமான நாள்களாக நகர்ந்து பலம் கொடுக்கும்..

சென்னையில் இருப்பதைப் போலச் சன்னக் கரையிட்ட புடவையும், குறைந்த அளவு நகைகளுமாக இருக்காமல் அகல பார்டரில் கெட்டி ஜரிகையிட்ட பட்டுப் புடவைகளும்.. கழுத்து, கை, காதுகளில் கனத்த நகைகளுமாக பெரிய வீட்டம்மாளின் தோரணையில் ஜொலி ஜொலிப்பாள் பாகீரதி.. பிள்ளைகளையும் அதுபோலவே அலங்கரித்து விடுவாள்..

பிடிக்காவிட்டாலும் பாகீரதியின் அதட்டலுக்குப் பயந்து மைனர் செயின், பிரேஸ்லெட் சகிதம் வலம் வருவான் பூபாலன்.. மகனுக்கே அப்படியெனும் போது மகளை சும்மாவா விட்டு விடுவாள்..?

நீண்ட தலைமுடியை இரட்டைப் பின்னலாகப் போட்டு, இருபக்கமும் பூ வழியுமாறு அழகாகப் பூச்சூடி.. கழுத்தில் கனத்த கல் டாலரில் தாமரைப் பூவில் மகாலட்சுமி அமர்ந்திருக்கும் செயினைப் போட்டு.. காதுகளில் கல் ஜிமிக்கியும்.. கைகளில் குழுங்கும் தங்க வளையல்களும்.. பட்டுப்பாவடை, சட்டையும்.. நெற்றியில் நீண்ட வடிவிலிருக்கும் திலகமுமாக

சாட்சாத் அந்த அம்மனே குழந்தை வடிவில் அருள் பாலிக்க வந்து விட்டதைப் போல இருப்பாள் பூர்ணிமா..

அப்படியொரு விழாநாளில் ஊரைச் சுற்றிப் பார்க்கத் தனித்துக் கிளம்பி விட்டாள் பூர்ணிமா.. பிள்ளைகளைத் தனியே விடமாட்டாள் பாகீரதி.. அவள் மதியத் தூக்கத்தில் கண்ணயர்ந்திருந்த சமயம் பார்த்து நழுவி விட்டாள் பூர்ணிமா.. ஊரைச் சுற்றி வரும் போது ஒரு வீட்டில் அழுகைச் சப்தம் கேட்டது.. என்னவென்று கேட்டால் வறுமையாம்.. திருவிழாவுக்கு புதுத்துணிகள் எடுக்க முடியவில்லையாம்.. நெல்லுச் சோறும், இட்லியும் கனவாக இருந்தனவாம்.. மனது கேட்காமல் கையிலிருந்த தங்க வளையல்களில் ஒன்றைக் கழட்டிக் கொடுத்து விட்டு வந்து விட்டாள் பூர்ணிமா..

அன்று கூட இந்த அளவுக்கு அவள் பயப்படவில்லை.. வளையல் எங்கேயென்று வீட்டில் கேட்டால் என்ன பதிலைச் சொல்வது என்று தடுமாறவில்லை.. தைரியமாக விஸ்வநாதனை எதிர்கொண்டாள்..

“பாவப்பா.. ஊரெல்லாம் சிரிச்சுக்கிட்டு இருக்கிறப்ப, அவங்க மட்டும் அழுதுகிட்டு இருந்தாங்க.. நம்ம வீட்டில டெய்லி சமைக்கிற சாதத்த ‘நெல்லுச் சோறு’ன்னு ஏக்கமாச் சொன்னாங்கப்பா.. இட்லிதான் அவங்களோட கனவு டிபனாம்.. மனசு கேட்கலைப்பா.. அதான்.. வளையலைக் கழட்டிக் கொடுத்துட்டு வந்துட்டேன்.” என்று தந்தையின் முகம் பார்த்துச் சொன்னாள்..

மகிழ்ந்து போய் விட்டார் விஸ்வநாதன்... மகளைத் தூக்கித் தோளில் உட்கார வைத்து..

“என் மக அன்னபூரணிடி..” என்று பெருமையுடன் கூவினார்..

அப்படி எதையும் தைரியமாக ஒப்புக் கொள்ளும் இரக்க மனம் கொண்ட பூர்ணிமாதான் இன்று ஸ்கூட்டியை பழுது பார்க்க மெக்கானிக் ஷெட்டில் விட்டிருக்கும் செய்தியைத் தந்தையிடம் சொல்ல அஞ்சி நடுங்குகிறாள்..

ஸ்கூட்டி ரிப்பேராவது சாதாரண விசயம்தான்.. அதைப் பழுது பார்க்க மெக்கானிக் ஷெட்டில் விடுவதில் தவறில்லைதான்.. இதை பாகீரதி பெரிதாக எடுத்துக் கொள்ளாததைப் போல, விஸ்வநாதனும் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார்தான்..

எந்த மெக்கானிக் ஷெட்டில் விட்டிருக்கிறாள் என்பதில்தான் விசயமே அடங்கியிருக்கிறது.. அதை விஸ்வநாதன் கேட்டு விட்டால் பூர்ணிமாவினால் பதில் சொல்ல முடியாது..

அந்த மெக்கானிக் ஷெட்டின் பெயர் ‘ஆரோ மெக்கானிக் ஷெட்..’ அதன் உரிமையாளன் ‘ரகுவரன்..’

அந்தக் குடும்பத்தினர்க்கு ரகுவரனைப் பற்றி நன்றாகவே தெரியும்.. அவன் அவர்களுக்கு அறிமுகமானவன்தான்.. அவர்களின் வீட்டிற்கு எதிரே பரந்து விரிந்து மிகப்பெரிய மைதானத்தில் எழும்பியுள்ள நட்சத்திர ஹோட்டலைப் போன்ற முகப்பைக் கொண்ட அடுக்கு மாடிக் குடியிருப்பில் ஒரு குடியிருப்பிற்கு சொந்தக்காரன் அவன்.. அந்தக் குடியிருப்புகளில் வசித்து வரும் அனைவரும் உயர்மட்டம் ரகுவரன் மட்டும் விதிவிலக்காக மெக்கானிக் ஷாப் வைத்திருந்தான்..

அதனால் மட்டும்தான் அவன் தனிப்பட்டுத் தெரிந்தானா..?

# 4

இல்லை.. அதனால் மட்டும் ரகுவரன் தனித்துத் தெரியவில்லை.. அவனது தார்மீகக் கோபம்தான் அவனைத் தனித்து இனம் பிரித்து நிறுத்தியிருந்தது..

“அவன் பக்கா ரவுடி சார்..”

விஸ்வநாதனுடன் பணி புரியும் பேங்க் ஆபிசர் ஒருவர் எதிர்த்த அபார்ட்மெண்டில் குடியிருந்தார்.. தினமும் வாக்கிங் போகும்போது விஸ்வநாதனிடம் ரகுவரன் செய்யும் அடாவடிகளைப் பற்றி ஒரு மூச்சு அழுது விட்டுத்தான் ஓய்வாராம்..

“நடு ரோட்டில புரட்டிப் புரட்டி அடிச்சிருக்கான்.. சாட்சி சொல்ல ஒரு பய வரல.. ரெண்டு தரம் அடையாள அணிவகுப்பில நிறுத்தி வைச்சேன்.. பயசிக்கலை.. சிக்கியிருந்தா சின்னா பின்னமாகியிருப்பான்..” மீசையை முறுக்கியபடி பூபாலன் உறுமுவான்..

“ஸ்ஸ்ஸ்.. எதுக்காக நீங்க டென்சனாகறீங்க..” ஆனந்தி அமைதிப் படுத்த முயல்வாள்..

“என் டீம் மேட் எதுத்த அபார்ட்மெண்டில இருக்கான் ஆனந்தி.. போலிஸாச்சேன்னு பயப்படாம திமிரா நடந்து போவானாம்..

அவனைப் பார்க்கிறப்ப எல்லாம் என் ரத்தம் கொதிக்குது ஆனந்தி..” என்பான் அவன்..

குடும்பத்தின் ஆண்மகன்களுக்குப் பிடிக்காமல் போன காரணத்தினாலேயே பாகீரதிக்கும், ஆனந்திக்கும் ரகுவரனைப் பிடிக்காமல் போய் விட்டது.. காய்கறி வண்டி வந்தால்கூட எதிர்த்த அபார்ட்மெண்டில் அவன் தலை தெரிகிறதா என்று பார்த்து விட்டுத்தான் காய் வாங்கப் போவார்கள்.. யதேச்சையாக அவன் தென்பட்டு விட்டால் கூடப் போதும்.. காயே வேண்டாமென்று சொல்லி இருப்பதை வைத்து அன்றைய தினத்தை ஒப்பேற்றி விடுவார்கள்..

ரகுவரன் எதைப் பற்றியும் அலட்டிக் கொள்ள மாட்டான்.. முரட்டு ஜீன்ஸீம், கலைந்த தலைமுடியுமாக நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையுமாக அந்த அபார்ட்மெண்ட் வாசிகளை முறைத்தபடி வந்து போவான்..

“காண்டெஸா கார் வைச்சிருக்கேன்.. எனக்குக் கேட்டைத் திறந்து விடாம பராக்குப் பார்த்துக்கிட்டு இருக்கிற வாட்ச்மேன் அவன் காரைக் கண்டா மட்டும் ஓடிப் போயி கேட்டைத் திறந்து விடறாண்டா மச்சி..”

பூபாலனிடம் அவனது நண்பன் புலம்பியதைக் கேட்டதும் அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்..

“ஏண்டா அப்படி..?”

“ஏன்னா இவன் தகுதி பார்க்காம வாட்ச்மேன் தோள்மேல கை போட்டுப் பேசிக்கிட்டு இருப்பாண்டா.. என்னதான் மெக்கானிக்கா இருந்தாலும் கோடிஸ்வரங்க குடியிருக்கிற அபார்ட்மெண்டில குடியிருக்கான்ங்கிற நினைப்பு வேணாமா..? எப்படித்தான் எங்க அபார்ட்மெண்டில இவனால பிளாட் வாங்க முடிஞ்சதோ.. பி.எம். டபிள்யூ காரை வைச்சிருக்காண்டா..”

“எப்படிப் பணம் வருது..?”

“தப்பான வழியில வரலை.. அப்படியிருந்தா இழுத்துப் போட்டுச் சாத்த ரீசன் கிடைக்குமேன்னு நானும் நோண்டிப் பார்த்துட்டேன்.. இல்லை.. அப்பன்காரன் திருப்பூர்ல பனியன் கம்பெனி வைச்சிருந்த கோடிஸ்வரனாம்.. பிறக்கிறப்பவே அம்மாவை முழுங்கினவனாம்.. இவன் ஸ்கூல்ல படிச்சுக்கிட்டு இருந்தப்ப அப்பன்காரனும் மாரடைப்பில மண்டையைப் போட்டுட்டானாம்.. சொந்தக்காரங்க சொத்தை வித்துப் பேங்கில் போட்டு விட்டாங்களாம்.. வட்டிப் பணத்தில மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படிச்சவன் வேலைக்குப் போகாம மெக்கானிக் ஷாப்பைத் திறந்து ஆட்டோ மொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் விக்கிற கடையொன்னை ஆரம்பிச்சுட்டானாம்.. தொழில் திறமையான வனாம்.. உதவிக்கு நாலு பேர்.. கடையைக்

கவனிச்சுக்க ஆள்கள்ன்னு சம்பளம் கொடுக்கிற முதலாளியாம்.. பியூச்சரில கார் தயாரிக்கிற கம்பெனியொன்னை ஆரம்பிக்கனும்ங்கிறதுதான் இவனோட லட்சியமாம்.. எந்த அளவுக்கு டேமேஜான காரைக் கொண்டு போனாலும் ‘ரீ ஸ்டோர்’ பண்ணிக் கொடுக்கறதில கில்லாடியாம்.. அப்புறம் பணம் குமியாம என்ன செய்யும்..?”

பொறாமையுடன் சொன்னான் பூபாலனின் நண்பன்..

இப்படிச் சக குடியிருப்புவாசிகளின் சகலவிதமான கோபங்களுக்கும், பொறாமைகளுக்கும் ஆளாகியிருக்கும் ரகுவரன் பூர்ணிமாவின் கடைக்கண் பார்வைக்கும் ஆளானது தனிக் கதை..

இயல்பாகவே காருண்ய மனம் கொண்ட பூர்ணிமாவிற்கும் எதிர்த்த அபார்ட்மெண்டில் ஒரு தோழி இருந்தாள்..

செமஸ்டர் சமயங்களில் சேர்ந்து படிக்க.. கல்லூரி போகாத நாள்களில் நோட்ஸ் எடுக்க.. விடுமுறை தினங்களில் அரட்டையடிக்க என்று பல்வேறு காரணங்களை முன்னிட்டு பூர்ணிமா எதிர்த்த அபார்ட்மெண்டிற்கு அடிக்கடி போய் வருவாள்..

அப்படிப் போய் வரும் தருணங்களில் எல்லாம் பாகீரதி அவளை எச்சரித்துத்தான் அனுப்பி வைப்பாள்..

“அந்த அபார்ட்மெண்டில ரவுடி ஒருத்தன் குடியிருக்காண்டி.. அவன் கண்ணில படாம போய் வரனும்.. புரிஞ்சதா..? அவன் தலையைக் கண்டாக்கூட ஓடி வந்திரனும்..”

எதற்காக ரகுவரனின் தலையைக் கண்டு ஓடிவர வேண்டுமென்று பூர்ணிமாவிற்குப் புரியவில்லை.. அவன் தலை கலைந்திருந்தால் கூடப் பார்க்க நன்றாகத்தானே இருக்கிறான் என்று அவள் மனம் ஜொள்ளியது.. ரகுவரனின் கண்களில் பூர்ணிமா படவில்லை.. பூர்ணிமாவின் கண்களில்தான் ரகுவரன் பட்டுத் தொலைத்தான்.. எதிரில் வரும் இளம் பெண்ணைக் கல்லையும் மண்ணையும் பார்ப்பதைப் போலப் பற்றற்று பார்த்துவிட்டு எனக்கென்ன என்று போகும் ரவுடியைப் பற்றி பூர்ணிமா ஆச்சரியப்பட்ட போது..

“நீன்னு இல்லை.. ஐஸ்வர்யா ராயே எதிரே வந்தாலும் அவன் அப்படித்தான் பார்ப்பான்..” என்று எரிச்சல் பட்டாள் பூர்ணிமாவின் தோழியான சுபா..

அவள் அலட்டல் கேஸ்.. அவளைக் கடந்து போகும் ஆண்கள் அவளைத் திரும்பிப் பார்த்து விட்டுப் போக வேண்டுமென்ற எண்ணம் கொண்டவள்.. அப்படிப் பார்க்கா விட்டால்

தன்னிடம் என்ன குறையென்று உண்ணாமல், உறங்காமல் கவலைப்பட்டு நொந்து நூலாகி விடுவாள்..

அப்படிப்பட்டவளை ரகுவரன் அதுவரைத் திரும்பியும் பார்த்ததில்லையாம்..

“மனுசனாடி அவன்..?” என்று வெகுண்டாள் சுபா..

“வாட்.. நான்சென்ஸ்..? நீ எதிர்க்க வந்தும் அவன் ஏறெடுத்தும் பார்க்கலையா..?” பூர்ணிமா வேண்டுமென்றே சுபாவுக்கு வெறியேற்றினாள்..

சுபா ரகுவரனை ஜடம், மரம் என பற்பல வார்த்தைகளில் திட்டித் தீர்த்து ஓய்ந்து போய் பிரிட்ஜில் இருந்த ஐஸ் வாட்டரைக் குடித்து வயிற்றெரிச்சலை சமனப்படுத்தினாள்..

‘இவன் கண்ணில பட்டா என்ன ஆகுமாம்..?’

பூர்ணிமாவிற்கு பாகீரதியின் மேல் கோபம் வரும்.. பெண்களிடம் ஒதுக்கம் காண்பிக்கும் ரகுவரனின் மீது மரியாதை தோன்றும்.. சுபாவைப் பார்க்கப் போன ஒருநாளில் மாடிப்படிகளில் ஒருவனை ரகுவரன் அடித்து நொறுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள் பூர்ணிமா..

“விட்டிரு.. விட்டிரு..”

அடிபட்டவன் ரத்தம் வழிந்தோடக் கையெடுத்துக் கும்பிட்டுக் கதறினான்.. ரகுவரன் விடவில்லை.. மற்ற பிளாட்வாசிகள் தத்தம்

வீடுகளின் கதவுகளை அடைத்துக் கொண்டு மறைவாக நின்று வேடிக்கை பார்த்தார்கள்.. ரகுவரனைத் தடுக்க எவரும் முன்வரவில்லை..

எதிர்பாராமல் வந்து விட்ட பூர்ணிமா கண்களில் பயத்தோடு நடுங்கி நின்று விட்டாள்... அப்போதுதான் முதன் முதலாக அவளை நேருக்கு நேராகப் பார்த்தான் ரகுவரன்.. அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த பூர்ணிமாவைக் கண்டதும் அவன் விழிகளில் மின்னல் போல ஏதோ ஒன்று வந்து போனது.. லேசாக வழிவிட்டு..

“சீக்கிரமாப் போயிருங்க..” என்றான்..

அவன்மீது பட்டு விடாமல் ஒதுங்க முயன்றாள் பூர்ணிமா.. அதற்குள் அவன் சுவரோடு சுவராக பல்லி போல ஒட்டிக் கொண்டான்.. பூர்ணிமா அதிசயப் பட்டுப் போனாள்.. அவனை விழி விரியப் பார்த்தபடி அவள் கடந்து போனதில் அவன் பார்வையில் சுவராஸ்யம் வந்தது.. அவள் கடந்து போகும் வரை அவன் நகரவும் இல்லை.. காலுக்குக் கீழ் மிதித்துக் கொண்டிருந்தவனை விடவும் இல்லை..

இதுபோன்ற அடிதடிகளை பூர்ணிமா பார்த்ததே இல்லை.. பூபாலன் போலிஸ் ஆபிசர் என்றாலும் உத்தியோகக் கதைகளை வீட்டில் பேச மாட்டான்.. பழக்கமில்லாத அடிதடியைப் பார்த்து விட்ட மருட்சியை அவள் விழிகளில் பார்த்து விட்ட ரகுவரனின் விழிகளில் படர்ந்த

மென்மையில் பூர்ணிமாவின் வியப்பு அதிகமானது..

‘இவன் இப்படி ஷாப்டாக்கூடப் பார்ப்பானா..?’

அவன் விழிகளில் தெரிந்த மென்மைக்கும் அவனது காலடியில் மிதிபட்டுக் கொண்டிருந்தவனின் முகத்தில் வழிந்த ரத்தத்திற்கும் கொஞ்சம் கூட பொருந்தி வரவில்லை.. அந்த முரண்பாடை யோசித்தபடி நகர்ந்தவளை..

“உள்ளே வந்து தொலைடி..” என்று வீட்டுக்குள் இழுத்துக் கொண்டாள் சுபா..

“என்னவாம்டி.. இப்படி அடிச்சு நொறுக்கிறான்..?”

பூர்ணிமாகேட்ட கேள்விக்கு சுபா அளித்த பதிலில் ரகுவரனைப் பற்றிய பிம்பம் பூர்ணிமாவின் மனதில் உயர்ந்து எழுந்து நின்று பதிவானது..

“அடிச்சு நொறுக்காம என்ன செய்வான்..? இந்தப் பொறுக்கி வீட்டில பெண்டாட்டி பிரசவத்துக்காக தாய்வீட்டுக்குப் போயிருக்கிறா.. போன மகராசி ஹஸ்பெண்டைப் பத்தின கவலையில வேலைக்காரப் பெண்ணை நிப்பாட்டாம தினமும் வேலைக்கு வந்து போகனும்ன்னு ஆர்டர் போட்டுட்டுப் போயிட்டா.. அந்தப் பெண்ணும் பாவம்..

*சம்பளம் கொடுக்கிற மகராசி சொல்லிட்டாளேன்னு வேலைக்கு வந்து போயிருக்கு.. இந்த நாய் அந்தப் பெண்ணை ரேப் பண்ணப் பார்த்திருக்காண்டி..”*

*“காட்..” பூர்ணிமா அதிர்ந்து விட்டாள்..*

*அந்த வேலைக்காரப் பெண்ணை அவள் பார்த்திருக்கிறாள்.. பதினான்கு வயதுகூட நிரம்பாத சிறுமி அவள்.. பள்ளிக்குச் சென்று கொண்டே வீட்டு வேலை பார்க்கிறாள்.. வீட்டு வேலை செய்வதில் கணிசமான சம்பளம் கிடைக்கிறது.. வாஷிங் மெஷின், மிக்ஸி, கிரைண்டர் போன்ற உபகரணங்களால் வேலையும் குறைவு என்பதால் பள்ளிக்குப் போகும் நேரம் போக காலை, மாலை இருவேளையும் அந்த அபார்ட்மெண்டில் இருக்கும் பிளாட்டுகளில் வீட்டு வேலைகளைச் செய்வாள்..*

*“சம்பள பணத்தை மேற்படிப்புக்கு சேர்த்து வைக்கிறாளாம்.. இவளோட தம்பி பீச்சில சுண்டல் விற்பானாம்.. அம்மா வேறொரு அபார்ட்மெண்டை வீட்டு வேலைக்குன்னு குத்தகைக்கு எடுத்திருக்காம்.. அப்பா ஆட்டோ டிரைவர்.. உழைப்பாளி வர்க்கம்டி..” என்பாள் சுபா..*

*‘அந்தப் பெண்ணையா இவன் சூறையாட நினைத்தான்..?’*

பூர்ணிமாவால் தாங்க முடியவில்லை.. அந்தப் பொறுக்கியை இவள் பார்த்திருக்கிறாள்.. சொந்தமாக டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வைத்திருக்கிறான் என்று சுபா சொல்லியிருக்கிறாள்.. மடிப்புக் கலையாத உடை, கண்ணியமான தோற்றம் என்று ஜென்டில் மேனுக்கே உரிய சாமுத்ரிகா லட்சணங்களுடன் இருப்பான்..

'அவனா இப்படி..?'

"இந்தப் பெண் கத்தின கத்தலை எதிர் பிளாட்டில இருந்த இவன் கேட்டிருக்கான்.. மத்தவங்களுக்கும் கேட்டிருக்கலாம்.. யாரும் ஏன்னு கேட்கலை.. இவன் கதவை உடைச்சு உள்ளே போய் அந்த நாயைப் புரட்டி எடுத்து இழுத்துட்டு வந்து மாடிப்படியில போட்டு மிதிமிதின்னு மிதிச்சுக்கிட்டு இருக்கான்.. அவன் வீட்டுக்குள்ளயே விட்டு அடிச்சா மத்தவங்களுக்குத் தெரியாது.. இவன் என் வீட்டுக்குள்ள வந்து அடிக்கிறான்னு அந்த நாய் சொன்னாலும் சொல்லுமில்ல.. அதுக்குத்தான் மாடிப்படி மிதி.."

சுபா விவரிக்க விவரிக்க சரித்திரக் கதாநாயகனைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கும் ஆவல் பூர்ணிமாவின் விழிகளில் மிளிர்ந்தது..

# 5

“இதில இப்படி வேற இருக்கா..?”

“ம்ம்ம்.. நிறைய இருக்கு.. இத்தனை நாள் எப்படியோ.. இன்னைக்கு இவனை நான் அட்மைர் பண்றேன்டி.. வாட் எ கிரேட் மேன்..! உள்ளே போனதும் முதல் வேலையா அந்தப் பெண்ணை வெளியே அனுப்பிட்டான்.. அதுக்குப் பின்னாலதான் அந்த நாயைத் துவைச்சு எடுத்துத் தோரணம் கட்டிக்கிட்டிருக்கான்.. பாவம்டி அந்தப் பொண்ணு... நம்ம வீடுகள்ல வேலை செய்யறது பாதுகாப்புன்னு தானே வீட்டு வேலை செய்ய வருது..? வீடுகள்லயே அதுக்குப் பாதுகாப்பு கிடைக்கலேன்னா மத்த இடங்களில எப்படிடீ கிடைக்கும்..?”

பூர்ணிமாவின் கண்கள் கலங்கி விட்டன.. அடிபட்டவன் ரகுவரனுக்கு எதிராக போலிஸ் கம்ப்ளெயிண்ட் கொடுக்க மறுத்து விட்டான் என்று சொன்னான்.. பூபாலன்..

“எப்படிக் கொடுப்பான்..?” என்று பாகிரதி பல்லைக் கடிக்க..

“கம்ப்ளெயிண்டும் கொடுக்கச் சொல்வீங்களா..?” என்று ஆனந்தி கணவனிடம் சண்டைக்குப் போனாள்..

“நான் கொடுக்கச் சொல்லலைடி.. என் பிரண்ட் கொடுக்கச் சொல்லியிருக்கான்..” பூபாலனின் குரல் இறங்கிவிட்டது..

“அது தப்புன்னு நீங்க எடுத்துச் சொல்லியிருக்கனும்..”

மனைவியின் குற்றச்சாட்டிற்கு மறுபேச்சைப் பேச பூபாலன் யத்தனிக்கவில்லை.. மாறாக..

“இனிச் சொல்லிடறேன்டி..” என்று ஆனந்தியைச் சமாதானம் செய்தான்..

“பாவம் அந்தப் பொண்ணு.. பச்சை மண்ணு.. அதுகிட்டப் போயி இந்த நாய் வாலை ஆட்டியிருக்குது.. ச்சே..”

“இந்த விசயத்தில அபார்ட்மெண்டில இருக்கிறவங்க அந்த ரௌடிக்குத்தான் சப்போர்ட் பண்றாங்க.. அடி வாங்கினவன் ஆஸ்பத்திரியில கிடக்கிறான்.. பழகினவங்க கூட அவன் என்ன ஆனான்னு பார்க்கப் போகலை.. என்ன ஆச்சுன்னு விசாரிக்கப் போன போலிஸ்கிட்ட மாடிப்படியில தடுக்கி விழுந்துட்டேன்னு கதை சொன்னானாம்.. லிப்ட் இருக்கிறப்ப ஏன் மாடிப்படியை யூஸ் பண்ணினீங்கன்னு போலிஸ் குடைஞ்சுச்சாம்... அது என்னோட இஷ்டம்ன்னு எரிஞ்சு விழுந்தானாம்..”

“கம்ப்ளெயிண்ட் கொடுக்கலைன்னா அடியோட போயிடும்.. கம்ப்ளெயிண்ட்

கொடுத்தா தூக்கி உள்ளே போட்டிருவாங்கல்ல.. அந்த பயம்தான்..”

தான் போலிஸ் ஆபிசரின் மனைவியென்பதை நிரூபணம் செய்தாள் ஆனந்தி.. பெருமிதமாக சிரித்துக் கொண்டான் பூபாலன்.. அதற்குப் பின்னாலும் ரகுவரனிடமிருந்து மற்றவர்கள் தள்ளித்தான் நின்றார்கள்..

“நமக்கெதுக்கு வம்புன்னு கதவுக்குப் பின்னாலே ஒளிஞ்சுக்கிறவங்க மத்தியில எது வந்தாலும் எதிர்த்து நிக்கிறவன் வித்தியாசமாத்தான் தெரிவாண்டி.. இதுகளால அவன்கூட ஒட்ட முடியாது..” சுபா விளக்கம் சொன்னாள்..

பூர்ணிமாவின் மனதில் இனம் விளங்காத ஒட்டுதல் உருவானது.. ரகுவரன் யாரோ எவரோ என்று நினைக்கத் தோன்றாமல் ஒரு பற்றுதல் ஏற்பட்டது.. சுபாவைப் பார்க்கப் போகும் தருணங்களில் அவன் எதிர்பட வேண்டுமே என்ற வேண்டுதல் வந்தது.. வேண்டுதல் நிறைவேறி அவனை எதிரே பார்த்து விட்டால் பதட்டப்பட்டுப் போவாள் பூர்ணிமா.. மனதின் எதிர்பார்ப்புக்கும் உடலின் பதட்டத்திற்கும் இடையில் உள்ள மாறுபாட்டைக் குறித்து நிறைய முறை யோசனை செய்து விட்டாள்.. எதற்காக அந்த எதிர்பார்ப்பு, எதற்காக அந்தப் பதட்டம் என்று இரண்டிற்குமான

காரணம் விளங்கவேயில்லை.. அவனைக் கண்டு விட்டால் மட்டும் மனம் குறுகுறுக்கும்..

இவள் பதட்டப்பட்டு பார்த்தபடி கடந்து போவாள்.. இவளை மென்மையாகப் பார்த்தபடி அவன் கடந்து போவான்.. நின்று பேச மாட்டான்.. பிரத்யேகமாக பார்க்க மாட்டான்.. ஆனால் இவளைப் பார்த்து விட்டால் அந்த நொடியில் அவன் பார்வையில் ஓர் லயிப்பு வரும்.. பூ மலரும்.. மென்மை விரியும்.. நேர் கொண்ட பார்வை இமைக்கவே இமைக்காது.. வைத்த பார்வையை விலக்காமல் அவளையே பார்த்தபடி போய் விடுவான்..

அவன் கடந்து போகும் வரை இருக்கும் பரபரப்பு அவன் கடந்து போனதும் மறைந்து போக ஓர்விதமான வெறுமையுணர்வு பூர்ணிமாவின் மனதை ஆக்ரமிக்கும்.. உலகமே பிளாக் அண்ட் வொயிட் படம் போல வண்ணமில்லாமல் தோன்றி வைக்கும்.. சுபாவைப் பார்க்கப் போவதாக பெயர் பண்ணிப் போனவள் அவளைப் பார்க்காமலே திரும்பி விடுவாள்..

“இப்பத்தானே போன..?” என்று பாகீரதி ஆச்சரியப்பட்டால்..

“சுபா வீட்டில் இல்லைம்மா..” என்று சொல்லி விடுவாள்..

“அப்படியா..?” என்று பாகீரதி தலையாட்டும் போது..

“இப்பத்தானே அவளைப் பார்த்தேன்..? அயர்ன் பண்ணின டிரஸ்ஸை வாங்கிக்கிட்டுப் போனாளே..” என்று ஆனந்தி மாட்டி விட்ட சமயங்களும் வாய்த்திருக்கின்றன..

“நான் போனப்ப இல்லையே.. என்னவா இருக்கும்..?” என்று எதிர்கேள்வி கேட்டு அந்தச் சமயங்களைக் கடந்து விடுவாள் பூர்ணிமா..

இப்படி ஆபத்பாந்தவன், அனாதைரட்சகன் என்று அவள் மனதில் பூப்போட்டு கொண்டாடிக் கொண்டிருந்த ரகுவரனின் ஈரமனதை அவள் அறியும் நாள் ஒன்று வந்து நின்றது.

கொட்டும் மழையிலும் குடை பிடித்து சுபாவைப் பார்க்க அவள் போன ஓர் மழை நாளுக்கு ‘கம்பைன் ஸ்டடி..’ என்று அவள் வீட்டில் பெயர் சூட்டப் பட்டிருந்தது.. அடாது மழை பெய்தாலும் விடாது ரகுவரனைப் பார்த்தே தீர வேண்டுமென்று பூர்ணிமாவின் மனது அடம் பிடித்ததுதான் காரணம் என்று அவளது மனதுக்கு மட்டும்தான் தெரியும்..

மழைச்சாரல் குடை நனைத்து தெறித்து அவள் உடல் நனைக்க.. அபார்ட்மெண்டின் வாசலை அவள் கடந்தபோது ரகுவரன் வாட்ச் மேனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டிருந்தான்..

‘இன்னைக்கு வாட்ச்மேனா..? ஆனா வாட்ச்மேன் அண்ணா நல்லவராச்சே.. தப்புத்

தண்டா பண்ணமாட்டாரே..' குழப்பத்துடன் நின்று விட்டாள் பூர்ணிமா..

அவளைப் பார்த்தவனின் விழிகளில் வழக்கமான பூ மலர்ந்தது.. அவளைப் பார்த்து..

"கார்க் கதவைத் திறந்து விடுங்க.. இவரை பின்சீட்டில் படுக்க வைக்கணும்.." என்றான் அவன்..

அவளுடன் அவன் பேசியதில் ஆனந்தம் பொங்கியது.. பூர்ணிமாவுக்கு.. அவசரமாக கார்க்கதவை திறந்து விட்டவள் மழையைப் பார்த்தபடி..

"வாட்ச்மேன் அண்ணா என்ன பண்ணினார்..?" என்று கேட்டாள்..

"என்கிட்டக் கேட்கறிங்களா.. மழைகிட்டக் கேட்கறிங்களா..? ம்ம்ம்..?" அவன் புருவங்களை உயர்த்தினான்..

அந்த மழைநாளின் அந்தத் தருணத்தில்தான் மயங்கிப் போனாள் பூர்ணிமா.. அவன் புருவங்களை உயர்த்திய அழகில் சொக்கிப் போனாள்.. அந்த நொடிகளை மறக்க முடியாதென்று அவளுக்குத் தோன்றியது.. அவள் மனம் கவர்ந்தவன் அவளிடம் பேசிவிட்டான்.. அவளைப் பேச வைத்து விட்டான்.. அத்துடனும் நில்லாமல் கேலி பேசுகிறான்.. பாவனை செய்கிறான்..

மலர் சொரிந்த அந்த நொடிகளை சேகரித்து மனதுக்குள் பத்திரப் படுத்திக் கொண்டாள் பூர்ணிமா.. இவை அரிதானவை.. அடிக்கடி கிடைக்காதவை.. கிடைத்திருக்கும் நொடிகளைச் சிந்தாமல் சிதறாமல் மனப் பெட்டகத்தில் பூட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது..

“பதில் சொல்ல மாட்டிங்களா..?”

மலைத்து நின்றவளிடம் மறுபடியும் புருவங்களை உயர்த்தி வீழ்த்தினான் ரகுவரன்..

‘இப்படி அசத்தினால் எப்படிப் பதில் சொல்வதாம்..?’ பூர்ணிமா தவித்துப் போனாள்..

அவளது தவிப்பில் அவன் முகம் வியப்பைப் பூசியது.. அவளது தளிருடலின் நடுக்கத்தை கூர்ந்து பார்த்தவன் மென்மையாகச் சொன்னான்..

“இப்படி பயப்படறிங்களே.. பயம்கூட பெண்களுக்கு அழகுதான்ங்கிறதை உங்களைப் பார்த்த பின்னால்தான் தெரிஞ்சுக்கிட்டேன்.. அச்சம், மடம், நாணம், பயிர்ப்புன்னு நால்வகை குணங்களும் உங்ககிட்ட நிறைஞ்சிருக்கு..”

பூர்ணிமாவின் தொண்டை வறண்டு விட்டது.. இதுபோல எல்லாம் அவன் பேசக்கூடும் என்று அவள் நினைத்தும் பார்த்த தில்லை.. பழக்கமில்லாத பேச்சுக்களில் அவளுக்குள் சுகமான ஓர் நடுக்கம் உண்டானது..

“ஓகே.. நீங்க பேச வேணாம்.. கஷ்டப் பட்டுக்காதீங்க.. நீங்க திணறுகிறதைப் பார்க்க எனக்குத் தாங்கலை.. வாட்ச் மேன் என்ன பண்ணினார்ன்னு தானே கேட்டிங்க..? இவர் பாவம்.. அப்புரணி.. ஏதும் பண்ணலை.. காய்ச்சல்தான் இவரை ஒரு வழியாக்கிக்கிட்டு இருக்கு..”

அவள் முகத்தையே பார்த்தபடி ரகுவரன் சொன்னான்.. பூர்ணிமா பதறிப் போனாள்..

“அச்சச்சோ..! வாட்ச் மேன் அண்ணாவுக்கு காய்ச்சலா..?”

காரின் பின்சீட்டில் படுக்க வைக்கப் பட்டிருந்த வாட்ச்மேனின் நெற்றியில் கைவிரல்களை வைத்துப் பார்த்தாள்..

“கொதிக்குதே..” கவலையுடன் சொன்னாள்..

வாட்ச்மேன்தானே என்று கௌரவம் பார்க்காமல் தன் வீட்டு மனிதர்கள் போல நெற்றியில் விரல் வைத்துப் பார்த்த அவளது மனித நேயம் ரகுவரனை ஈர்த்தது..

“இந்த ஏரியாவில குடியிருக்கிறவங்கதான் நீங்கன்னு என்னால நம்ப முடியலைங்க..” என்றான்..

“ஏனாம்..?” என்றாள் அவள் குழந்தை போல..

அந்தக் குழந்தைத்தனத்தில் வசீகரிக்கப் பட்டவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்.. அந்தப்

பார்வையில் தடுமாறியவளின் பெண்மை குணம் அவனை அசத்தியது..

“ஏன்னா.. இந்த ஏரியா வைஹ கிளாஸ் சொசைட்டி மக்கள் வாழ்கிற ஏரியாவாச்சே.. இவங்கதான் மனிதாபிமானம்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிறாங்களே..” கோபத்துடன் சொன்னான் ரகுவரன்..

“எல்லோரையும் அப்படிச் சொல்லிறக்கூடாது.. நல்லவங்க நிறையப்பேர் இருக்காங்க.. ஏன்.. நீங்ககூட இந்த ஏரியாவில இருக்கிறவர்தான்.. மனிதாபிமானம்ன்னா கிலோ என்ன விலைன்னா கேக்கறிங்க..?” ரோசத்துடன் கேட்டாள் பூர்ணிமா..

சாதுர்யமாக அவள் மடக்கி விட்டதில் மெச்சுதலாக புருவங்களை உயர்த்தி..

“பரவாயில்லையே... நெத்தியடியாய்த்தான் பதில் சொல்றிங்க..” என்று பாராட்டினான் ரகுவரன்..

“அதெல்லாம் இல்லை..” பூர்ணிமாவுக்கு வெட்கம் வந்து விட்டது..

வெட்கத்துடன் அவள் நிலம் பார்த்ததை ரசித்தான் ரகுவரன்.. பெண்மையின் மிளிர்வுடன் கூடிய அவளது அழகில் அவன் மனம் லயித்தது..

காய்ச்சல்கார வாட்ச்மேனை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் போனவனை

நிறுத்தி வைத்து விட்டது போல குற்ற உணர்வு பூர்ணிமாவின் மனதில் எழுந்தது..

“காய்ச்சல்ன்னா இந்த அண்ணா லீவ் போட்டிருக்கலாமே..” மனம் தாங்காமல் சொன்னாள்..

“போட்டிருக்கலாம்தான்.. லீவ் போட்டா சம்பளம் பிடிப்பாங்களே.. ஒருநாள், ரெண்டு நாள் சம்பளம் குறைஞ்சா என்ன ஆகிறதுங்கிற பயமா இருக்கலாம்..”

“அட்லீஸ்ட் டேப்லெட்டாவது போட்டிருக்கலாம்..”

“டேப்லெட் போட்டு என்ன பண்ண..? ஒவ்வொரு காரா வருகிறப்ப ஓடிப் போய் கேட்டைத் திறந்து மூடிவிடனுமே.. அதைப்போல கார் வெளியே போறப்பவும் கேட்டைத் திறந்து மூடி விடனும்.. குடை பிடித்திருந்தாலும் மழைத்தண்ணியில கால் நனையாதா..? காய்ச்சல்கார உடம்புக்கு ஈரம் சரிப்படுமா..?”

வாட்மேனின் பணியில் இவ்வளவு இருக்கிறதா என்று அயர்ந்து போனாள் பூர்ணிமா..

‘இது தெரியாம கேட்டுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக் கிறவனுக்கு என்ன வேலைன்னு நினைச்சோமே..’

“ஓடி ஓடி கேட்டைத் திறந்து மூடி உழைச்சதில உடம்பும் டயர்டாகிருச்சு.. ஓய்வில்லாம மழையில நனைஞ்சதில காய்ச்சலும் அதிகமாகிருச்சு.. இப்ப

உடனடியா ஹாஸ்பிடலில அட்மிட் பண்ணியாகனும்..”

ஏதோ சொந்தக்காரனுக்குக் காய்ச்சல் வந்து விட்டதைப் போலக் கவலைப்பட்டான் ரகுவரன்.. இந்த அக்கறை ஏன் மற்றவர்களுக்கு இல்லாமல் போனது என்று விசனப் பட்டாள்.. பூர்ணிமா.. மனித நேயத்திற்குப் பஞ்சம் வந்து விட்டால் எப்படித்தான் இவ்வுலகில் வாழ்வது..?

பூர்ணிமா நின்று கொண்டிருக்கிறாளே என்று ரகுவரனும் தயங்கி நின்றதில் பூர்ணிமா தலையை அசைத்தாள்.. அவள் விடை கொடுத்தபாணியில் ரகுவரனின் முகம் மலர்ந்து விட்டது..

“வரட்டுமா..?” என்ற கேள்வியுடன் அவன் காரைக் கிளப்பியதில் பூர்ணிமாவின் முகம் மலர்ந்து விட்டது.

# 6

**கொட்டும்** மழையில் குடை பிடித்து சுபாவைப் பார்க்கப் போனதற்கு தக்க பலன் கிடைத்து விட்டதில் அக மகிழ்ந்து போனாள் பூர்ணிமா.. ரகுவரனைப் பார்ப்பதே குதிரைக் கொம்பு.. பேசுவதை அவள் நினைத்தும் பார்த்ததில்லை.. அவனைப் பார்த்ததுடன் பேசியும் விட்டதில் அவளுக்குள் பொங்கிய ஆனந்தத்திற்கு அளவேயில்லை..

அப்போதிருந்த மனநிலையில் நடந்த நிகழ்வுகளை அசை போட்டு நினைத்துப் பார்க்க அவளுக்கு தனிமை தேவைப் பட்டதில் சுபாவின் வீட்டிற்குப் போகாமல் திரும்ப முற்பட்டாள்.. அதற்கு விடாமல் சுபா அங்கு வந்து விட்டாள்.. வந்தவள் பூர்ணிமாவைப் பார்த்ததும் திகைப்புடன்..

"என்னடி இங்கே நிற்கிற..?" என்று கேட்டாள்..

"ஹி.. ஹி.. உன்னைத்தான் பார்க்க வந்தேன்.." என்று தட்டுத் தடுமாறினாள் பூர்ணிமா..

என்னவோ உன்னைத்தான் நானறிவேன், மன்னவரை யாரறிவார் என்ற ரீதியில் அவள் தடுமாறிய தடுமாற்றத்தில் சுபாவின் விழிகளில் சந்தேகம் வந்து அமர்ந்தது..

“உன்கிட்ட எதுவோ சரியில்லைன்னு என் மனசுக்குள்ள ஒரு பட்சி கூவுதே..” என்றபடி பூர்ணிமாவை பாதாதிகேசம் முதல் பார்வையில் அளந்தாள்..

“போடி.. உனக்கும் ஒரு வேலையில்லை.. உன் பட்ஷிக்கும் வேற வேலையில்லை.. போயும் போயும் அந்தப் பட்ஷிக்கு கூடு கூட்ட உன் மனசுதானா கிடைச்சது..?”

கோபம் போலக் காட்டியபடி எஸ்ஸாக முயன்றாள் பூர்ணிமா..

“அந்தக் கதையே வேணாம்.. என்னைப் பார்க்கவந்தவ மாடிக்கு வராம கீழே மழையில ஏன் உலாத்தற..?” கறாராகக் கேள்வி கேட்டு அவளைப் போகவிடாமல் தடுத்து நிறுத்தினாள் சுபா..

“உன் பிளாட் மாடியிலதானடி இருக்கு..?”

“அதைத்தாண்டி நானும் கேட்கிறேன்.. கிரௌவுண்டு புளோரில இருந்தா நீ கீழே நிக்கிறதில ஒரு அர்த்தமிருக்கு.. மாடியில இருக்கிற பிளாட்டுக்கு வந்தவளுக்கு கீழே என்ன வேலை..?”

“ஒரு வேலையுமில்ல.. மாடி பிளாட்டுக்கு பறந்து வர முடியாதில்ல.. அதனாலதான் கீழே நிக்கிறேன்..”

“எல்லாத்துக்கும் ஒரு ஆன்சர் வைச்சிருப்பியே..”

அலுத்துக் கொண்ட சுபா சுற்று முற்றும் பார்த்தாள்..

"யாரைடி தேடற..?" என்றாள் பூர்ணிமா..

"இங்கே உட்கார்ந்திருந்த வாட்ச்மேனை எங்கேடி காணோம்..?"

"ம்ம்ம்.. குருவி தூக்கிட்டுப் போயிருக்கும்.."

"அவருக்கு இருக்கிற ஸ்டெர்ன்த்துக்கு குருவி தூக்கிட்டுப் போனாலும் ஆச்சரியப்படறதுக்கில்லை.. படு வீக்கான மனுசன்.."

"தெரிஞ்சாச்சரி.. அவரை எதுக்கு நீ தேடற..?"

எரிச்சலுடன் கேள்வி கேட்ட பூர்ணிமாவை ஏற இறங்கப் பார்த்தாள் சுபா.. அவள் பார்வையில எச்சரிக்கையான பூர்ணிமா..

"எதுக்குடி இப்படிப் பார்த்து வைக்கிற..?" என்று பம்மினாள்..

"ம்ம்.. எங்க அபார்ட்மென்ட் வாட்ச் மேனை நான் தேடறேன்.. நீ எதுக்கு கொஸ்டின் பண்ற..?"

சுபாவின் பதில் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் திருதிருத்தாள் பூர்ணிமா..

"என்ன..?" என்ற சுபாவின் 'என்ன'வில் பல கேள்விகள் தொக்கி நின்றன..

"ஒன்னுமில்லையே.. ஒன்னுமே இல்லைடி சுபா.."

என் பாதர் ஷெல்பில் இல்லை என்ற கதையாக மழுப்பினாள் பூர்ணிமா.. அந்த மழுப்பலே அவளைக் காட்டிக் கொடுத்து சுபாவிடம் அகப்பட வைத்தது..

"நீ எப்ப வந்த..?" சுபா கேள்விக் கணைகளை தொடுக்க ஆரம்பித்தாள்..

"இப்பத்தான்.."

"இப்பத்தான்னா..?"

"இப்பத்தான்னா இப்பத்தான் சுபா.."

"குத்து மதிப்பா நேரத்தைச் சொல்லு.."

"யாரைக் குத்தற மதிப்பு சுபா..?"

"உன்னைக் குத்தற மதிப்புன்னு சொல்ல மாட்டேங்கிற தைரியம்தானே..? அண்ணன் டி.எஸ்பிங்கிற தெனாவெட்டு..?"

"ஒரு வெட்டும் இல்லை.. ஆளை விடு.."

"தப்பிச்சுப் போகலாம்ன்னு பார்க்கறியா..? அதுதான் நடக்காது.. நானும் உன்னை வாட்ச் பண்ணிக்கிட்டுத்தாண்டி இருக்கேன்.. ஒரு மார்க்கமாத்தான் இருக்க.."

"இந்த மார்க்கமெல்லாம் எனக்குத் தெரியாது.."

"யார்கிட்டக் கதை விடற..?"

"உன்கிட்டக் கதை விட்டுட்டாலும்.. ம்ஹீம்.. கேட்டுட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்ப.."

தோழிகள் இருவரும் வழக்கடித்துக் கொண்டிருந்த போது அந்த அபார்ட்மெண்டில் குடியிருந்தவர்களில் ஒருவரின் கார் கேட்டுக்கு வெளியே வந்து நின்றது.. காரை ஓட்டி வந்தவர் காரை விட்டு இறங்காமல் ஹாரனை அடித்த சப்தத்தில் தோழிகள் இருவரும் சண்டையை நிறுத்தி விட்டுக் காரைத் திரும்பிப் பார்த்தார்கள்..

"எதுக்குடி இப்படி சவுண்டு கொடுக்கிறாரு.." பூர்ணிமா முகத்தைச் சுளித்தாள்..

"கேட் மூடியிருந்தா ஹாரன் சவுண்டைக் கொடுக்காம என்ன பண்ணுவாராம்.. இந்த வாட்ச்மேன் கேட்டைத் திறந்துவிட வராம எங்கே போனார்...?" சுபா எரிச்சலுடன் சொன்னாள்..

'ஹாஸ்பிடலுக்குப் போயிருக்கிறார்..' என்ற வார்த்தைகள் பூர்ணிமாவின் வாய் வரைக்கும் வந்து விட்டன..

அதைச் சொன்னால் எதிர் கொள்ளப் போகும் கேள்விகளைப் பற்றிய பயத்தில் சொல்லாமல் விட்டு விட்டாள்.. அது அவள் வசிக்கும் குடியிருப்பல்ல.. அந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் ஒன்றில் அவளது தோழிதான் வசிக்கிறாள்.. பூர்ணிமா எதிர் வீட்டில் இருப்பவள்.. இந்தக் குடியிருப்பின் வாட்ச்மேனைப் பற்றி அவள் கருத்துச் சொல்ல முடியாது..

"பால்பாக்கெட் காலி.. கொட்டற மழையில சூடா பஜ்ஜி போட்டுச் சாப்பிட்டு காபி கலந்து குடிச்சா எப்படியிருக்கும்..? வாட்ச்மேன் இருந்தா கடைக்குப் போய் பால் பாக்கெட்டும் கள்ள மாவு பாக்கெட்டும் வாங்கிக்கிட்டு வரச் சொல்லலாம்ன்னு நினைச்சு வந்தா ஆளைக் காணோம்.."

உனக்கு மனச்சாட்சியே இல்லையா சுபா என்று கேட்டு விடலாம் போல கொதித்துப் போனாள் பூர்ணிமா..

இரண்டு தெருக்கள் தள்ளி இருக்கும் டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு கொட்டும் மழையில் நனைந்தபடி வாட்ச்மேன் போயாக வேண்டும்.. குடை பிடித்தாலும் பிரயோசனமில்லை.. அடித்துக் கொட்டும் மழை ஆளை நனைத்து விட்டுத்தான் வேறு வேலையைப் பார்க்கும்.. அந்த மழையில் நனைந்தபடி வாட்ச்மேன் வாங்கி வரும் பாலையும், கடலை மாவையும் வாங்கி உலர்ந்த உடையும் சாரல் படாத வீடுமாக இவர்கள் பஜ்ஜி போட்டு, காபி கலந்து.. பால்கனியில் நின்று கொட்டும் மழையை வேடிக்கை பார்த்தபடி மொக்குவார்கள்.. குளிரில் நனையும் வாட்ச்மேனுக்கு கொதிக்கக் கொதிக்க ஒரு கப் காபி கொடுப்போம் என்ற பிரக்ஞை கூட இவர்களுக்கு இருக்காது..

ஹாரன் அடித்து அடித்து ஓய்ந்து போன கார்க்காரர் காரை விட்டு இறங்கி மழையில் நனைந்தபடி கேட்டை திறந்து விட்டுக் காரில் ஏறினார்..

"நாம திறக்கலாமா..?"

ஆலோசனை கேட்டு விட்டு சுபாவின் பலத்த முறைப்புக்கு ஆளானாள் பூர்ணிமா..

"வாயை வைத்துக்கிட்டு சும்மாயிருக்க மாட்டியா..? அந்த ஆளுக்கு கேட்டைத் திறந்து மூடத்தான் நாம இங்கே வந்து நின்னிருக்கோமா..?"

"இல்லேடி சுபா.."

"ஒரு நாள் செய்தா அதையே ரெகுலராக்கிருவாங்க பூர்ணி.. அபார்ட்மெண்ட் பழக்கத்தைப் பற்றி உனக்குத் தெரியாது.. பேசாம இரு.."

நமக்கெதுக்கு வம்பு என்று பூர்ணிமா பேசாமல் இருந்து விட்டாள்.. காரை ஓட்டி வந்தவர் பார்க் பண்ணி விட்டுத் திறந்திருந்த கேட்டை மூடி விட்டு வரும் வரை அவரைக் கவனிக்காததைப் போல பூர்ணிமாவிடம் தீவிரமாக விவாதம் செய்து கொண்டிருந்த சுபா.. அவர் கேட்டை மூடிவிட்டு வந்ததும் சிநேகிதமாக சிரித்தபடி..

"ஹாய்.. அங்கிள்.." என்றாள்..

‘எப்படி இவளால் கொஞ்சம் கூட கில்ட்டியில்லாம ஹாய் சொல்ல முடியுது..?’

கேட்டைத் திறந்து மூடியதில் மழையில் நனைந்து விட்ட அந்த மனிதரை பரிதாபமாக பார்த்தாள் பூர்ணிமா.. அவரோ பூர்ணிமாவைக் கவனிக்காமல் சுபாவிடம்..

“இந்த வாட்ச்மேன் எங்கே தொலைஞ்சான்..?” என்று படபடத்தார்..

“ஐ டோன்ட் நோ அங்கிள்.. மழைக்கு இதமா தம்மடிக்கப் போயிருக்காரோ என்னவோ..” என்றாள் சுபா..

நீ கண்டாயா என்று கேட்க வேண்டும் போல இருந்தது பூர்ணிமாவுக்கு..

“டியூட்டி டயத்தில என்ன தம் வேண்டிக் கிடக்கு..? அபார்ட் மெண்டோட இந்த மன்த்லி மீட்டிங்கில இவனை மாத்தச் சொல்லிச் சொல்லப் போறேன்..”

“செய்யுங்க அங்கிள்..”

கோபத்துடன் கத்தி விட்டு அந்த மனிதர் போய்விட்டார்..

“நீயும் ஏண்டித் தூண்டி விடற..?” ஆற்ற மாட்டாமல் கேட்டாள் பூர்ணிமா..

“அபார்ட்மெண்டோட ரூல்ஸ் அண்ட் ரெகுலேசனில நாம தலையிட முடியாது பூர்ணி.. அத்தோட இது மாதிரி சமயத்தில வாட்ச்மேன்

இருக்கிறது அவசியம்தானே.. டியூட்டி நேரத்தில எஸ்கேப் ஆகலாமா..?" என்று நியாயம் பேசினாள் சுபா..

"நீ நினைக்கிறதைப் போல அவர் டியூட்டிக்கு ஒபி அடிக்கலைடி சுபா.. ஹெவி ஃபீவர்.. பாவம்.. காய்ச்சலோட டியூட்டி பார்த்தவர் தன்னுணர்வு இல்லாம உங்க அபார்ட்மெண்ட் வாசலிலதான் சரிஞ்சு கிடந்திருக்கார்.. ரகுவரன் சார்தான் அவரை ஹாஸ்பிடலுக்கு காரில் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போனார்.."

"என்னடி சொல்ற..? உனக்கெப்படித் தெரியும்..?"

"ரகுசார் வாட்ச்மேன் அண்ணாவைக் காரில் தூக்கிப் போடத் தோதா நான்தாண்டி அவருக்கு கார்க் கதவைத் திறந்து விட்டேன்.. அவர்தான் விவரம் சொன்னார்.."

பூர்ணிமாவின் முகம் மிருதுவானது.. நடந்ததை அவள் சொல்லச் சொல்லக் கேட்டுக் கொண்ட சுபா யோசனையானாள்..

"என்னடி..?" என்றாள் பூர்ணிமா..

"எனக்கென்னவோ இது விசயமா அபார்ட்மெண்டில பலத்த சண்டை வரும்ன்னு தோணுது பூர்ணி.."

சுபா சொன்னதைப் போலதான் ஆனது.. வாட்ச்மேன் உடல் தேறி வரும் வரைக் காத்திருக்க முடியாது.. புதிய வாட்ச்மேனை நியமிக்க

வேண்டும் என்று அபார்ட்மெண்டில் கூட்டம் போட்டுத் தீர்மானம் செய்தார்கள்.. அதை ஒரு மனதாக நிறைவேற்ற முடியாமல் ரகுவரன் எதிர்த்து நின்றான்..

"ஒரு மனுசனுக்கு உடம்பு சரியில்லாமப் போச்சுன்னா வேலையை விட்டு நிப்பாட்டிருவீங்களா..? நீங்க வேலை பார்க்கிற ஆபிஸ்களில் இப்படித்தான் செய்கிறாங்களா..? உங்களுக்கு உடம்புக்கு முடியலைன்னா மெடிகல் லீவு போடறிங்கள்ல.. வாட்ச் மேனுக்கும் மெடிகல் லீவைக் கொடுங்க.."

"அவன் வர்ற வரைக்கும் அபார்ட்மெண்ட் காவல் காக்க ஆளில்லாம இருக்கனுமா..?"

"டெம்பரவரியா யாரையாச்சும் போடுங்க.. பட் வாட்ச்மேன் உடம்பு சரியாகி வர்றப்ப டெம்பரவரி வாட்ச் மேன் இடத்தைக் காலி பண்ணிரனும்.."

"இல்லைன்னா..?"

"இதுக்குக் காரணமானவங்களை நான் காலி பண்ணிருவேன்.."

உறுதியான ரகுவரனின் குரலில் இவன் செய்தாலும் செய்து விடுவான் என்று திகிலடைந்து போனார்கள் அவர்கள்..

"போலிஸ்ன்னு நான் இருக்கேண்டா.. என் முன்னாடியே கொஞ்சம்கூட பயமில்லாம அவன்

வாய் விடறாண்டா..” பூபாலனிடம் அவனது நண்பன் புலம்பித் தள்ளினான்..

இதை பூபாலன் வீட்டில் சொன்னபோது பூர்ணிமாவுக்கு ஜில்லென்று இருந்தது.. ரகுவரனின் தீரத்தில் அவள் மனதைப் பறி கொடுத்தாள்.. எதற்கும் அஞ்சாத அவனது அஞ்சாமை அவளைக் காந்தம் போல சுண்டி இழுத்தது..

வாட்ச்மேன் குணமாகி வேலைக்குத் திரும்பினான்.. அவனுக்கான மருத்துவச் செலவை ரகுவரன்தான் செலவளித்தான் என்று சொன்னாள்..

“அது மட்டுமில்லைடி.. வாட்ச்மேன் வேலைக்கு வராத நாள்களுக்கான சம்பளத்தையும் இவனே கொடுத்தானாம்.. பெரிய பாரிவள்ளல் பரம்பரைன்னு மனசுக்குள்ள நினைப்பு..”

சுபா நொடித்துக் கொள்ள.. பூர்ணிமா கொடியாக மாற ஆசை கொண்டாள்..

# 7

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி வள்ளல் பரம்பரையில் வந்தவன் பூர்ணிமா எனும் கிள்ளைக்குத் தோள் கொடுக்க மாட்டானா என்ன..?

ரகுவரன் வசித்து வந்த அடுக்கு மாடிக் குடியிருப்பு வாசிகளால் ரகுவரனை எதிர்த்து எதையும் செய்ய முடியவில்லை.. அதைப்பற்றிய சுபாவின் கருத்து யாதெனில்..

“இவனை எதுத்து இதுகளால ஒரு ஆணியையும் பிடுங்க முடியாதுடி..” என்பதாகும்..

ரகுவரனை எதிர்த்து ஒரு ஆணியையும் பெயர்க்க இயலாது என்பதில் பூர்ணிமா மனதுக்குள் மட்டற்ற சந்தேகம் அடைந்தாள்.. அதைத் தோழி அறியாதவாறு பச்சைப் பிள்ளை போல முகத்தை வைத்துக் கொள்ளவும் செய்தாள்..

“ஏண்டி..?”

அறியாப்பிள்ளை போன்ற அவளது வினாவிற்கு சுபா கொடுத்த விடையில் அவளது சந்தோசம் அதிகரித்தது..

“ஏன்னா இவன் பார்க்கிறதுக்கு பக்கா ரவுடியா இருந்தாலும் மனசளவில நல்லவனா இருந்து தொலைக்கிறாண்டி.. வேலைக்காரப் பெண் விசயத்தில ஆகட்டும்.. வாட்ச்மேன் விசயத்தில

ஆகட்டும்.. இவன் தலையிடப் போய் நல்லது நடந்தது.. நியாயம் கிடைச்சது.. இல்லேன்னா என்ன ஆகியிருக்கும்..? சொல்லு.. நம்மளால முடியாத நல்லதை இவன் செய்கிறானேங்கிற எண்ணம் இங்கே குடியிருக்கிற எல்லார் மனசிலயும் இருக்கு.. அதனாலதான் அவங்க வாய் திறக்காம இவன் ரௌடி.. எதுத்து எதையும் செய்ய முடியாதுன்னு சப்பைக் கட்டு கட்டிக்கிட்டு உள்ளூர இவனுக்குச் சப்போர்ட் பண்றாங்க..”

‘ஆஹா.. இதில இப்படியெல்லாம் பாயிண்ட்ஸ் இருக்கா..?’

மனதுக்குள் மட்டற்ற மகிழ்ச்சி கொண்ட பூர்ணிமா வெளியே அப்பாவி போல இமை கொட்டியபடி..

“எல்லோருமா சப்போர்ட் பண்ணறாங்க..? வேலைக்காரப் பெண் விசயத்தில அடி வாங்கி ஹாஸ்பிடலில் அட்மிட் ஆனவன் இருக்கான்.. அன்னைக்கு மழை பெய்தப்ப கேட்டை திறந்து மூடிவிட ஆள் இல்லேன்னு கோபப்பட்ட கார்க்காரங்க இருக்காங்க.. இவங்கள்ளாம் எதிர்க்கலையா..?” என்று விளக்கம் கேட்டாள்..

“நீ வேற.. அடி வாங்கினவனுக்குத்தானே அடி வாங்கின வலி தெரியும்..? திரும்பவும் இவன் அடி பின்னிட்டா கதை முடிஞ்சிரும்ன்னு வாயைத் திறக்காம இவனைக் கண்டாலே பத்தடி தூரத்துக்கு தள்ளி ஓடிக்கிட்டு இருக்கான்.. மழை பெய்த

அன்னைக்கு கேட்டைத் திறந்து மூட வாட்ச்மேன் இல்லைதான்.. அதைக் காரணம் காட்டி வேலையை விட்டு நிப்பாட்டனும்னு மத்த கார்க்காரங்க குதிச்சாங்கதான்.. இவன்தான் புதுசா வர்ற வாட்ச்மேன் ஒழுங்கா வேலை செய்யலைன்னா உங்களைத்தான் 'தட்டி'க் கேட்பேன்னு கறாராச் சொல்லிட்டானே.. இவன் 'தட்டி'க் கேட்டாத் தாங்குவோமான்னு அதுகளுக்குள்ள உதறல் வந்து குளிரும் காய்ச்சலும் ஜோடி போட்டுக்கிட்டு வந்து சேர்ந்துருச்சே.. வேலைக்காரப் பெண் விசயத்தில அடி வாங்கினவன் பட்ட பாட்டைப் பார்த்த பின்னாலும் இவனைத் தட்டிக் கேட்க அலோவ் பண்ணுவாங்களா என்ன..?"

சிரிக்காமல் சுபா விளக்கம் சொன்னதில் பூர்ணிமா விழுந்து விழுந்து சிரித்து வைத்தாள்..

"ரொம்பவும் விழுந்து விழுந்து சிரிக்காதேடி.. காயம் பட்டிறப் போகுது.."

தோழியை எச்சரித்து தற்காலிகமாக அவளது சிரிப்பை நிறுத்தச் செய்தாள் சுபா.. சிரித்துச் சிரித்துக் கண்களில் நீரே வந்து விட்டது பூர்ணிமாவுக்கு.. தோழியை உற்றுப் பார்த்தாள் சுபா..

"ஏண்டி புசாப் பார்க்கிறதைப் போலப் பார்க்கிற..?" அதற்கும் சிரித்தாள் பூர்ணிமா..

“நீ புதுசாத் தெரியற பூர்ணி.. அதான் பார்க்கிறேன்..” யோசனையுடன் சொன்னாள் சுபா..

“என்னத்தைப் புதுசாத் தெரியறேனாம்..” பூர்ணிமா சிணுங்கினாள்..

“இந்த ரௌடிமேல் உனக்கெதுக்குடி பேவரிசம்..?” தோழியை உன்னிப்பாகப் பார்த்தபடி கேட்டாள் சுபா..

“பேவரிசமா..?” தூக்கி வாரிப் போட்டது பூர்ணிமாவுக்கு அகப்பட்டுக் கொண்டவளாய் திருதிருத்த பூர்ணிமாவை இமைக்காமல் பார்த்து சோதித்து வைத்தாள் சுபா..

“சுபா..” திக்கித் திணறினாள் பூர்ணிமா..

“சொல்லு..” கண்டிப்புடன் அதட்டினாள் சுபா..

“அது.. வந்து..” பூர்ணிமாவின் கண்கள் கலங்கி விட்டன..

“எனக்கு உன்னைத் தெரியும்டி.. இன்றைக்கு, நேற்றா உன்னோடு பழகறேன்..? ஸ்கூல் டயத்தில இருந்தே நீயும், நானும் பிரண்ட்ஸ்.. உன்னாலே பொய் சொல்ல முடியாது பூர்ணிமா..”

“இல்லை சுபா.. என்னால எதையும் சொல்ல முடியல.. ரகுவரன் மேல எனக்கு மதிப்பும், மரியாதையும் கூடுதலா இருக்கு.. சினிமாக்களில பார்க்கிற ஹீரோவை நிஜத்தில பார்க்கிற

மலைப்புதான் எனக்கு.. இதுக்கு வேற பெயர் வைத்துப் பார்க்கத் தெரியலைடி..”

“இது மதிப்பும் மரியாதையோட நின்னுட்டாப் பரவாயில்லை பூர்ணி.. அதுக்கு மேல போயிராம பார்த்துக்க.. டெபுடி சூப்பரிண்டென்ட் ஆஃப் போலிஸோட தங்கை ஒரு ரவுடியை லவ் பண்றதுங்கிறது சினிமாவுக்கு வேணும்னா ஷீட் ஆகலாம்.. நிஜத்தில வெர்க்அவுட் ஆகாது..”

ஏன் ஆகாது என்று கேட்காமல் உதட்டைக் கடித்தபடி மௌனம் சாதித்தாள் பூர்ணிமா.. அது போன்ற விதண்டா வாதங்களுக்கும் அவளுக்கும் ரொம்பத்தூரம்.. அவளது நன்மைக்காக அக்கறை காட்டும் தோழியின் தன்னலமில்லாத அறிவுரையை பூர்ணிமாவால் புறக்கணிக்க முடியவில்லை..

‘இனி ரகுவரனை நினைத்தும் பார்க்கக் கூடாது..’

அவளது மனது செய்த சங்கல்ப்பம் இரண்டு நாள்கள்கூட தாக்குப் பிடிக்க முடியாமல் எட்டுக்கால் பாய்ச்சலில் ஓடி விட்டது.. இவள் மாடி பால்கனியில் மறைந்து நின்று எதிர்த்த அபார்ட்மெண்டில் ரகுவரனின் பிளாட்டில் இருக்கும் பால்கனியைப் பார்க்க ஆரம்பித்து விட்டாள்..

அதுவரை அவள் அப்படிச் செய்ததில்லை.. ரகுவரனைப் பார்க்க வேண்டும் போல இருந்தால்

சுபாவைச் சாக்கு வைத்து எதிர்த்த அபார்ட்மெண்டிற்குப் போய் விடுவாள்.. மனது முழுவதும் ரகுவரன் எதிர்பட வேண்டுமே என்று படபடப்பாக இருக்கும்.. அவனைப் பார்த்துவிட்டால் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்து விட்டதைப் போல மனது துள்ளும்.. பார்க்க முடியாவிட்டால் எதையோ இழந்து விட்டதைப் போல ஒரு துயரம் துரத்திக் கொண்டே இருக்கும்.. அது ஏனென்றும் தெரிந்து தொலைக்காது..

இதைத்தான் வழக்கமாக வைத்திருந்தாள்.. பால்கனியில் ஒளிந்து நின்று அவன் பிளாட்டின் பால்கனியைப் பார்க்க யத்தனித்ததில்லை.. அந்தக் கள்ளத்தனமெல்லாம் அவளுக்கு வந்ததில்லை..

என்று சுபா அவள் மனதை இனம் கண்டு எச்சரித்தாளோ.. அன்றிலிருந்து சுபாவின் வீட்டிற்கு அடிக்கடி போகத்தயங்க.. ஆரம்பித்தாள் பூர்ணிமா.. சுபாவோ அவளுக்கும் மேல் இருந்தாள்..

“வீடுன்னா இதுதான் வீடு ஆண்ட்டி.. தனி வீட்டிற்கு இருக்கிற அழகே தனிதான்.. ஆயிரம்தான் அபார்ட்மெண்ட் வசதியாக, ஸ்டைலாக இருந்தாலும் தனி வீட்டைப் போல என்ஜாய் பண்ண முடியாது ஆண்ட்டி.. தோட்டம், ஊஞ்சல்ன்னு உங்க வீடுதான் அசத்துது ஆண்ட்டி..”

பூர்ணிமாவின் வீட்டுக்கு வந்து பாகீரதியின் தலையில் ஐஸ் கட்டியைத் தூக்கி சுபா வைத்ததில் உருகிக் கரைந்து விட்டாள் பாகீரதி..

"அப்படியா சொல்கிற..?" என்று படு ஸ்ட்ராங்காக கள்ளிச் சொட்டுக் காபியைக் கலந்து கொடுத்தாள்..

வீடுன்னா இது வீடு.. என்று ஐஸ் வைத்த சுபா..

"காபின்னா இது காபி.." என்று அடுத்த ஐஸ் கட்டியைத் தூக்கி வைத்து விட்டு ஒரு சொட்டு விடாமல் காபியை உறிஞ்சிக் குடித்து விட்டு..

"எங்க பிளாட்டில மூச்சு முட்டுது ஆண்ட்டி.. இங்கே வந்தாத்தான் ரீலிஃப்பா இருக்கு.." என்று பெருமூச்சை விட்டாள்..

இத்தனை வருசமா மூச்சு முட்டாத அபார்ட்மெண்டின் பிளாட் இப்போது மட்டும் எப்படி மூச்சு முட்ட வைக்கிறது என்று பாகீரதி கேட்கவில்லை..

எப்படிக் கேட்பாள்..? அவள் வீட்டிற்கு வர சுபா காரணம் தேடுகிறாள் என்று நினைப்பதற்கு எந்த விதமான முகாந்திரமும் இல்லையே..

அவள் வீட்டில் கல்யாண வயதில் பூர்ணிமா மட்டும்தான் இருக்கிறாள்.. பூபாலனுக்குத்தான் திருமணமாகி ஆஷாவும் பிறந்து விட்டாளே..

அதனால் இதுவும் உன் வீடுதான் சுபா.. நீ நினைத்த போதெல்லாம் இங்கே வந்து விடு என்று தாய்மைப் பெருக்குடன் சொல்லி விட்டாள்..

அதற்காகத்தானே சுபா அத்தனை ஐஸ் கட்டிகளை வைத்தாள்..?

“தேங்க் யு ஆண்ட்டி..” என்று நன்றி சொன்னவள் பூர்ணிமாவைப் பார்த்து..

“இனி நோட்ஸ் காபி பண்ணணும்னா எனக்கு ஒரு கால் பண்ணு பூர்ணி.. என் நோட்ஸைத் தூக்கிக்கிட்டு நானே வந்து நிற்கிறேன்.. கம்பைன் ஸ்டடி பண்ணனும்னா என் பிளாட்டில நீ வந்து மாட்ட வேணாம்.. உன் வீட்டில நாம ஜாலியா கம்பைன் ஸ்டடி பண்ணலாம்.. ஹாலி டேஸில ஃபுல் டேயும் நான் இங்கேதான் கும்மியடிக்கப் போறேன்.. ஆண்ட்டியே பெர்மிசன் கொடுத்தாச்சு.. அப்புறம் என்ன..? சொல்லு..” என்று பூடகமாகச் சொன்னாள்..

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று பூர்ணிமாவுக்குப் புரிந்து விட்டது.. அவளைப் பார்க்கும் சாக்கில் எதிர் அபார்ட்மெண்ட்டிற்கு பூர்ணிமா வரக் கூடாது என்கிறாள்..

பூர்ணிமாவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.. என் பிளாட்டிற்கு வராதே என்பதைப் போல சுபா நடந்து கொண்ட விதம் அவள் மனதை பாதித்தது.. அதே சமயத்தில் அவள் மீதான அக்கறையில் சுபா பூர்ணிமாவின் வீட்டிற்கு

வந்து போக நினைத்ததில் பெருமையாகவும் இருந்தது..

எது எப்படியோ.. முன்பு போல நினைத்த நேரத்திற்கு எதிர்த்த அபார்ட்மெண்டிற்கு போய் வந்து கொண்டிருந்த பூர்ணிமாவுக்கு தடைகல் போடப்பட்டு விட்டது.. அவளால் ரகுவரனைப் பார்க்கப் போய் வர முடியவில்லை..

என்ன செய்வது என்று ஏங்கிப் போன பூர்ணிமாவுக்கு யதேச்சையாகத்தான் அந்த வழி கிடைத்தது.. பால்கனியில் நின்று கொண்டிருந்தவள் இலக்கில்லாமல் எதிர்த்த அபார்ட்மெண்டை வெறித்துக் கொண்டிருந்தாள்.. அப்போதுதான் அவள் வீட்டிற்கு நேர் எதிரே இருந்த பிளாட்டின் மாடி பால்கனிக்கு ரகுவரன் வந்து நின்றான்.. அவன் கையில் செல்போன் இருந்தது.. உரத்த குரலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.. அவனது பேச்சுச் சப்தத்தில் கவனம் கலைந்த பூர்ணிமா சட்டென பால்கனியின் சுவர் ஓரமாக ஒன்றி மறைந்து கொண்டாள்..

‘இதுதான் இவன் பிளாட்டா..?’

அவளுக்கு அவனைப் பிடிக்கும்தான்.. அவனைப் பார்க்க வேண்டும் போன்ற ஆவல் அவள் மனதில் பொங்குகிறதுதான்.. அவனைப் பார்ப்பதற்காக சுபாவைப் பார்க்கக் காரணம் தேடி

எதிர்த்த அபார்ட்மெண்டிற்கு அவள் ஓடுகிறாள்தான்..

இத்தனையிருந்தும் அவன் எதிர்த்த அபார்ட்மெண்டின் எந்தப் பிளாட்டில் குடியிருக்கிறான் என்று அவளுக்குத் தெரியாது..

அவள் வீட்டிற்கு நேர் எதிராக வரும் பிளாட்டில் தான் அவன் குடியிருக்கிறான் என்பதில் அவளுக்கு கொண்டாட்டம் மிகுந்தது.. அன்றிலிருந்து கண் மறைவாக ஒளிந்து நின்று ரகுவரனின் பிளாட்டைப் பார்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டாள் பூர்ணிமா..

இரவு வேளைகளில் இதில் இன்னொரு சாதகமும் இருந்தது.. அவனது பிளாட்டில் விளக்கு எரிந்தால் அவன் வந்து விட்டான் என்று அர்த்தம்.. விளக்கு எரியாவிட்டால் பால்கனியின் விளக்கை அணைத்து விட்டு சுவரில் சாய்ந்து அமர்ந்து முட்டிக்கால் போட்டு கைகளால் முழங்கால்களை வளைத்து அதில் முகாவயை பதித்து அவன் வரவுக்காக காத்திருப்பாள்.. ஆயிரம் கார் ஹார்ன் சப்தங்களில் அவனது காரின் ஹார்ன் சப்தத்தை எளிதாக கண்டு கொள்வாள்..

அந்த சப்தத்தில் அவளது விழிகள் மின்னும்.. உடலுக்குள் ஓர் உயிர்ப்பு வரும்.. ரத்த நாளங்கள் சூடாகும்.. அடி வயிற்றில் எதிர்பார்ப்பின் பரபரப்பு சுரக்கும்..

அவன் கார் வந்து கேட்டருகே நின்று நிதானிக்கும்.. காரின் உள் விளக்கைப் போடுபவனின் பார்வை பூர்ணிமாவின் வீட்டுப் பால்கனியின் இருளில் படிந்த மீளும்.. அவன் பார்த்து விடுவானோ என்ற பதட்டத்தில் சுவரோடு சுவராக பல்லி போல ஒட்டிக் கொள்வாள் பூர்ணிமா..

அவனது கார் கேட்டுக்குள் போனதும் பூர்ணிமா காத்திருப்பாள்.. அவனது பிளாட்டில் விளக்குகள் எரிய ஆரம்பிக்கும் போது இவள் மனது ததும்பும்..

ரகுவரன் பால்கனிக் கதவைத் திறந்து வந்து நிற்பான்.. அவளுக்காக அவன் வந்து நிற்பதைப் போல உணர்வாள் பூர்ணிமா..

# 8

**“இந்த நிலவினை நான் பார்த்தால்**
**அது எனக்கென வந்தது போலிருக்கும்..**
**உன் நினைவினை எடுத்து வரும்..**
**என் நெஞ்சினில் கொடுத்து விடும்..”**

இரவின் அமைதியில் மெத்தையின் மடியில் துயில் கொள்ளும் போது மன நிறைவுடன் மெல்லிய குரலில் பாடியபடி தூங்கிப் போவாள் பூர்ணிமா..

அவளுக்காக அவன் வந்து நிற்கிறானா என்று அவளுக்குத் தெரியவே தெரியாது.. இவள் வீட்டுப் பால்கனியில் விளக்கைப் போடாமல் இருளுக்குள் ஒளிந்து இவள் நிற்பாள்.. அவன் வீட்டுப் பால்கனியில் விளக்கு வெளிச்சத்தில் கம்பீரமாக அவன் நிற்பான்.. அவன் பார்வை இருளைத் துளைக்காது.. தேடாது..

ஆனால் அவளுக்காக அவன் நிற்பதைப் போல.. அவன் பார்வை அவளைத் துளைப்பதைப் போல.. அவன் அவளைத் தேடுவதைப் போல அவளுக்குள் ஓர் சிளிர்ப்பு வரும்.. அந்த உணர்வில் கலந்து தொலைந்து போக ஆரம்பித்தாள் பூர்ணிமா..

*எப்போதாவது யதேச்சையாக சாலையில் அவர்கள் சந்தித்துக் கொண்டதுண்டு.. அவன் என்னவோ இயல்பாகத்தான் பார்த்து வைப்பான்.. பூர்ணிமாதான் உடல் நடுங்கத் தவித்துப் போவாள்..*

*இப்படி எதிர்த்த அபார்ட்மெண்டில் குடியிருக்கும் ரவுடி அவளுக்குச் சுவாசமாகிப் போவான் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லையே.. பின் எப்படி இது நிகழ்ந்தது..?*

*நினைத்துப் பார்க்காதவைகள் நிகழ்வதுதானே வாழ்க்கை..? காலத்தின் ஓட்டத்தில் எந்தத் தருணத்தில் எது நிகழும் என்று விதி வகுத்திருக்கும் நியதியை அறிந்தவர் யார்..?*

*பூப்போன்ற பூர்ணிமாவின் மனதில் தீயாய் தீயவைகளைச் சுட்டெரிக்கும் ரௌடி குடி புகுந்து விட்டான்.. அதை எப்படி அவனிடம் தெரியப்படுத்துவது என்று தெரியாமல் அவனைத் தள்ளியிருந்து பார்ப்பது மட்டுமே போதும் என்று நாள்களைக் கடத்திக் கொண்டிருந்தாள் அந்த பேதை..*

*பூர்ணிமாவுக்கு காதலை உணர முடிந்தது.. அதைச் சொல்லத் தெரியவில்லை.. முதலும், முடிவுமற்ற அந்த உணர்வை இனம் காணக் கூடத் தெரியாத குழந்தை அவள்..*

*அவளுக்கு ரகுவரனைப் பிடித்திருந்தது.. அவனைப் பார்க்க வேண்டும் என்று அவள் மனம்*

தவித்ததைப் போல பேச வேண்டும் என்று தவிக்கவில்லை.. அந்தப் பார்வையையும் அவனுக்குத் தெரியாமல் மறைந்திருந்துதான் பார்ப்பாள்.. அதை வீட்டார் அறிந்து விடுவார்களோ என்று பயந்து வியர்த்துப் போவாள்.. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்..

ஓர்முறை இயல்பாக பாகீரதி..

**“மறைந்திருந்தே பார்க்கும்..**
**மர்மம் என்ன..?”**

என்ற பாடலை முணுமுணுத்து விட்டாள்..

கண்ணாடி தம்ளரில் ஜீஸ் அருந்திக் கொண்டிருந்த பூர்ணிமா அந்தப் பாடலின் வரிகளில் பயந்து போய் தம்ளரை நழுவ விட்டு விட்டாள்..

“சிலீர்..” என்ற சப்தத்துடன் கண்ணாடி தம்ளர் உடைந்து சிதறியதில் பயம் அதிகரிக்க அழுது விட்டாள்..

“என்னம்மா..?” என்றபடி எட்டிப் பார்த்த பாகீரதி பதறிப் போனவளாக மகளை சமாதானம் செய்தாள்..

பூர்ணிமாவைச் சமாதானம் செய்வது ஒன்றும் அவ்வளவு எளிதானதாக இல்லை.. அதைச் சொல்லி இதைச் சொல்லி அவளைத் தேற்றுவதற்குள் பாகீரதிக்கு போதும் போதுமென்று ஆகிவிட்டது..

“ஏம்மா.. கைதவறி கண்ணாடி தம்ளர் விழுந்து நொறுங்கிட்டா நீ என்ன பண்ணுவ..? வேணும்ன்னா கீழே போட்டு நொறுக்கின..? தெரியாம நடந்ததுக்கு இப்படி அழுகிறயேம்மா..”

அலுத்துக் கொண்ட பாகீரதிக்குத் தெரியாது.. பூர்ணிமா கண்ணாடி தம்ளரைக் கை நழுவ விட்டு விட்டதால் அப்படி அழுகவில்லையென்று..

அவள் மனதைத் தொலைத்து விட்டதால் அழுகிறாள்.. அதை மீட்க முடியவில்லையென்று அழுகிறாள்.. அவளுடைய குடும்பத்தினருக்குத் தெரியாத அந்தரங்கம் அவள் மனதில் புதைந்திருப்பதில் அழுகிறாள்.. பச்சைக் குழந்தையென்று நம்பிக் கொண்டிருக்கும் அவளது குடும்பத்தினரின் நம்பிக்கையைச் சிதைத்து விட்ட குற்ற உணர்வில் அழுகிறாள்..

அலாதியான குணங்களைக் கொண்டவள் பூர்ணிமா அகல் விளக்கின் சுடர் போன்றவள்.. அமைதியைத் தன்னகத்தில் கொண்டவள்..

அவளது சின்னஞ்சிறு இதயம் காதலின் கனம் தாங்காமல் தொய்ந்தது.. சலனம் கொண்ட மனதின் சஞ்சலத்தைப் பிறர் அறியாமல் மறைக்கும் நுட்பம் அவளுக்குக் கை வரவில்லை.. சூட்சுமம் நிறைந்தவர்கள்தான் காதல் பண்ண முடியுமா என்ற சோர்வு அவள் மனதுக்குள் அவ்வபோது வந்து போகும்.. எதிர்பாராமல் அவள் மனதுக்குள் நுழைந்த காதலுக்கு என்ன எதிர்காலம் இருக்கப்

போகிறது என்று கேள்வி அவள் மனதை தைத்து ரணமாக்கும்..

அதுபோன்ற தருணங்களில் எல்லாம் பூர்ணிமா அவள் மனதைத் கொய்த காதலை கடிந்து மறுத்து விலக்கும் மார்க்கங்களை யோசிப்பாள்.. அவற்றைச் செயல்படுத்தவும் முனைவாள்.. அனிச்ச மலரின் மென்மை கொண்டவளின் காதல் உன்னதம் நிறைந்தது என்பதை உணராத பேதையாக மனம் கலங்கினாள்.. புத்திக்கும் மனதுக்கும் என்றுமே ஏழாம் பொருத்தம்.. இதுவேண்டாம் என்று புத்தி விலக்கி வைப்பதை.. இது மட்டும்தான் வேண்டும் என்று மனது அடம் பிடிப்பது ஏன் என்பதை கண்டு சொல்வார் எவருமில்லை.. புத்தி பகைப்பதைத்தான் மனது விரும்பித் தொலைக்கிறது..

குடும்பத்தினரின் எண்ண அலைவரிசையோடு இசைந்து நேர்தடத்தில் பயணித்த பூர்ணிமாவின் மனம் என்று ரகுவரனின் பக்கமாக விலகிப் பயணித்ததோ அன்றே தவறு செய்து விட்டச் சிறு குழந்தைபோல குற்ற உணர்வை மனதுக்குள் பாரமாக உணர்ந்து கண்கலங்க ஆரம்பித்து விட்டாள் பூர்ணிமா..

இத்தனை போராட்டத்தையும் ரகுவரனுக்காக அவள் மனதுக்கள் போராடிக் கொண்டிருப்பதை அறியாதவனாக யாரோ, எவரோ போல ரகுவரன் போய் வந்து கொண்டிருந்தான்.. அவனைப்

பார்க்கக் கூடாது என்று தினமும் உறுதி பூண்டு நொடியில் அந்த உறுதி கலைந்து அலைபாயும் மனதை அடக்கத் தெரியாதவளாக பால்கனியின் இருளோடு இருளாகக் கலந்து அவன் வரவுக்காக காத்திருப்பாள் பூர்ணிமா..

அவனும் வருவான்.. அவனுக்காக அவள் காத்திருப்பதை அறிந்து வைத்திருப்பவனைப் போல கேட்டை அணுகும் போது காரின் உள் விளக்கைப் போட்டு பூர்ணிமாவின் வீட்டுப் பால்கனியைப் பார்த்து வைப்பான்.. அவனுடைய பிளாட்டுக்குள் நுழைந்து விளக்குகளைப் போட்டு.. விட்டதும் பால்கனியில் பிரசன்னமாகி காட்சி கொடுப்பான்.. மனமார அவனைப் பார்க்கும் பூர்ணிமாவின் கண்களில் இருந்து உணர்ச்சிப் பூர்வமான கண்ணீர்த்துளி அரும்பி அவள் கையில் விழுந்து நனைக்கும்..

விரயமாகும் அந்தக் கண்ணிர் துளிக்கு விலை மதிப்புக் கிடையாது.. எங்கு தேடினாலும் கிடைக்காத அரிதான திரவியம் அது என்பதை அக்கண்ணீர்த்துளியை உகுத்தவள் அறிய மாட்டாள்..

பூர்ணிமாவைப் போன்ற பெண்ணின் காதல் கிடைக்க ரகுவரன் தவம் செய்திருக்க வேண்டும்..

அந்த ரகுவரனின் ‘ஆரோ மெக்கானிக் ஷெட்..!’ டில் ஸ்கூட்டியை விட வேண்டும்..

என்பதற்காகவே அதன் டயரை ஆணியின் மீது ஏற்றிப் பழுதாக்கினாள் பூர்ணிமா..

அவளது கல்லூரி இருக்கும் திசைக்கு எதிர் திசையில் இருக்கும் ரகுவரனின் மெக்கானிக் ஷெட்டிற்குப் போக வேண்டும் போல மனது துடிதுடித்ததை தாங்க மாட்டாமல்.. ஸ்கூட்டியை அந்தத் திசையில் செழுத்தி விட்டாள் பூர்ணிமா.. ஷெட்டை நெருங்கியதும் எதற்காக வந்திருக்கிறாள் என்ற காரணத்தை உண்டாக்க சாலையின் ஓரமாக கிடந்த பெரிய ஆணியின்மீது ஸ்கூட்டியை ஏற்றி விட்டாள்.. வெடி வைத்ததைப் போல வெடித்து வைத்தது டயர்.. பூர்ணிமாவுக்கான காரணம் கிடைத்து விட்டது..

# 9

பழுதடைந்திருந்த அந்தக் காரின் என்ஜினை அக்குவேறு ஆணி வேறாக பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தான் ரகுவரன்.. தள்ளி நின்று செல்போனில் பேசிக் கொண்டிருந்த பிரசன்னா.. நொடிக் கொருமுறை சிரித்து வைத்தான்.. அரைக் கண்ணால் அவன் சிரிப்பை பார்த்துக் கொண்டிருந்த ரகுவரன்.. அவன் பேசி முடித்து வந்ததும்..

“போனில நல்லாக் கழுவிக் கழுவி ஊத்தினாங்க போல.. அந்த உயர்ந்த உள்ளம் யாருடா..?” என்று என்ஜினில் கண்ணைப் பதித்தபடி கேட்டு வைத்தான்..

அவனை இமைக்காமல் பார்த்து வைத்த பிரசன்னா அழ மாட்டாத குறையாக..

“எப்புடிடா..?” என்றான்..

“நீ சும்மா பேசியிருந்தா கண்டு பிடிச்சிருக்க மாட்டேன்.. செகண்டுக்கொருதரம் சிரிச்சு வைச்சியா.. சரிதான்.. அந்தப் பக்கம் நம்ம மச்சிக்கு செம மாத்துக் கொடுத்துக்கிட்டு இருக்காங்கன்னு கண்டு பிடிச்சுட்டேன்..”

சாவாதானமாக ரகுவரன் சொன்ன விதத்தை ஷெட்டில் இருந்த மற்ற மெக்கானிக்குள் ரசித்துச்

சிரித்தார்கள்.. அதை பற்றற்ற துறவியைப் போல பார்த்து வைத்தான் பிரசன்னா..

“என்னடா இப்படி போஸ் கொடுக்கிற..?” ரகுவரன் ஆச்சரியமானான்..

“நான் புத்தனைப் போலவும், சித்தனைப் போலவும் இருக்கனும்னு நினைக்கறேண்டா..” துறவியைப் போல முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான் பிரசன்னா..

கார் டயரை உருட்டிக் கொண்டிருந்த கதிர் வேலன் சிரித்து விட்டான்.. அவன் சிரிப்பு காருக்கு அடியில் படுத்திருந்த லோகநாதனைத் தொற்றிக் கொண்டது.. ஒட்டுவாரொட்டி போல அந்தச் சிரிப்பு தொற்று நோயாகப் பறந்து காருக்குப் பெயிண்ட் அடித்துக் கொண்டிருந்த பலராமனின் முகத்தில் படர்ந்தது..

அவர்களது சிரிப்பை மேலும் அதிகப் படுத்துவதைப் போல..

“அதான் அந்தப் பக்கமிருந்து சோத்தில உப்பைப் போட்டுத் திங்கறியான்னு கேட்டாங்களா..?” என்று சிரிக்காமல் சொல்லி வைத்தான் ரகுவரன்..

“ஹா.. ஹா..” என்று மெக்கானிக் ஷெட்டில் எழுந்த சிரிப்பலையில் கடுப்பான பிரசன்னா..

“அடங்குங்கடா..” என்று சத்தம் போட்டு விட்டு..

“செல்போனை காதுக்குள்ள நுழைச்சுப் பேசினேனேடா.. அப்புறமும் எப்படிடா கேட்டுத் தொலைச்ச..?” என்று பரிதாபமாக ரகுவரனிடம் கேட்டான்..

“நீதான் அடக்கி வாசிச்ச.. எதிர் திசையில மத்தளம் போலயில்ல வாசிச்சாங்க.. எனக்கு மட்டும் கேட்கலைடா பிரசன்னா.. ஊருக்கே கேட்டுச்சு..” ரகுவரன் விளக்கியதில்..

‘இவனுகள்ளும் கேட்டிருப்பானுகளோ..’ என்று மற்ற மூவர் முகத்தையும் ஆராய்ந்தான் பிரசன்னா..

அவர்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டதில் ‘ஆம்’ என்ற உண்மை அப்பட்டமானதில் நொந்து போய் விட்டான்.. அதில் வேறு பலராமன் லோகநாதனிடம் சொல்வதைப் போல..

“நாதாரித்தனம் பண்ணினாலும் நாசுக்காப் பண்ணனும்டா மச்சி.. மாட்டிக்கக்கூடாது.. எதைச் செஞ்சாலும் தெளிவாப் பிளான் போட்டுச் செய்யனும்..” என்று சொல்லி வைத்ததில்..

‘என்னைத்தான் சொல்கிறானோ..’ என்ற சம்சயம் வந்து தொலைந்தது..

அப்படியாடா என்று கேட்டுத் தொலைக்கவும் முடியாது.. ஆமாம் என்று பலராமன் சொல்லி விட்டால் பிரசன்னா முகத்தை எங்கே வைத்துக் கொள்வது என்று யோசிக்க வேண்டியிருக்கும்..

கழற்றி மாட்ட அது ஒன்றும் ஹெல்மெட் இல்லையே.. முகமாயிற்றே..

அதனால் எதுவும் நடக்காததைப் போல முகத்தை வைத்துக் கொண்டு..

"அங்கே என்னடா அரட்டை வேண்டிக் கிடக்கு..? பேச்சை நிறுத்திட்டு வேலையைக் கவனிங்கடா.." என்று முதலாளியின் நண்பன் என்ற கெத்தைக் காண்பித்து அதட்டினான்..

"இம்புட்டுக் கலவரம் நடந்தும் எதுவுமே நடக்காததைப் போல பிலிம் காட்டற பாரு.. இங்கதான் நிக்கிற நீ.." என்றான் ரகுவரன்..

"முடியலைடா மச்சான்.. விட்டிரு.. இன்னைக்கு பலிகடா நான்தானா..? பொலி போடத் துடிக்கறயே.."

"நியாயமாய் பேசனும் பிரசன்னா.. நானாடா உன்னை பலி கடாவாக்கனும்னு 'வா, வா'ன்னு அழைச்சேன்..? தானா வந்து நீ தலையைக் கொடுத்தா நான் என்னடா பண்ணுவேன்..? செல்லில பேசறவன் பச்சை, பச்சையாத் திட்டறது காதில விழுகுதில்ல.. எனக்குத் தெரியக் கூடாதுன்னு நினைக்கிறவன் ஷெட்டை விட்டு வெளியே ஓடியிருக்கனுமா இல்லையா..? அதை விட்டுட்டு எனக்குக் கேட்காதுன்னு நீயே நினைச்சுக்கிட்டு பல்லை ஈன்னு காட்டி ஆக்ட் கொடுத்தா இப்படித்தான் நடக்கும்.."

“அதுக்குன்னு ஒரு வரைமுறை இல்லையாடா ரகு..?”

“இதுக்கெல்லாம் வரைமுறையைப் பார்க்கக் கூடாது.. ஆடு தானா வந்து தலய கொடுக்கிறப்ப நான் வேணாம்ன்னு சொன்னா நல்லாயிருக்குமாடா..?”

“நல்லாயிருக்குடா உன் நியாயம்..”

“அஃது.. அவனே வெறி கொண்ட வேங்கயைாப் பேசப் போறான்னு தெரியுதில்ல.. அப்புறமும் ஏண்டா அவன் போனை அட்டெண்ட் பண்ணின..?”

“அவன் இல்லேடா மச்சி.. அவ..”

“அவளா..? என்னடா இது.. என் காதில ஆம்பளை பேசற மாதிரியில்ல கேட்டுச்சு..?”

“ஆரம்பிச்சது அவதாண்டா.. கண்டினியு பண்ணினதுதான் அவளோட அண்ணன்.. அவ போன் நம்பராச்சேன்னுதான் அட்டெண்ட் பண்ணினேன் மச்சி..”

“ஷெட்டுக்குள்ள எனக்கும் ஒரு கேர்ள் பிரண்ட் இருக்கான்னு பிலிம் காட்ட நினைச்சிருப்ப..”

அவன் மனதைக் கண்ணாடி போல பிரதிபலித்த ரகுவரனின் வார்த்தைகளில் அசடு வழிய..

“ஹி.. ஹி..” என்று சிரித்து வைத்தான் பிரசன்னா..

“சகிக்கலை..” என்றான் ரகுவரன்..

“டேய்.. இதைத்தாண்டா அன்னைக்கு அவளும் சொன்னா..”

“என்னத்தைச் சொன்னா..? எதுக்குச் சொன்னா..?”

“அடுத்த தெருவில இருக்கிற பொண்ணுடா இவ..”

“உன் தெருவில மன்மதன் அம்பை விட்டா வேலைக்கு ஆகாதுன்னு அடுத்த தெருவுக்கு படையெடுத்துட்டயாக்கும்..”

அப்படியே பக்கத்திலிருந்து பார்த்தவனைப் போல ரகுவரன் சொல்லி வைத்ததில்..

‘இப்படி உண்மையைத் தேங்காயைப் போட்டு உடைக்கிறதைப் போல உடைத்து வைக்கிறானே..’ என்று காய்ந்து போனான் பிரசன்னா..

ஷெட்டில் வேலை செய்யும் நால்வரில் பிரசன்னா மட்டும் ரகுவரனின் பள்ளித் தோழனாக இருந்து வைத்ததில் மற்ற மூவருடன் ஒன்றி வேலை செய்யாமல் மேற் பார்வையாளனாக மாறிப் போயிருந்தான்.. அதை ரகுவரனும் ஆதரித்ததில் அவனது ஆரவாரம் அதிகமாயிருந்தது.. அதை நினைத்து மனதுக்குள் புழுங்கும் மற்ற மூவரும் இது போன்ற வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வாய் விட்டுச் சிரித்து பிரசன்னாவின் இமேஜை டேமேஜாக்கி புளகாங்கிதப் பட்டுப் போவார்கள்..

அன்றும் அதுபோல அவர்கள் புளகாங்கிதம் கொள்ள பிரசன்னா பரிதாபமாக ரகுவரனைப் பார்த்து வைத்தான்..

"விடுடா.. விடுடா.." ரகுவரன் நண்பனைச் சமாதானம் செய்து விட்டு..

"அப்புறம்..?" என்று கதை கேட்க ஆரம்பித்தான்..

"அப்புறம் என்ன..? தினமும் தெரு முனையில நின்னு சிக்னல் கொடுத்துக்கிட்டே இருந்தேன்.. ஒருநாள் நான் தனியா நின்னேன்.. அவளும் தனியா வந்தா.."

"சஸ்பென்ஸ் தாங்கலைடா மச்சான்.. என்ன ஆச்சுன்னு சொல்லித் தொலை.."

"நான் சுவரில மணிரத்னம் பட ஹீரோ போல சாய்ஞ்சு நின்னுக்கிட்டு 'காதலிக்கிறேன்..'னு ஒற்றை வார்த்தை சொன்னேன்.."

"அவ.. 'சகிக்கலை'ன்னு ஒற்றை வார்த்தையில சொல்லிட்டு ஓடிப் போயிட்டாளா..?"

'இதையும் பக்கத்தில இருந்து பார்த்ததைப்போல இம்புட்டுக் கரெக்டா சொல்றானே..' கண்ணில தண்ணியை விட்டு விட்டான் பிரசன்னா..

"எப்புடிடா..?" அவன் நாத்தழுதழுக்க..

"சகிக்கலை.. ஏண்டா இப்படிப் பெர்பார்மன்ஸ் பண்ணிச் சாகடிக்கிற.. இப்ப நீதானேடா

இதைத்தான் அன்னைக்கு அவ சொன்னான்னு சொல்லித் தொலைச்ச..” என்று எரிந்து விழுந்தான் ரகுவரன்..

‘விதி வலியது..’ காலத்தின் கோலத்தால் பல்ப் வாங்கி விட்ட பிரசன்னா நொந்து போனான்..

# 10

**வா**ழ்க்கை இப்படி அவனை வஞ்சித்துக் கொண்டே இருக்கக்கூடாது என்று மருகினான் பிரசன்னா..

‘இந்த முத்துலட்சுமி ராகவன் எழுதற கதையில எல்லாம் வாழ்க்கை யாரையும் வஞ்சிப்பதில்லைன்னு கொட்டை, கொட்டையாய் குண்டு எழுத்தில எழுதி வைச்சிடறாங்களே.. என் வாழ்க்கையைப் பத்தித் தெரிஞ்சிருந்தா அப்படி எழுதியிருப்பாங்களா..?’ என்று மூக்கைச் சிந்தியது அவன் மனம்..

அதிக நேரம் அவன் மூக்கைச் சிந்தக் கூடாதென்ற நல்ல மனதுடன் (?) அடுத்த கேள்வியைக் கேட்டான் ரகுவரன்..

“அவதான் சகிக்கலைன்னு சொல்லிட்டுப் போயிட்டாள்ல.. அப்புறமும் என்ன அலுவலுக்குப் போனைப் போட்டாளாம்..?”

நண்பன் ஆதரவாகத்தான் கேட்கிறான் என்று நம்பி உண்மையைக் கக்கி விட்டான் பிரசன்னா..

“இந்த சினிமாவில வர்ற டயலாக் வாழ்க்கையிலும் வொர்க்கவுட்டாகும்ன்னு நம்பி ஒரு மெஸேஜை தட்டி விட்டுட்டேண்டா மச்சி..”

“நீயெல்லாம் மெஸேஜ் சொல்ல ஆரம்பிச்சா நாடு விளங்கிரும்ங்கிற..?”

“நாடு எப்படிப் போனா நமக்கென்னடா..?”

“உனக்கென்னன்னு உன்னை மட்டும் சொல்லு.. என்னை இழுக்காதே.. எனக்கு என்னைவிட நாடுதான் முக்கியம்..”

கறாராகச் சொன்ன ரகுவரனை வெளிப்படையாக முறைத்துக் கொள்ள முடியாமல்.. இவன் மெக்கானிக்கல் என்ஜினியரா இல்லை ராணுவத்தின் கேப்டனா என்று மனதுக்குள் புழுங்கினான் பிரசன்னா..

“மனசுக்குள்ள என்னத்தைத் தாளிக்கற..?” என்று அதையும் தோண்டித் துருவினான் ரகுவரன்..

“நீ ராணுவத்தில சேவை செய்யப் போயிருக்க வேண்டியவன்.. பாவம்.. மெக்கானிக் ஷெட்டையும் ஆட்டோ மொபைல் ஷாப்பையும் கட்டிக்கிட்டு அழுகறன்னு நினைச்சேன்டா ரகு.. வேற ஒன்னும் நினைக்கலை..” மனம் தாளாமல் சொல்லி விட்டான் பிரசன்னா..

“நீ இம்புட்டு நினைச்சதே அதிகம்.. இதுக்கு மேலயும் நினைப்பியா..? ராணுவத்தில இருக்கிறவன்தான் நாட்டை நினைச்சுப் பார்க்கணும்.. மத்தவங்கள்ளாம் தங்களைப் பத்தி மட்டும்தான் நினைக்கனும்னா நாடு உருப்படுமாடா..?”

“இப்ப நான் என்னத்த சொல்லிட்டேன்னு நாட்டுப்பற்றை போதிக்கற..? நானே அனுப்பின எஸ்.எம்.எஸ் எக்குத்தப்பா வேலை செஞ்சிருக்கேன்னு அல்லாடிக்கிட்டு இருக்கேன்..”

“அப்படி என்னத்தை அனுப்பி வைச்சுத் தொலைச்ச..?”

“தப்பால்லாம் எதுவும் சொல்லலைடா.. என்னை மாதிரியான ஆளுகளையெல்லாம் பார்த்தவுடனே சகிக்கலைன்னுதான் சொல்லத் தோணும்ன்னு தட்டி விட்டேன்..”

“இதப் பாருடா..”

“அதைப் படிச்சுப் பார்த்த அவளோட அண்ணன் என்னைத் தட்டி வைக்கனும்னு முடிவு பண்ணிட்டானாம்டா..”

“முடிவே பண்ணிட்டானா..? நல்ல அண்ணன்..”

“இது தெரியாம நானு இவளோட போன் நம்பரைப் பார்த்ததும் எஸ்.எம்.எஸ் வொர்க்கவுட் ஆகிருச்சுன்னு மகிழ்ந்து போய் போனை அட்டெண்ட் பண்ணிட்டேன்.. அவளும் ஹலோன்னு கொஞ்சும் கிளியாத்தான் பேச்சை ஆரம்பிச்சா.. நான் வழிஞ்சதுக்கு ‘ச்ச்ச்ச்’சுன்னு சத்தம் கொடுத்தாளா.. முத்தம்தான் கொடுக்க வர்றான்னு நினைச்சுட்டேண்டா மச்சான்... அவ அண்ணனைக் கூப்பிட்டு போனை அவன் கைக்கு

மாத்தி விட்டுட்டாங்கிற விவரம் அப்புறமாத்தாண்டா தெரிஞ்சது..”

“முகத்துக்குப் பக்கத்தில் வர்றான்னா முத்தம் கொடுக்கத்தான் வர்றான்னு நம்பி முகத்தைக் காட்டிறக் கூடாதுன்னு இதுக்குத்தான் சொல்றது.. பிறாண்டி விடவும் வரலாம்..”

“பிறாண்டறதும் பிறாண்டறா.. அவ பிறாண்டாக் கூடாதா..? துடைச்சுப் போட்டுட்டுப் போயிருப்பேனே..”

“அதுதான் உனக்குக் கை வந்த கலையாச்சே.. அடேய் பிரசன்னா.. சினிமாவில வர்ற ஹீரோ சொல்ற வசனத்தையெல்லாம் லைஃபில அப்ளை பண்ணினேன்னு வைய்யி.. கதை கந்தலாகிரும்.. சினிமாவில ஹீரோவைத்தான் ஹீரோயின் காதலிச்சாகனும்.. அவளுக்கு வேற வழியே இல்லை.. ரியல் லைஃபில அப்படியா..?”

“அதைச் சொல்லு..”

பிரசன்னா விட்ட பெருமூச்சில் அனல் பறந்தது.. சுட்டு விட்ட பாவனையில் கதிர்வேலன் கையை உதற லோகநாதன் நமட்டுச் சிரிப்பைச் சிரித்தான்.. பலராமன் அதைப் பங்கு போட மொத்தமாய் மூன்று பேரையும் சேர்த்து வைத்து மொத்தப் போவதாக பிரசன்னா ஆவேசம் கொண்டான்..

“விடுடா.. இதெல்லாம் ஒரு மேட்டரா..” என்று அதையும் விடச் சொல்லி விட்டு அடுத்த பேச்சிற்குத் தாவினான் ரகுவரன்..

“போனவாரம் மழை வந்தப்ப வேற ஒரு கதையைச் சொன்னியே.. அப்படியே அந்தி மழை பொழிகிறது ரேன்ஜீக்கு இருந்ததா கண்ணைச் சொக்கினியே..”

“அதையேண்டா கேட்கிற..”

“ஏண்டா.. கேட்கக் கூடாத அளவுக்கு மட்டக் கண்றாவிக் கதையாடா மச்சி..?”

“ஏண்டா நீ வேற.. கொடுமை கொடுமையாய் இருக்கும்டா.. அதைத்தான் சொன்னேன்..”

“நீ காதலிச்சாலே அது கொடுமைதாண்டா.. அதையும் சொல்லு.. கேக்கலாம்..”

ரகுவரன் சொல்ல மற்ற மூவரும் காதை தீட்டிக் கொண்டு கதை கேட்க ஆயத்தமானதில் கொலை வெறியானான் பிரசன்னா..

“ஏண்டா.. என் கொடுமையைக் கேக்கறதுக்கு இம்புட்டு இண்ட்ரெஸ்ட்டா..?”

“எதுவா இருந்தாலும் பகிர்ந்துக்கடா மச்சான்.. அப்பத்தான் உனக்கும் மனசு ஆறுதலா இருக்கும்.. எனக்கும் வேலை ஓடும்..”

“எனக்குன்னு சொல்லாதே.. எங்களுக்குன்னு சொல்லு..”

“உன்னை எத்தனை தரம்தான் விடுடான்னு சொல்றது.. மழைக்கு வாடா மச்சான்..”

“சொல்லித் தொலைக்கிறேன் கேளு.. போன வாரம் ஏரியாவைச் சுத்திட்டு வீட்டுக்கு

திரும்பறப்ப மழை வந்திருச்சு.. வாக்கிங்குன்னு பேர் பண்ணிக்கிட்டு வீதியைச் சுத்திக்கிட்டு இருந்தவன் குடையையும் கையில பிடிக்கலை.. கொட்டற மழைக்கு தெருமுனை மரத்தடியில ஒதுங்கினா பக்கத்தில ஒரு பொண்ணு..”

“பொண்ணா..? மோகினியா..?”

“மோகினிப் பேய் கொழுசு போட்டிருக்குமா..?”

“மோகினிக்கும் எனக்கும் அவ்வளவா பரிச்சயம் இல்லை.. நான் பொண்ணைப் பாத்தா விண்ணைப் பார்க்கிற ஆளு.. நீதான் வீதி வீதியா உலா வர்றவன்.. உனக்குத்தான் கொழுசைப் பத்தின விவரம் தெரிஞ்சிருக்கும்..”

ரகுவரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஊடே தலையிட்டு பலராமன் குரல் கொடுத்தான்..

“சார்.. அதுவே மோகினிப் பேய்.. அந்தரத்தில அலையும்.. காலே இருக்காது.. கொழுசை எங்கே சார் போடும்..”

“தகவலுக்கு நன்றி பலராமா..”

“தேங்க் யு சார்..”

“பட்.. ஒன் டவுட் பலராமா..”

“என்ன சார்..”

“காலே இல்லை.. கொழுசும் போடாது.. அப்புறம் எப்படி மோகினிப் பேய் வந்தா

ஜல்ஜல்லுன்னு சத்தம் கேட்கும்ன்னு எல்லோரும் சொல்றாங்க..?”

“தெரியலையே சார்..”

பலராமன் ‘ஙே’ என்று விழித்தான்.. அகப்பட்டாயா என்பதை போல பார்த்த பிரசன்னா ஆள் காட்டி விரலை வாய் மீது வைத்து வேலையைப் பார் என்று சமிக்ஞை செய்தான்.. பலராமனின் முகம் விழுந்து விட்டது..

‘இந்த ஆளுக்கு முன்னாலே பல்ப் வாங்கிட்டேனே..’

ரகுவரனிடம் பல்ப் வாங்கி விட்ட வருத்தத்தை விட அந்த பல்பை பிரசன்னாவின் முன்னிலையில் வாங்கி விட்ட கொடுமைதான் பலராமனுக்கு அதிக வருத்தத்தை அளித்தது..

# 11

பலராமன் பல்ப் வாங்கி விட்ட சந்தோசத்தில் உற்சாகம் கரை புரள மழை நாளின் கதையைக் கலக்கலாகச் சொல்லிக் கலக்க ஆரம்பித்தான் பிரசன்னா..

"கொட்டற மழையில நனையாம இருக்கிறதுக்குத்தான் மரத்தடி யூஸாகும்.."

"இப்ப இதை ஏன் சொல்லற..?"

"காரணம் இருக்குடா.. கோடை மழை தனியாவா வரும்..? துணைக்கு இடி மின்னலைக் கூப்பிட்டுக்கிட்டு வருமா, வராதா..?"

"வரும்தான்.."

"டுமீர்ன்னு இடி இடிச்சது.. பக்கத்தில நின்னவ இடிச்சத்தத்துக்கு பயந்து இறுக்கிக் கட்டிப் புடிச்சுக்கிட்டா.."

"எதைடா..? மரத்தையா..?"

என்ஜினைக் குடைந்து கொண்டே கேட்டான் ரகுவரன்.. ஷெட்டிலிருந்த மற்ற மூவரும் பலமாக சிரித்து பிரசன்னாவின் பிளட் பிரசரை எகிற வைத்தார்கள்..

'இவனுக சிரிக்காம இருந்தாத்தான் என்னன்னு யோசிக்கனும்.. சிரிக்கிறதுக்கு

காரணம் கிடைக்காதான்னு எப்போ, எப்போன்னு காத்துக்கிட்டு இருக்கிறவனுக சான்ஸ் கிடைச்சா கபால்ன்னு பாய்ஞ்சு அமுக்கிற மாட்டானுகளா..?’

அது தெரிந்தும் ஏதும் அறியாதவனைப் போல அவர்களுக்கு வாய்ப்பை அள்ளிக் கொடுத்த ரகுவரனை மௌனப்பார்வை பார்த்தவன்..

“உனக்கு என்னடா நான் கெடுதல் செய்தேன்..? அவ பக்கத்தில மரம் மட்டுமாடா நின்னுச்சு..? நானும்தானேடா நின்னுக்கிட்டு இருந்தேன்..? என்னை விட்டுட்டு மரத்தைத்தான் கட்டிப் புடிப்பான்னு ஆணித்தரமா அடிச்சுச் சொல்றயேடா.. எம்புட்டு நம்பிக்கைடா உனக்கு..?” என்று அழமாட்டாத குறையாகக் கேட்டான்..

சிரிப்பு சப்தம் வலுத்தது.. என்ஜினிலிருந்து தலையைத் தூக்கிய ரகுவரன்..

“ஸாரிடா மச்சான்.. நான் அந்த ஆங்கிளில யோசிச்சே பார்க்கலைடா..” என்று வருத்தமில்லாமல் சொன்னான்..

“நீயேன் யோசிக்கப் போற..? என்கிட்ட இல்லாத எது மரத்துக்கிட்ட இருக்குன்னு

நினைச்சு நீ அந்த வார்த்தையை விட்ட..?" பிரசன்னா விடுவதாக இல்லை..

"அதை விடு.. அந்தப் பொண்ணு மரத்தைக் கட்டிப் பிடிக்காம உன்னையா கட்டிப் பிடிச்சா..?"

படு ஆச்சரியமாக ரகுவரன் கேட்டதில் பலமாக சிரித்துக் கொண்டிருந்த மூவரும் உருண்டு புரண்டு இன்னும் அதிகமான சிரிப்பை வெளிப்படுத்தினார்கள்..

"இந்த லட்சணத்தில கேட்கிறதுக்கு.. நீ சந்தேகம் கேட்காமலே இருந்திருக்கலாம்.." முறைத்தான் பிரசன்னா..

"என்னவோ போடா.. பசி வந்தாத்தான் பத்தும் பறந்து போகும்ன்னு சொல்வாங்க.. இங்கே பயம் வந்தா பத்தும் பறந்து போகுது பாரேன்.." தத்துவம் பேசினான் ரகுவரன்..

"இப்ப என்ன அலுவலுக்கு இந்தப் பழமொழியை அள்ளி விடற..?" கடுப்பானான் பிரசன்னா..

"ஏதோ தோணுச்சு சொன்னேன்.. விடுவியா..?"

"எப்பப் பார்த்தாலும் என்னைத்தான் விடச் சொல்வியா.. என்னவோ மிகப் பெரிய

நகைச்சுவையை கேட்டுட்டதைப் போல ஷெட்டுப் பூராவும் உருண்டு புரண்டு சிரிக்கறேன் பேர்வழின்னு கூட்டிப் பெருக்கிக்கிட்டு இருக்கானுகளே.. இவனுகளைச் சொல்ல மாட்டியா..?”

“ஏய்ய்.. சிரிக்காதீங்கப்பா.. சொல்லிட்டேண்டா..”

“இதுக்கு நீ சொல்லாமலே இருந்திருக்கலாம்.. என்னவோ ஆட்டுக்குட்டியைத் தடவிக் கொடுக்கிறதைப் போலச் செல்லமா சொன்னா எவன்டா கேப்பான்..?”

“என்னவோ என்னவோன்னு எதுக்குடா ராகம் போடற..? இதைக் கேட்காமலே இருந்திருக்கலாம், சொல்லாமலே இருந்திருக்கலாம்ன்னு சொல்ற..? என்ன..? உன்னோட

இடி, மின்னல் கதையைக் கேட்கனும்ங்கிறதுக்காக இத்தனை நொட்டனைகளையும் நான் வாங்கிக் கட்டிக்கனுமா..?” ரகுவரன் குரலை உயர்த்த..

“ஐயையோ..” என்று சரண்டர் ஆனான் பிரசன்னா.

“உனக்கே இது நியாயமா இருக்காடா ரகு..? அவனுகளை அதட்டினா மட்டும் காதலியை அதட்டறதைப் போல ஹஸ்கி வாய்ஸில கொஞ்சறதைப் போல அதட்டற.. என்னை மட்டும் எட்டுக் கட்டைத் தொண்டையில வில்லனை அதட்டற மாதிரி அதட்டி வைக்கிற..”

“காதலிகிட்ட ஹஸ்கி வாய்ஸில் பேசறதைப் போல பேசறேனா..? காதலிக்கே வழியைக் காணோம்.. இதில ஹஸ்கி வாய்ஸீக்கு எங்கே போறது..?”

“இப்படி முறைச்சுக்கிட்டு இருந்தா எந்தக் காதலி உன்னைத் தேடி வருவா..?”

“என்னைத் தேடி வர்றது இருக்கட்டும்.. உன்னைக் கட்டிப் புடிச்சவ எங்கே போனா..? அவளை விட்டுட்டு அடுத்த தெரு பைங்கிளிக்கு நூல்விட்டு அவ அண்ணன் காரன்கிட்ட நீ ஏன் மாத்து வாங்கற..?”

“அந்தக் கொடுமையை ஏண்டாக் கேட்கிற..? இப்படி ஒருத்தி கொட்டற மழையில கட்டிப் பிடிப்பான்னு நான கனவாடா கண்டேன்..? அப்புடியே ஷாக் ஆகி நின்னுத் தொலைச் சிட்டேன்டா..”

“இதைக் கேக்கிற எங்களுக்கே ஷாக் ஆகுது.. உனக்கு ஷாக் ஆகாதா..?”

ரகுவரன் சொல்ல, முதலாளி ‘எங்களுக்கே’ என்று தங்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டதில் மற்ற மூவரும் பயமின்றி சிரித்தார்கள்.. அதில் கதிர்வேலன் யோசனையுடன் நெற்றியில் ஒற்றை விரலால் தட்டியபடி..

“இந்த சீனை ஏதோ ஒரு பழைய படத்தில பார்த்திருக்கேண்டா பலராமா..” என்றான்..

“‘அவளுக்கென்று ஒரு மனம்’ங்கிற படம்டா.. ஜெமினி கணேசனை.. காஞ்சனா கட்டிப் பிடிப்பாங்க..” உடனடியாக பதிலைச் சொன்னான் பலராமன்..

“ஆயிரம் கனவுன்னு பாட்டுக்கூடப் பாடுவாரே..” விரல் சொடுக்கி உற்சாகமானான் லோகநாதன்..

“பாட்டி காலத்துப் படத்தை இப்போ நடக்கறது கூடக் கம்பேர் பண்றானுக பாரு.. எல்லாம் நீ கொடுக்கிற இடம்டா ரகு..” பிரசன்னா கோபமானான்..

ரகுவரன் எதையோ சொல்ல வாய்திறக்க.. கையமர்த்தி அவனைத் தடுத்தவன்..

“விடுடான்னுதானே சொல்லப் போற..? இதைக் கேட்டுக் கேட்டு காது ஜவ்வே அறுந்து போச்சு.. நானே விட்டுட்டு கதையைக் கண்டினியூ பண்றேன்.. நீ அலட்டிக்காதே..” என்று கடுப்புடன் சொன்னான்..

ரகுவரனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.. நண்பனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.. பிரசன்னாவின் முகம் மென்மையானது..

“காதலியைக் கட்டிப் பிடிக்கிறதை விட்டுட்டு பிரண்டைக் கட்டிப் பிடிக்கிறயேடா..” என்றான்..

“காதலியை கொண்டு வந்து நிறுத்திட்டுப் பேசுடா.. மழைக்கு பயந்த ஒருத்திக் கட்டிப்பிடிச்சா ஆஹான்னு பதிலுக்குக் கட்டிப் பிடிப்பானா.. அதை விட்டுட்டு இல்லாத காதலியைக் கட்டிப் பிடிக்கச் சொல்றான்..”

“நேரம்டா மச்சான்.. ஷாக் ஆகி நின்னவன் ஆடாம அசையாம எம்புட்டு நேரம் நின்னேனோ.. எனக்கே தெரியலை.. அவ் வாகாக் கட்டிப் புடிச்சிருந்தா.. தன்னுணர்வுக்கு வந்தவன் அவளை இறுக்கி அணைச்சுக் கலாம்ன்னு கையைத்தாண்டா அசைச்சேன்..”

“இறுக்கி அணைச்சு ஒரு உம்மா கொடுக்கனும்னு நினைச்சியா..? ஹா.. ஹா..”

“ம்ப்ச்.. நினைத்ததை நடத்தி முடிக்கிறதெல்லாம் மக்கள் திலகம்தான் செய்வாரு.. எனக்கெங்கே அது முடியுது..? நான் ஷாக் ஆகி நின்னப்ப கொட்டின மழை.. தன்னுணர்வுக்கு வந்து கையை அசைச்ச அடுத்த செகண்டே யாரோ சொல்லிக் கொடுத்ததைப் போல டக்குன்னு நின்னுருச்சுடா மச்சான்..”

“அதனால என்ன..? நீ கட்டிப் பிடிச்சிருக்க வேண்டியது தானே..? அதுக்கும் மழைக்கும் என்னடா சம்பந்தம்..?”

“யாதொரு சம்பந்தமும் இல்லைதான்.. ஆனா மழைக்குப் பயந்து கட்டிப் பிடிச்சவ, மழை நின்னதும் கட்டிப் பிடிச்ச நன்றியை மறந்திட்டு என் முகத்தையும் பார்க்காம, அவ முகத்தையும் காட்டாம ஓடியே போயிட்டாடா மச்சி..”

“என்னது..?”

ரகுவரன் சிரித்த சிரிப்பில் ஷெட்டே அதிர்ந்தது..

“தாங்கலைடா பிரசன்னா.. இப்படியாடா கதை சொல்வ..?”

“உனக்குக் கதை.. எனக்கு வதை.. ம்ஹீம்.. அவளாவது இன்னும் கொஞ்ச நேரம் இருந்திருக்கலாம்..”

பிரசன்னா ஏங்கி முடிப்பதற்குள்..

**“இன்னும் கொஞ்சநேரம்**
**இருந்தாத்தான் என்ன..?”**

என்ற பாட்டுச் சத்தம் கேட்டு நின்றது..

“யாருடா பாடினது..?” என்ற பிரசன்னாவின் காட்டுக் கத்தலுக்குப் பதிலே இல்லை..

# 12

உக்கிரத்தில் இருந்த பிரசன்னாவின் கையில் குளிர்ந்த தண்ணீர் பாட்டிலைத் திணித்து தாகத்தை தணித்துக் கொள்ளச் சொன்னான் ரகுவரன்.. கத்திக் கத்தி தொண்டை வறண்டிருந்ததால் மறு பேச்சுப் பேசாமல் தண்ணீர் பாட்டிலைக் காலி செய்து தாகத்தை தணித்து மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கி அமைதியடைந்தான் பிரசன்னா.. ஆறுதலாகப் பேசப் போனால் அதற்கும் அவன் டென்சன் ஆவான் என்பதினால் எதுவும் பேசாமல் கார் என்ஜினைக் கவனிக்க ஆரம்பித்தான் ரகுவரன்..

“என்னத்தைச் சொல்ல..?” பெருமூச்சு விட்டான் பிரசன்னா..

அவன் பேச்சுக்கு, ‘எசப் பேச்சு’ ஏதும் வராததினால் சமாதானமானவன்..

“அவளும் இருந்திருக்கலாம்.. இந்த மழையும் இன்னும் கொஞ்ச நேரம் கண்டினியூ பண்ணியிருக்கலாம்.. இரண்டும் இரண்டு ஜாடி.. இரண்டுமே மூடி கழண்ட ஜாடிங்கிற கதையா மழையும் நின்னுருச்சு.. அவளும் ஓடி போயிட்டா..”

நண்பன் விட்ட பெருமூச்சைத் தாங்க முடியாமல் வாய் திறந்த ரகுவரன்..

“மழையையே குற்றம் சொல்லாத.. இவ்வளவு நடந்திருக்கு.. நீயாவது அவ முகத்தைப் பார்த்திருக்கலாமில்ல..” என்று நண்பனைக் கடிந்து கொண்டான்..

“ஏண்டா வயிற்றெரிச்சலைக் கிளப்பற..? மழையில நனைஞ்சவன் முகத்தில வழிஞ்சுக்கிட்டு இருக்கிற தண்ணியை வழிச்சு விடுவேனா இல்லை பக்கத்தில நிக்கிறவ முகத்தைப் பார்ப்பேனா..? இப்படி இடி விழுந்து, அவ பயந்து, ராவிக்கிட்டு வந்து என்னைக் கட்டிப் பிடிப்பான்னு எனக்குத் தெரியுமாடா..?”

“அதைச் சொல்லு.. தெரிஞ்சிருந்தாத்தான் அவ முகத்தைப் படமாவே வரைஞ்சிருப்பியே..”

“தெரியுதில்ல.. அப்புறமும் ஏண்டா வெந்த புண்ணில சுடு காப்பியை ஊத்தற..? கைக்கெட்டினது வாய்க் கெட்டலையேன்னு நான் வயிறெரிஞ்சு புகை விடறதைப் பாக்கறதில உனக்கு அம்புட்டு ஆசை.. உன்னை நண்பனை அடைஞ்சிருக்கேனே.. நான் கொடுத்து வைத்தவண்டா ரகு..”

சிரித்தபடி இயல்பாக வாசல் பக்கம் திரும்பிய ரகுவரன் சிரிப்பை மறந்து அப்படியே நின்று விட்டான்.. நண்பன் நின்ற தோற்றத்தில்..

‘இவன் ஏன் இப்படி ஜெர்க் ஆகிறான்..’ என்று வாசலைப் பார்த்தான் பிரசன்னா..

மற்ற மூவரும் பிரசன்னாவைப் பின்பற்றி வாசல் பக்கம் பார்வையைத் திருப்பினார்கள்..

அங்கே அழகான ஓவியம் போல நின்று கொண்டிருந்தாள் பூர்ணிமா.. நாணம் கலந்த செம்மை அவள் முகத்தில் படர்ந்திருக்க.. பயமும், நடுக்கமுமாக ரகுவரனை அடிப் பார்வையில் பார்ப்பதும் சுற்று முற்றும் பார்ப்பதுமாக பதட்டத்துடன் காணப்பட்டாள்..

‘இதைப் பாருடா.. இப்பத்தான் என்னைத் தேடி எந்தக் காதலி வரப் போறான்னு சொன்னான்.. சொல்லி வாய் மூடலை.. இந்தப் பெண் வந்து நிற்குது..’

பிரசன்னா பூர்ணிமாவைப் பார்த்திருக்கிறான்.. ரகுவரனின் வீட்டிற்குப் போய் வரும்போது வழியில் தென்படுவாள்.. அவன் மட்டும் தனியாக இருந்தால் அறிமுகமற்ற பார்வையுடன் கடந்து போய் விடுவாள்.. ரகுவரன் அவன் பக்கத்திலிருந்தால் விழிகளில் பரவசத்துடன் ரகுவரனை மட்டும் பார்த்தபடி கடந்து போவாள்.. அவளைப் பார்க்கும் தருணங்களில் ரகுவரனின் முகத்தில் விரவும் மிருதுத்தன்மையில் வியந்து போவான் பிரசன்னா..

“யாருடா அந்தப் பொண்ணு..?”

“என்னோட அபார்ட்மெண்டுக்கு எதிர் வீட்டுப் பெண்..”

“கேக்க நல்லாத்தான் இருக்கு.. உனக்கும் பெண்களுக்கும் ஆகவே ஆகாதே..”

“அப்படி உன்கிட்ட நான் வந்து சொன்னேனா..?”

“அப்படிப் போடு அருவாளை.. பார்ட்டி வேற உன்னைப் பருகு பருகுன்னு பார்க்குது..”

“பார்ட்டின்னு சொன்ன.. பல்லைக் கழட்டிருவேன்.. அவ பெயர் பூர்ணிமா..”

பூர்ணிமா என்ற பெயர் ரகுவரன் மென்மையாக உச்சரித்த விதத்தில் பூரணத்துவம் அடைந்து விட்டதைப் போல உணர்ந்தான் பிரசன்னா.. ரகுவரனின் முரட்டு முகத்தில் விரவியிருந்த மென்மை அவனுக்குத் தனித்ததொரு சோபையைத் தந்ததையும் இப்போது நினைவு கூர்ந்தான்..

ரகுவரன் பெண்களிடம் பேசிப் பழகியிராதவனல்ல.. அவனது மெக்கானிக் ஷெட்டிற்கும், ஆட்டோ மொபைல் ஸ்பேர்ஸ் பார்ட்ஸ் கடைக்கும் பெண்கள் வருவதுண்டு.. வியாபார ரீதியாய் அவர்களிடம் பேசும் ரகுவரன் இறுக்கமாக முகத்தை வைத்திருப்பான்.. அதிகப்படியாக ஒரு வார்த்தைகூடப் பேசிவிட மாட்டான்.. அவனது கடுமையான சுபாவத்தில் அவர்களும் அரண்டு போய் ஒன்றிரண்டு வார்தைகளுடன் வேலையை முடித்துக் கொண்டு இடத்தை காலி பண்ணி விடுவார்கள்..

“அவங்க என்ன உன் எதிரிக்காரங்களாடா..?” பிரசன்னா தலையில் அடித்துக் கொள்வான்..

அப்படிப்பட்ட ரகுவரன் கனிவான பார்வையும், நட்பான முகபாவமுமாக பூர்ணிமாவை அணுகி, வெகு தன்மையாக

“வாங்க..” என்று வரவேற்றான்..

“ஸ்கூட்டி ரிப்பேர்.. என்னன்னு தெரியலை..” அவன் முகத்தைப் பார்ப்பதும் இமைகள் படபடக்கத் தலையைக் குனிந்து கொள்வதுமாகச் சொன்னாள் பூர்ணிமா..

“லோகு..” ரகுவரனின் அழைப்பில்..

“சார்..” என்று ஓடி வந்தான் லோகநாதன்..

“இதில என்ன ரிப்பேர்ன்னு பாரு..”

பூர்ணிமாவின் கைப்பிடியிலிருந்த ஸ்கூட்டியை நகர்த்தினான் ரகுவரன்.. பதறிப் போனவளாக தள்ளி நின்ற பூர்ணிமாவின் நடுக்கத்தை ரசித்தபடி லோகநாதனிடம் ஸ்கூட்டியை ஒப்படைத்து விட்டு..

“உள்ளே வாங்க..” என்றான்..

‘இதுதான் இவனோட மெக்கானிக் ஷெட்டா..?’

பூர்ணிமாவின் பார்வை ஷெட் முழுவதும் சுழன்று ஆராய்ந்தது.. அங்கே நின்று கொண்டிருந்த கார்களின் வரிசையில் பிரமித்தாள்..

“கார்களா இருக்கே..” என்றாள் குழந்தைத்தனத்துடன்..

வசீகரமான அந்தக் குழந்தைத் தனத்தில் வசீகரிக்கப் பட்ட ரகுவரன் புன்னகைத்தான்.. மனதுக்குப் பிடித்த பெண்ணின் முன்னால் சிரித்த அவனது சிரிப்பை பிரசன்னாவும் மற்ற மூவரும் வியப்புடன் பார்த்தார்கள்.. அரிதான அந்தச் சிரிப்பு அலாதியானதொரு அழகுடன் இருப்பதாக பலராமன் கிசுகிசுத்தான்.. அதிசயத்திலும் அதிசயமாக ரகசியப் புன்னகையுடன் அதை ஆமோதித்து தலையசைத்தான் பிரசன்னா..

மறைத்து வைக்க முடியாத மல்லிகை மலரின் வாசமாக வெளிப்படும் நண்பனின் நுண்ணிய காதல் உணர்வுகளை அவனால் இனம் காண முடிந்தது.. முரட்டுத்தனமான ரகுவரனின் பாறை மனதிலும் பூ மலரக்கூடும் என்பதை அன்றுதான் அவன் கண்டான்..

விண்ணிலிருந்த நிலவு இறங்கி மண்ணுக்கு வந்து அவனுடைய மெக்கானிக் ஷெட்டின் வாசலில் நின்றிருப்பதைப் போல பேருவுவகை கொண்டான் ரகுவரன்..

பராக்குப் பார்ப்பதைப் போல அவனது மெக்கானிக் ஷெட்டை லயிப்புடன் பூர்ணிமா பார்த்துக் கொண்டிருந்ததில் அவன் மனம் திளைத்தது.. வெருட்சி கொண்ட அனிச்ச மலர் போன்ற மெல்லிய நுட்பமான இயல்பினைக்

கொண்டவள் அவனுடைய மெக்கானிக் ஷெட்டிற்கு வந்திருந்தது அவன் மனதைக் கொய்தது.. அரைத்த மஞ்சளின் நிறம் கொண்ட அந்த அழகியை சொந்தத்துடன் பார்த்தவன்..

“ஆமாம்.. இங்கே கார்கள்தான் அதிகமா வரும்..” என்றான்..

“கார் மட்டும்தான் வருமா..?”

“அப்படியும் சொல்லலாம்..”

“ஸாரி.. ஸாரி.. நான் ஸ்கூட்டியை கொண்டு வந்திட்டேன்..”

தவறு இழைத்து விட்டக் குழந்தையைப் போல அவள் தடுமாறியதில் அவன் இளகிப் போனான்.. சலவை செய்த வெள்ளை வேட்டியினைப் போல அவளைக் கண்டதும் நிர்மலமானது அவன் மனது.. மழை பெய்த பூங்காவினைப் போல பளிச்சென்று குளுமையானது.. தித்திப்பு நிறைந்த மனது தாம் தரிகிடதோம் எனத் தாளமிட்டது..

# 13

*அழகான அகல்விளக்கின் ஒளி போல ரகுவரனின் மனதுக்கு இதத்தைத் கொடுத்துக் கொண்டிருந்தாள் பூர்ணிமா.. கைகளை உதறியவளின் கைவிரல்களைப் பிடித்து நெஞ்சோடு அணைத்து வீணையடி நீயெனக்கு, மேவும் விரல் நானுனக்கு என்று பாட வேண்டும் போல இருந்தது ரகுவரன்னுக்கு..*

*"காரையே பார்ட் பார்ட்டா கழட்டிப் போட்டு மாட்டறவங்க உங்க ஸ்கூட்டியை என்னன்னு ஒரு கை பார்த்திர மாட்டோமா..?" இலகுவாக சிரித்தான்..*

*"நான் அதுக்குச் சொல்லலை.."*

*"எதுக்கும் சொல்ல வேணாம்.. என்னை நம்புங்க.. போதும்.."*

*இந்த வார்த்தைகளை ஸ்கூட்டிக்காகச் சொன்னான் என்பதைப் பச்சைக் குழந்தைகூட நம்பாது என்று பரிவுடன் நினைத்துக் கொண்டான் பிரசன்னா.. மனம் கவர்ந்தவளிடம் தன் மனதை வெளிப்படுத்தும் நண்பனின் அணுகுமுறையில்..*

*'சைக்கிள் கேப்பில சிந்து பாடிக் கடாசறான் பாரு..' என்று மனதுக்குள் சிரித்துக் கொண்டான்..*

*ரகுவரனின் வார்த்தைகள் மயிலிறகாய் மனம்வருட சிலிர்த்துப் போனவளாக பார்வையை*

*உயர்த்தினாள் பூர்ணிமா.. காத்திருந்த ரகுவரனின் பார்வை அவள் பார்வையுடன் கலந்தது.. ஒரு சிறு பார்வைக்காக ஏங்கியிருந்தவளுக்கு ஆழ்ந்த பார்வை கிடைத்திருப்பதை நம்ப முடியாதவளாகத் திணறிப் போனாள் பூர்ணிமா..*

*'உங்களை நம்பாமல் வேறு யாரை நம்புவேனாம்..?'*

*உரிமையுடன் மனதுக்குள் கேட்டுக் கொண்டவளால் வெளிப்படையாக பேச முடியவில்லை..*

*"என்ன ரிப்பேர்ன்னு பொறுமையா செக் பண்ணுலோகு.."*

*பொருள் பொதிந்த முதலாளியின் வார்த்தைகளுக்குக் கட்டுப் பட்ட லோகநாதன்.. டயர் பஞ்சர்தான்.. பத்தே நிமிசத்தில ஒட்டி முடிச்சிரலாம் என்று வாய் வரை வந்த வார்த்தைகளைத் தவிர்த்து விட்டு விஞ்ஞானி போல ஸ்கூட்டியை உற்றுப் பார்த்து ஆராய்ச்சி செய்யத் தொடங்கினான்..*

*'சபாஷ்..' லோகநாதனை விழிகளால் சமிக்ஞை செய்து நயனபாஷையில் பாராட்டினான் பிரசன்னா..*

*"அவன் பார்த்து முடிக்கிற வரைக்கும் வாசலிலேயே நிற்கனுமா..? உள்ளே வந்து சேரில் உட்கார்ந்து என்னை கௌரவப் படுத்தலாமே.."*

பூர்ணிமாவின் தயக்கத்தை உடைத்தது ரகுவரனின் வார்த்தைகள்.. வலதுகாலை எடுத்து வைத்து அவனது ஆரோ மெக்கானிக் ஷெட்டிற்குள் பிரவேசித்தாள் பூர்ணிமா.. அவனது வீட்டிற்குள் அவள் கிரஹப்பிரவேசம் செய்து விட்டதைப் போல மனம் நிறைந்து போனான் ரகுவரன்..

அவளுக்காக அவன் இழுத்துப் போட்ட சேரில் உட்கார்ந்தவளுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.. மனதிலிருந்த காதலின் வேகத்தில் அவனது மெக்கானிக் ஷெட் வரை வந்து விட்டவளுக்கு அவனது அருகாமையில் அவனுடைய ஷெட்டிற்குள் உட்கார்ந்திருக்கிறோம் என்பதையே நம்ப முடியவில்லை.. பெரும் பிரமிப்பாக இருந்தது..

அவளையே பார்த்த வண்ணம் அவளுக்கு எதிரில் இருந்த சேரில் உட்கார்ந்த ரகுவரனின் மனம் நிறைந்து ததும்பியது.. பூர்ணிமாவின் வருகையினால் அவனது வாழ்வில் வெளிச்சம் நிறைந்து விட்டதைப் போல உணர்ந்தான் அவன்.. அவள் மௌனமாக இருந்தாள்..

*'காரிருள் போல அடர்ந்துள்ளது*
*உனது மௌனம்..*
*கலைப்பாயா கண்ணே..?*
*என்மன இருளையும்*
*உன் மௌனத்தையும்*

*ஒருசேரக் கலைப்பாயா கண்ணே..?*
*அகல் விளக்காய் உனது*
*பிரத்யேக வெளிச்சப் புன்னகையினைச் சிந்தி*
*என் தனிமையிலிருந்து மீட்சி கொடு..'*

அவன் பார்வை இறைஞ்சியது.. பார்வையைத் தழைத்துக் கொள்ள முடியாத பரிதவிப்போடு அவன் பார்வையை எதிர் கொண்டாள் பூர்ணிமா.. சாய்ந்து கொள்ளத் தோள் கொடுப்பவனின் பார்வை சாய்ந்து கொள்ளத் தோள் கேட்கும் பார்வையாக இருந்ததில் சங்கடம் கொண்டாள்..

'இவன் மனமும் நோகுமா..?' தவித்துப் போனாள்..

*'நோகின்ற நெஞ்சமென்றும்*
*நேசிக்கும் மெந்நெஞ்சமாகும்..'*

என்றோ அவள் வரைந்த கவிதை காகித வடிவில் அவள் மனதில் படபடத்தது..

*'உன் மனம் நோகின்றதா..?*
*நைந்த உள்ளத்தைத் தேற்றிச்*
*செப்பனிட நானிருக்கிறேன்.. வா..*
*சாய்ந்து கொள்ள என் தோள் உண்டு..*
*இளைப்பாற என் மடியுண்டு.. வா..'*

புதிய கவிதையை மனம் வரைந்தது..

மௌனப்படம் போல அவர்கள் விழிகள் பேசிக் கொள்ள அமர்ந்திருந்தார்கள்.. ஆராய்ச்சி செய்து, செய்து அலுத்துப் போன லோகநாதன் அதற்கு மேலும் ஆராய்ச்சி செய்ய இயலாதவனாக பிரசன்னாவைப் பார்த்தான்.. அவனோ..

'இன்னும் கண்டினியூ பண்ணு..' என்று சைகை காட்டினான்..

'இன்னுமா..?' அரண்டு போனான் லோகு எனப்படும் லோகநாதன்..

செதுக்கி வைத்த கிரேக்க சிற்பம் போல ரகுவரனும்.. ரவிவர்மாவின் ஓவியம் போல பூர்ணிமாவும்.. மனதோடு மனம் பேச அமர்ந்திருந்த காட்சியைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை பிரசன்னாவிற்கு..

எல்லோருக்கும் நன்மையையே செய்யும் அவனுடைய நண்பனின் துயரம் மிகுந்த தனிமை வாழ்வை அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பவன் அவன்..

"கல்யாணத்தைப் பண்ணிக்கடா ரகு.. உனக்குன்னு ஒரு குடும்பம் உண்டாகும்டா.." என்று கெஞ்சி ஓய்ந்து போவான்..

"எனக்குன்னு ஒரு குடும்பமா.."

கேள்வி கேட்கும் ரகுவரனின் பார்வை ஹாலில் மிகப் பெரிதாக மாட்டப் பட்டிருக்கும் அவனது

பெற்றோரின் புகைப்படத்தின் மீது துயரத்துடன் படியும்..

“ம்ப்ச்..”

ஒற்றைச் சூள் கொட்டலில் மறுத்து விடுவான்.. இப்படியே ஒற்றைப் பனைமரமாய் தன்னந்தனிமையிலே அவன் நின்று விடுவானோ என்று பிரசன்னாவின் மனம் பயம் கொள்ளும்.. வாரம் ஒரு பெண்ணைப் பின் தொடர்ந்து காதல் சொல்ல முயன்று தோற்றுப் போகும் கதைகளை நண்பன் முன்னால் கடை பரப்புவான்.. அதைக் கேட்டாவது அவன் மனம் மாறாதா என்று ஏக்கம் கொள்வான்.. பிரசன்னா கடை பரப்பும் காதல் கதைகளை வெகு சுவராஸ்யமாகக் கேட்கும் ரகுவரனின் மனதில் காதல் உணர்வுகள் துளிர்க்கவே இல்லை..

சொந்த இடத்தில் மெக்கானிக் ஷெட்டைக் கட்டி, ஆட்டோ மொபைல் ஸ்பேர்ஸ் பார்ட் கடையையும் ஆரம்பித்தவன் குடியிருந்த பழைய வீட்டை விற்று விட்டு புதிதாக ஒரு அபார்ட்மெண்ட் வாங்கிக் குடியேறியதன் அடிப்படை என்னவென்று பிரசன்னாவிற்குத்தான் தெரியும்..

தனித்த வீட்டைவிட அபார்ட்மெண்டில் மக்கள் புழக்கம் இருக்கும்.. அக்கம் பக்கத்து வீடுகளில் நட்பாகப் பேசாவிட்டாலும் சண்டையாகப் பேசலாம்.. மாதாமாதம் நடக்கும்

அபார்ட்மெண்டின் மீட்டிங்குகளில் நானும் ஒரு அங்கத்தினன் என்று கலந்து கொள்ளலாம்.. பொதுப் பிரச்னைகளில் தலைக் கொடுக்கலாம்..

ஆக மொத்தம் அபார்ட்மெண்டின் ஒரு பிளாட்டில் வாழ்வதென்பது கூட்டுக் குடித்தனத்தில் வாழ்வதைப் போலவே இருக்கும்.. அந்த வாழ்க்கைக்கு ஆசைப்பட்டுத்தான் ரகுவரன் தனி வீட்டை வாங்கிக் குடி போகாமல் அபாட்மெண்டில் ஒரு பிளாட்டை வாங்கிக் குடி போனான்..

ரகுவரனைப் பார்க்க அடிக்கடி அவன் பிளாட்டிற்கு போய் வந்த தருணங்களில்தான் பிரசன்னா ரகுவரனின் மனதில் காதல் உணர்வுகள் துளிர்த்து விட்டதை அறிந்து கொண்டான்..

காலத்தை விரயம் செய்ய விரும்பாத ரகுவரன் எதற்காக மணிக் கணக்கில் பால்கனியில் நின்று வானத்தை வேடிக்கை பார்க்கிறான்..?

# 14

*ரகுவரன் மெக்கானிக்கல் என்ஜினியர்.. வானிலை ஆராய்ச்சியாளன் அல்ல..*

*அப்படியிருக்கும் போது வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும்.. விதியே என்று வீணாக்காமல்.. உருப்படியாக எதையாவது செய்ய வேண்டும் என்ற உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் ரகுவரன் எதற்காக நகரும் மேகங்களை உற்று உற்றுப் பார்க்க வேண்டும்..?*

*அந்த வானிலை ஆராய்ச்சியின் பிண்ணனியில் ஏதோ ஒரு பைங்கிளி இருக்க வேண்டும் என்று இதுபோன்ற பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் பண்பட்டிருந்த பிரசன்னா உள்ளங்கையின் நெல்லிக் கனிபோல அறிந்து கொண்டான்..*

*அது யாராக இருக்கக்கூடும் என்று அவன் ஆராய்ந்த ஆராய்ச்சி அகழ்வாராய்ச்சியை விடத் தீவிரமாக இருந்தது..*

*ரகுவரனின் பிளாட் இருந்த அபார்ட்மென்டிற்கு எதிரே இருந்த வீடுகளில் எந்த இளம்பெண்ணும் தென்படவில்லை.. பேரிளம் பெண்கள்தான் தென்பட்டார்கள்..*

*‘இதுகளையா இவன் சைட் அடிக்கிறான்..?’*

*பிரசன்னாவிற்கு நம்பிக்கை வரவில்லை.. என்னதான் ரகுவரன் ஆண்ட்டி ஹீரோவாக*

இருந்தாலும் ஆண்ட்டிகளைக் காதலிக்கும் ஹீரோவாக ஆகியிருக்க மாட்டான் என்று மனதார அவன் நம்பினான்..

'இவன் 16 வயதுப் பெண்ணையே ஏறெடுத்துப் பார்க்க மாட்டான்.. 61 வயது ஆண்டியையா உற்று உற்றுப் பார்க்கப் போகிறான்..?'

அவனுடைய ஆருயிர் நண்பனின் மனதைக் கவர்ந்த கிளி, எந்தக்கிளி..? என்ற பிரசன்னாவின் தேடுதல் ஓர் தினம் முடிவுக்கு வந்தது.. அவனும் ரகுவரனும் பேசிக் கொண்டே நடந்த ஓர் தினத்தில் பூர்ணிமா எதிர் பட்டாள்.. ரகுவரனின் கடும்பாறை முகம் கனிந்து மென்மை அதில் மேவியது.. ஒரு கோடி சூரியன்கள்.. ஒன்று சேர்ந்து வந்ததைப் போல அவனது விழிகள் பிரகாசித்தன..

'ஆஹா..! இதுதான் அந்தப் பைங்கிளிா..?'

ரகுவரன் கோபக்காரன்.. அவனுக்கு எக்குத்தப்பாக கோபம் வரும் சமயங்களில் பிரசன்னாவே அவன் முகத்தைப் பார்த்துப் பேசப் பயப்படுவான்.. அந்த ரகுவரனின் முகத்தை அளவிட முடியாத ஆசையுடன் பூர்ணிமா பார்த்தாள்..

யாருடா இது என்ற பிரசன்னாவின் கேள்விக்கு எதிர் வீட்டுப் பெண் என்று ரகுவரன் பதில் சொன்னான்.. அடுத்த வீட்டுப் பெண் என்ற பழை....ய திரைப்படம் ஒன்றைப் பற்றி பிரசன்னா கேள்விப் பட்டிருக்கிறான்.. எதிர் வீட்டுப் பெண்

என்ற டைட்டில் அருமையா இருக்கே.. இதைப் பற்றித் திரைப்படத் தயாரிப்பாளர்களின் காதுகளில் போட்டு வைக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்..

அவனுக்கு சில திரைப்படத் தயாரிப்பாளர்களைத் தெரியும்.. அவர்களுக்கு இவனைத் தெரியாது என்ற மிகப் பெரும் சங்கடத்தால் அந்த யோசனையை கைவிட்டு விட்டு ரகுவரன் பால்கனியில் நின்று கொண்டிருந்தபோது இவன் மறைந்திருந்து எதிர் வீட்டுப் பால்கனியை ஆராய்ந்தான்.. அப்போதுதான் பூர்ணிமா மறைந்திருந்து ரகுவரனை நோட்டமிடுவதைக் கண்டு பிடித்தான்..

***“எங்கிருந்தாலும் அவளை***
***நீயறிவாய்..***
***அவளை உன்னையல்லால்***
***வேறு யாரறிவார்..?***
***பாவையுடன் பேச நாணமா..? – உன்***
***வீட்டுக்கு அவள் வர வேண்டாமா..?***
***மாயவா..! தூயவா..***
***மாதவா..! ரகுவரா..!***
***நீ மறைந்திருந்தே பார்க்கும்***
***மர்மம் என்ன..?”***

சபாவில் அமர்ந்து பாடுவதைப் போல சோபாவில் கால்களை மடித்துச் சம்மனம் போட்டு

அமர்ந்து பாகவதரைப் போல பிரசன்னா பாடியதில்..

"டேய்ய்....ய்.." என்று உரக்கச் சிரித்தான் ரகுவரன்..

"இது எத்தனை நாளா நடக்குது..?"

"எது..?"

கள்ளச்சிரிப்புடன் கேட்ட ரகுவரனின் முகத்தில் சன்னமான வெட்கம் பளிச்சிட்டதில் அயர்ந்து போனான் பிரசன்னா..

ஆண்கள் வெட்கப்பட மாட்டார்கள் என்று யார் சொன்னது..? முரட்டு ரகுவரன் வெட்கச் சிரிப்புடன் அகன்ற அந்த நொடி பிரசன்னாவின் மனதில் பசுமையாக பதிந்திருக்கிறது..

லோகநாதனால் அதிக நேரம் ஆராய்ச்சி பண்ண முடியவில்லை.. எந்தவித ரிப்பேரும் இல்லாமல் டயரின் ஓரமாகப் பதிந்திருந்த சின்னஞ்சிற ஆணியுடன் ஸ்கூட்டி ஜம்மென்று நின்று அவனைச் சவாலுக்கு அழைத்துக் கொண்டிருந்தது..

'சப்பை மேட்டரு..'

பத்தே நிமிடங்களில் சரி பண்ணி விடக் கூடிய வேலை அது.. அதுவும்கூடத் தேவையில்லை என்பது லோகநாதனின் அபிப்ராயம்.. வண்டியை நிறுத்தாமல் ஓட்டியிருந்தால் அந்தச் சின்ன ஆணி டயரில் புதைந்து அமுங்கியிருக்கும்.. பஞ்சர் ஆகியிருக்காது..

‘இதை முதலாளிகிட்ட யார் சொல்றது..?’

பலராமனைப் பார்த்தான்.. அவன் எதையாவது பண்ணித் தொலை என்று முணுமுணுத்தான்.. கதிர்வேலனோ பலராமன் சொல்வதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று காதோடு சொன்னான்..

“ஏண்டா.. நீங்க ரெண்டு பேரும் தப்பிச்சீட்டிங்க.. நான் மட்டும் மாட்டிக்கிட்டேன்ங்கிற ஆணவத்தில ஆலோசனை சொல்கிறீங்களாடா..?” அவர்களிடம் அடிக்குரலில் சீறினாலும் லோகநாதன் ரகுவரனின் கட்டளைக்கு அடி பணிந்து ஸ்கூட்டியை பார்ட் பார்ட்டாக பிரித்து விடுவதைப் போல பார்வையிட்டுக் கொண்டிருந்தான்..

“லோகு..” ரகுவரனின் குரலில்..

‘ஹப்பா..! விடுதலை கிடைச்சிருச்சுடா சாமி..’ என்று உற்சாகமாகிப் போன லோகநாதன்..

“சார்..” என்று எழுந்து நின்றான்..

“ஸ்கூட்டியை இன்னைக்குள்ள சரி பண்ண முடியாதில்ல..?”

ரகுவரனின் ஆழ்ந்த பார்வை லோகநாதன் என்ன பதிலைச் சொல்ல வேண்டும் என்று அறிவுறுத்தியதில் அவன் பூம்பூம் மாடாகி தலையசைத்து..

“ஆமாம் சார்..” போட்டான்..

“உங்களைக் கஷ்டப்படுத்த எனக்கும் கஷ்டமாத்தான் இருக்கு.. ஆனா பாருங்க.. ஸ்கூட்டி செம ரிப்பேர் கண்டிசனில இருக்கு..”

ரகுவரன் பூர்ணிமாவிடம் சொல்லிக் கொண்டிருக்க.. ‘அப்படியா..?’ என்பதைப் போல ஸ்கூட்டியைக் கள்ளப் பார்வை பார்த்து வைத்தான் லோகநாதன்..

அது கொம்பு முளைத்த காளை மாடு போல உறுமி அவன் மீது மோதக் கிளம்பி விட்டது போல பிரமை ஏற்பட்டதில் அரண்டு போனவனாக பார்வையைத் திருப்பி விட்டான்..

‘பழி ஓரிடம்.. பாவம் ஓரிடமா..?’ அங்கலாய்த்தது அவன் மனது..

“இன்னைக்குள்ள சரி பண்ண முடியாதுன்னு லோகு சொல்றான்..” தீவிரமாய் முகத்தை வைத்துக் கொண்டு ரகுவரன் சொன்னான்..

‘நான் எப்போச் சொன்னேன்..?’

பரிதாபமாக லோகநாதன் பலராமனைப் பார்த்தான்.. பலராமன் சிரிப்பை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டான்..

‘சிரிக்கவாடா செய்ற..?’

மௌனப் பார்வையுடன் நண்பனை முறைத்து விட்டு முதலாளி அடுத்ததாக என்ன கயிறைத் திரிக்கப் போகிறார் என்பதைக் கவனிப்பதில் கவனமானான் லோகநாதன்..

“நாளைக்கு ரெடியாகிரும்..”

பூர்ணிமா மறுநாளும் ஷெட்டிற்கு வர வேண்டும் என்று ரகுவரன் சொன்னதில் முகம் மலர்ந்து போனாள் பூர்ணிமா..

‘பார்த்தியா..?’

பலராமனின் விழி சமிக்ஞையில் ‘ஆமாம்டா..’ என்று பதிலுக்கு சமிக்ஞை செய்த லோகநாதன்..

“பரவாயில்லை.. அவசரமாப் பார்க்காம.. நிறுத்தி நிதானமாக செக் பண்ணி சரி பண்ணிக் கொடுங்க..”

என்ற பூர்ணிமாவின் அனுமதியில் ‘கேட்டுக்க’ என்பதைப் போல ஸ்கூட்டியைப் பார்த்து முறைத்தான்..

# 15

பூர்ணிமாவே முடிவு சொல்லி விட்டதில் மனம் தாங்காமல் மனம் தொய்ந்து போனதைப் போல ஸ்கூட்டி தரைப்பக்கமாக தலை கவிழ்ந்தது..

'விடு.. விடு.. உன் எஜமானியம்மாவோட காதலுக்கு நீதானே சப்போர்ட் பண்ணனும்..' மானசீகமாக ஆறுதல் சொல்லி அதைத் தேற்றி நிமிர வைத்தான் லோகநாதன்..

"அப்ப.. கிளம்பறேன்.." எழுந்து கொள்ள மனமில்லாமல் சொன்னாள் பூர்ணிமா..

"கூல்டிரிங்க் குடிக்காம கிளம்புவீங்களா..?" விழிகளை உருட்டினான் ரகுவரன்..

உரிமை கலந்த அவனது உபசரிப்பு பூர்ணிமாவைத் தாலாட்டியது.. அவனருகே இருக்கும் நேரம் நீடிக்கப்பட்டதில் குதூகலமானாள்.. சின்னக்குழந்தை பலூனைப் பார்ப்பதைப் போல ரகுவரனையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

ரகுவரனின் பார்வையில் கதிர்வேலன் ஷெட்டில் இருந்த பிரிட்ஜைத் திறந்து கூல்டிரிங் பாட்டிலுடன் வந்தான்..

“நீங்க..?” பூர்ணிமா தயங்கினாள்..

ரகுவரனின் கையிலும் கூல்டிரிங்க் பார்ட்டில் வந்தது..

“இவங்க..?” மற்றவர்களைக் குறித்த பூர்ணிமாவின் தயக்கத்தில் எல்லோரும் கூல் டிரிங்க் பாட்டில்களைக் கைப்பற்றினார்கள்..

பகிர்ந்துண்ணும் அவளது குணத்தில் அவர்களுக்கு அவள்மீது பாசம் வந்தது.. தயாள குணம் கொண்ட ரகுவரனுக்கு ஏற்ற மனைவி இவளாகத்தான் இருக்க முடியுமென்று தங்களுக்குள் தணிந்த குரலில் பேசிக் கொண்டார்கள்..

எல்லோரும் கூல்டிரிங்ஸை ஒரே மூச்சில் உறிஞ்சிக் காலி பண்ண.. ரகுவரனும் பூர்ணிமாவும் சொட்டுச் சொட்டாக உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள்..

என்னதான் சொட்டுநீர் பாசனம் போலச் சொட்டுச் சொட்டாக உறிஞ்சினாலும் ஒரு கட்டத்தில் ஒரு சொட்டுக்கூட மீதமில்லாமல் கூல்டிரிங்க் பாட்டில் காலியாகத்தானே செய்யும்..?

காலியாகிவிட்ட பாட்டில்களை பிரிய மனமில்லாமல் அவர்கள் கொடுக்க..

இரக்கத்துடன் அவர்களைப் பார்த்தபடி வாங்கி மூலையில் வைத்தான் கதிர்வேலன்..

இனிக் கிளம்பித்தான் ஆக வேண்டும் என்ற பெருமூச்சுடன் பூர்ணிமா எழுந்து நின்றாள்..

"ஸ்கூட்டி இங்கே நிக்குது.. நீங்க எப்படி வீட்டுக்குப் போவீங்க..?" புருவங்களை உயர்த்தினான் ரகுவரன்..

அந்தச் சமயம் பார்த்தா வாசலில் ஆட்டோ போக வேண்டும்..? அனிச்சையாக ஆட்டோவை பலராமன் பார்க்க.. அவனைக் கண்டனத்துடன் ரகுவான் பார்க்க..

'மாட்டிக்கிட்டியாடா மச்சான்..?' என்று மகிழ்ந்து போய் லோகநாதன் பார்த்தான்..

'அப்புறமா இருக்குடா மச்சான் உனக்கு..' பதிலுக்கு பலராமனும் முறைப்பாய் பார்த்தான்..

பறவைகள் பலவிதம் என்பதைப் போல அங்கே பார்வைகள் பலவிதமாக இருந்ததைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த பிரசன்னா இயல்பாக சொல்வதைப் போல..

"நீயும் வீட்டுக்குத்தானே கிளம்பிக்கிட்டு இருந்த ரகு..? சிஸ்டரோட வீடு உன்னோட அபார்ட்மென்டுக்கு எதிர் வீடுதானே.. உன்

*காரில நீ டிராப் பண்ணிற வேண்டியதானே..?"* என்று எடுத்துக் கொடுத்தான்..

*'நீதாண்டா தோழன்..!'*

ரகுவரனின் முகத்தில் பிரசன்னாவைக் கட்டிக் கொள்ளும் உத்தேசம் தெரிந்தது..

*'அதெல்லாம் அப்புறம்..!'* என்று பூர்ணிமாவை விழிகளால் சுட்டிக் காட்டி உடனடியாக நண்பன் ஆற்ற வேண்டிய காதல் கடமையை நினைவுறுத்தி ஆற்றுப் படுத்தினான் பிரசன்னா..

அன்றே கொடுத்து விடுவதாக வாக்களித்திருந்த காரை அம்போ என விட்டு விட்டு.. பூர்ணிமாவை வீட்டில் விடும் கடமையாற்றத் தன் கார்ச் சாவியை கையிலெடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான் ரகுவான்..

ரகுவரனுடன் காரில் போகப் போகிறாள் என்பதை நம்பவே முடியாமல் திண்டாடிப் போனாள் பூர்ணிமா.. அவனைப் பார்க்க வேண்டும் போல் இருந்ததால் ஸ்கூட்டியின் டயரை வேண்டுமென்றே பழுதாக்கி அவனுடைய ஷெட்டிற்கு வந்து நின்றாள்.. அதுவே மனதுக்குள் உதைத்து இம்சை செய்து பாடாய் படுத்தியது.. வீட்டுக்குத் தெரியாமல்

அவனைத் தேடி வந்து விட்ட குற்ற உணர்வு அவள் மனதை ஆக்ரமித்திருந்தது..

எல்லாமே அவனைப் பார்க்கும் வரையில்தான்.. அவனைப் பார்த்த நொடியில் குற்ற உணர்வும், உதைப்பும் ஓடிப் போய் விட்டன.. ரகுவரனின் ஆழ்ந்த பார்வை மட்டுமே அவளை ஆளுமை செய்தது..

அவள் கோட்டை போட்டால் அவன் அதில் சாலையை அமைத்து இரு புறமும் பூமரங்களை நட்டுத் தேரை ஓட்டினான். சிறு பொறியையும் நெருப்பாக்கிக் காட்டினான்.. அவளுக்கே தெரியும்.. அவளது ஸ்கூட்டியில் எந்தப் பழுதும் இல்லையென்று.. புத்தம்புது ஸ்கூட்டி அது.. அதிலாவது.. பழுது இருப்பதாவது..

புதுடயரின் மீது குத்தியிருந்த ஆணியை அப்புறப் படுத்திச் சரிபண்ணா சில நிமிடங்களே போதும் என்பதை பூர்ணிமாவும் அறிவாள்.. சில நிமிடங்களை இருபத்தி நான்கு மணி நேரத்துக்கும் அதிகமாக்கி மறுநாள் தான் ஸ்கூட்டி கிடைக்கும் என்று ரகுவரன் சொல்லியதில் பூர்ணிமாவின் மனம் சிறகை விரித்துப் பறந்தது..

அவளை மறுநாளும் ஷெட்டில் பார்க்க அவன் ஆசைப் படுவதை தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டதில் மனம் கற்கண்டாகத் தித்தித்தது..

அடுத்த ஜாக்பாட்டாக அவனுடைய காரில் போகலாமென்று அவன் அழைத்ததில் அவளுக்குள் ஆனந்தத் தேன் காற்று அலை மோதியது.. அவனைப் பார்த்தால் போதும் என்று ஏங்கிய மனதுக்கு தெவிட்டத் தெவிட்டக் கிடைத்த சந்தர்ப்பங்களில் மூழ்கிப் போனவளாக மறுக்காமல் அவன் காரில் ஏறிக் கொண்டாள்..

“இந்த மக்லானி ஷேட் வந்தா என்ன சொல்லனும் ரகு..?” என்று எதையோ கேட்பதைப் போல ரகுவரனின் அருகில் வந்த பிரசன்னா சன்னக்குரலில்..

“ஆல் தி பெஸ்ட்..” என்று வாழ்த்தினான்..

“தேங்க்யுடா..” அர்த்தத்துடன் நன்றி சொன்னான் ரகுவரன்..

காரின் பின் பக்கக் கதவின் பக்கம் பூர்ணிமா போனாள்.. அதை மறைத்து நின்று முன் பக்கக் கதவை அவளுக்காக திறந்து விட்டான் ரகுவரன்.. தயங்கியவளை அவன் தீர்க்கமாகப் பார்த்து வைத்ததில் மனம் படபடக்க

உதட்டைக் கடித்தபடி முன் பக்கமே ஏறிவிட்டாள்.. ரகுவரனின் முகத்தில் திருப்திவந்தது.. அவனது ஓர் பார்வைக்கு அவள் அடி பணிவதில் அவனது ஆண்மனம் கர்வம் கொண்டது..

கார் கிளம்பியது.. நண்பன் திருமணக் கோலத்தில் ஊர்கோலம் போவதைப் போலக் கண்கள் பனிக்கக் கார் மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தான் பிரசன்னா..

“ஜோடிப் பொருத்தம் பிரமாதமா இருக்கு சார்..” என்றான் பலராமன்..

“ஆமாம் ராமு..”

பிரசன்னாவின் மனதில் நண்பனின் காதல் நிறைவேற வேண்டும் என்ற பிரார்த்தனை எழுந்தது..

பக்கத்தில் பூர்ணிமா இருக்கக் காரை ஓட்டிக் கொண்டிருந்த ரகுவரனின் மனதில் அதுபோல எல்லாம் பிரார்த்தனை எழவில்லை.. எவரையும் திரும்பிப் பார்க்காமல் கடந்து கொண்டிருந்த ரகுவரனை பூர்ணிமாதான் திரும்பிப் பார்க்க வைத்தாள்.. அவனைக் கண்டதும் அவளிடம் தோன்றிய வெட்கம் கலந்த தடுமாற்றம் அவனை வியப்புடன் பார்க்க வைத்தது.. யார் இவள் என்று கேட்க

வைத்தது.. முள் போன்ற அவனது சுபாவத்திற்கு அஞ்சி மற்றவர்கள் எட்டி நின்றபோது மலர் போன்ற பெண்ணொருத்தி அவனிடம் மயங்கி நின்றதை விந்தையிலும் விந்தையாக உணர்ந்தான்..

நாணத்துடன் அவனை அவள் கள்ளப் பார்வை பார்ப்பதை வெகுவாக அவன் விரும்பினான்.. ரசித்தான்.. அவளது அமைதியான அகல் விளக்குப் போன்ற அழகு அவனை வசீகரித்தது.. பெண்மை மிளிரும் அவளது தன்மை அவனைக் கவர்ந்தது.. அவனிடம் மயங்கும் அவளது பார்வை அவனை ஈர்த்தது..

அவன் மனதோடு உறவாகும் அவளது பார்வையில் அவன் காதல்வசப்பட்டு விட்டான்..

# 16

***“வெந்நிலவே..! வெந்நிலவே..!***
***விண்ணைத் தாண்டி வருவாயா..?***
***விளையாட ஜோடி தேவை..”***

**கா**ரில் சி.டி இசைத்தது.. துள்ளலும் துடிப்பும் கலந்த பாடலின் இசை மனதுக்குள் நுழைந்து யாழ் மீட்டியது.. பக்கவாட்டில் இருந்த பூர்ணிமாவைப் பார்த்தான் ரகுவரன்.. அவனைப் போல நேர்கொண்ட பார்வை பார்க்காமல் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த பூர்ணிமா தடுமாறிப் போனாள்.. ரகுவரனின் மனமோ மத்தளம் வாசித்தது..

‘இவள் வெந்நிலவுதான்..’

பூரண சந்திரனைப் போன்ற அவளது நிலா முகத்தைப் பார்க்கப் பார்க்க.. இவள் மனதில் நான் எப்படி வந்தேன் என்று ஆச்சரியப் பட்டுப் போனான் ரகுவரன்.

பணக்காரத்தனம் நிறைந்த அந்த அபார்ட்மெண்டில் பிளாட்டை வாங்கியபோது எதிர்வீட்டில் ஒரு நிலவு குடியிருக்கிறாள்.. அவன் வரவுக்காக

காத்திருக்கிறாள் என்று எவரேனும் ஆருடம் சொல்லியிருந்தால்..

‘ஹ..’ என்று அலட்சியப் படுத்தியிருப்பான்..

நீ காதலில் விழுவாய் என்று கணித்திருந்தால்..

‘எனக்காவது.. காதல் வருகிறதாவது..’ என்றிருப்பான்..

நிஜமாக ஓர்நாள் அவன் நிலவு முகம் கொண்ட பூர்ணிமாவைப் பார்த்தான்.. முதல் பார்வையில் அவனை ஈர்த்தது அலட்டலில்லாத அமைதி ததும்பும் அவளது சுபாவம்தான்.. மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.. அவனை ஏறிட்டுப் பார்த்த பார்வையில் ஓர் மருட்சி..

அவனுக்கு வியப்பாக இருந்தது.. மானைப் போல மருண்ட அவளது பார்வையில் அவன் மனதுக்குள் சலனம் வந்தது.. ஏன் இப்படிப் பயப்படுகிறாள் என்று யோசித்தான்.. அந்த அபார்ட்மென்டில் அவனுக்கு ‘ரௌடி’ என்று அடையாளம் இருந்தது.. அது தெரிந்ததினால்தான் பயப்படுகிறாள் போல என்று நினைத்துக் கொண்டான்.. அந்த நினைவு ஏமாற்றத்தைத் தந்தது..

அடுத்து வந்த நாள்களில் அவள் எதிர்படும் போதெல்லாம் மருட்சி கொண்ட அவளது விழிகளை உற்றுப் பார்ப்பான்.. அவள் முகம் சிவந்து அவன் மனதில் தென்றலை வர வைப்பாள்.. அவளது மருட்சி இயற்கையானது என்பதைப் போகப் போகப் புரிந்து கொண்டவனுக்கு அவளைப் பிடித்து விட்டது..

ஒரு பெண் அமைதி ததும்பும் அழகோடு இருக்கிறாள்.. பெண்மையின் மென்மையைத் தனது ஒவ்வொரு அசைவிலும் பிரதிபலிக்கிறாள்.. எந்தப் பெண்ணாலும் அசைக்க முடியாத அவன் மனதை அசைத்து விட்டாள்..

இதற்காகவெல்லாம் அவளிடம் காதல் சொல்ல ரகுவரனால் முடியாது.. இயற்கையின் அழகை ரசிப்பவன் தள்ளி நின்று ரசிக்க வேண்டும்.. வேரோடு பறிக்க முயலக் கூடாது என்ற கொள்கையுடையவன் அவன்..

பூ அழகாக இருக்கிறது.. வசீகரிக்கிறது என்பதற்காக அதைச் செடியிலிருந்து கொய்து கசக்கி முகர்வதா..? அது ஆராதனைக்குரியது அல்லவா..?

ஆராதனைக்குரிய பூர்ணிமாவின் அழகைத் தள்ளி நின்று ரசிக்க ஆரம்பித்த போதுதான் அதை அவன் உணர்ந்தான்.. ஆச்சரியத்திலும் ஆச்சரியமாய் பூர்ணிமா அவனிடம் தடுமாறத் தொடங்கினாள்.. அவளது பார்வை அவனைத் தேடியது..

முதலில் அவன் நம்பவில்லை.. இருக்காது என்றுதான் நினைத்தான்.. கட்டுக் கோப்பான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள், தான்தோன்றியாக இருக்கும் ரவுடியை விரும்புவாளா..?

அவள் விரும்பினாள்.. அதை பார்வையில் உணர்த்தினாள்.. ரகுவரனின் வாழ்வில் உயிர்ப்பு வந்தது.. அவன் கடந்து வந்த காலத்தின் துயரங்களை அவளது பாசம் மறக்கடித்தது.. எந்தவிதச் சம்பந்தமுமில்லாத ஒருவனைச் சொந்தத்துடன் பார்த்த அவளது பார்வையில் அவனது தனிமை பொசுங்கிச் சாம்பலானது.. விதி அவனை வஞ்சித்து விட்டது என்ற எண்ணத்துடன் இருந்த கோபக்காரனை உனக்காக நானிருக்கிறேன் என்று சிறு பார்வையில் அவள் அமைதிப் படுத்தினாள்..

ரகுவரனின் மனதில் பூர்ணிமா ஆழமாக பதிந்து விட்டாள்.. அதற்காக அளைத் துரத்தித் துரத்திக் காதலிக்க அவன் யத்தனிக்க வில்லை.. அவன் வீட்டின் ஜன்னலின் இருந்து பார்த்தால்,

அவளது வீடு தெளிவாகத் தெரியும்.. அங்கிருந்து பூர்ணிமாவின் நடமாட்டத்தைப் பார்ப்பான்.. தள்ளி நின்று அவளது அழகை ரசித்தால் போதுமென்ற நிறைவுடன் இருந்து விடுவான்.. சந்திப்புகளை உருவாக்க வேண்டுமென்று நினைத்ததில்லை..

அவன் நினைத்திருந்தால் அவன்மீது அவள் காட்டும் ஈடுபாட்டைப் பயன்படுத்திக் கொண்டு அவளிடம் காதலை வலியுறுத்தியிருக்கலாம்.. சந்திப்புகளை உருவாக்கியிருக்கலாம்.. அவள் மனதைச் சலனப் படுத்தியிருக்கலாம்..

அப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்று அவன் நினைத்தும் பார்த்ததில்லை.. அவனைத் தன் காதலால் கௌரவித்த அவளது காதலை அவன் கௌரவித்தான்.. இடைவெளி விட்டுத் தள்ளி நின்று பார்வையாலே காதல் செய்தவளிடமிருந்து இவனும் தள்ளியே

நின்றான்.. இடைவெளியைக் குறைக்க முனையவே இல்லை..

அவன்மீது பற்றுதல் கொண்டவளின் மீது அவனுக்கு இருந்த அன்பு அளவிட முடியாதது.. இருந்தும் அவன் அதை வெளிக் காட்டியதேயில்லை.. எதிர்பாராமல் அவன் வழியில் அவள் எதிர்பட்டு விட்டால் அவன் விழிகளில் தோன்றும் மின்னலைத்தான் அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.. ஆவலுடன் அவனைப் பார்க்கும் அவளது நாணப் பார்வையில், அவனது பார்வையைச் சந்திப்பவளிடம் தோன்றும் தடுமாற்றத்தில், நடக்க முடியாமல் அவளது கால்கள் பின்னுவதில் அவனுக்குள் மத்தாப்பூ மலரும்..

அவனைப் பார்க்க வேண்டும் என்ற அவளது ஆசையை அவளது வெட்கம் தடுப்பதில் அவள் திண்டாடித் திணறுவதை உணர்பவனுக்கு சிலிர்ப்பாக இருக்கும்.. கர்வம் பொங்கும்.. அவளால் முடியாததை அவன் செய்து வைப்பான்.. நேர் கொண்ட ஆழ்ந்த பார்வையில் அவளைக் குளிர்விப்பான்.. வேக நடையைக் குறைத்து வெகு நிதானமாக அவளைக் கடப்பான்.. அவளிடம் பேச வேண்டிய தருணங்கள் வாய்த்தால்

தடையின்றிப் பேசுவான்.. அதில் அவள் சந்தோசம் கொள்வதை உணர்பவனுக்குள் இதம் பரவும்..

அவனுக்காக உருக ஒரு பெண் இருக்கிறாளா..?

ரகுவரனின் வாழ்க்கை வண்ணமயமானதாக உருமாறியது.. அவனுடைய அபார்ட்மெண்டிற்கு இயல்பாக வந்து போய் கொண்டிருந்த பூர்ணிமாவின் வருகை குறைந்து போனது.. அவளுக்குப் பதில் சுபா எதிர்வீட்டுக்குப் போய் வர ஆரம்பித்ததில் இவன் யோசித்தான்.. ஏனென்று புரிந்து விட்டது..

சுபா பூர்ணிமாவின் மனதை இனம் கண்டிருக்க வேண்டும்.. அவளைப் பார்க்கப் பூர்ணிமா வந்து போனதினால்தான் ரகுவரனின்மீது காதல் கொண்டு விட்டாள் என்று பூர்ணிமாவின் குடும்பத்தார் சுபாவைக் குற்றம் சாட்டி விடக் கூடுமென்று பயந்து அதைத் தவிர்க்க பூர்ணிமாவைத் தடுத்து நிறுத்தியிருக்கிறாள்.. நீ என் அபார்ட்மெண்டிற்கு வர வேண்டாம்.. அதற்குப் பதில் நான் உன் வீட்டிற்கு

வருகிறேன் என்று புதிய பாதை வகுத்திருக்கிறாள்.

தன் பிளாட்டில் இருந்தபடியே பூர்ணிமாவின் வீட்டை நோட்டமிட்டவனுக்கு பூர்ணிமாவின் தவிப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது.. அவனைப் பார்க்க முடியாமல் அவளது முகம் வாடுவதைக் கண்டவனின் மனதில் துயரம் மேவியது..

‘முள்ளின் மீது ஏன் ஆசை கொண்டாய் மலரே..?’ மனதுக்குள் கேட்டுக் கொண்டான்..

சுபாவின் நோக்கத்தில் அவனால் தவறு காண முடியவில்லை.. எந்தத் தோழிதான் சாத்வீகமான பெண் ரவுடியைக் காதலிப்பதை ஒப்புக் கொள்வாள்..?

பூர்ணிமாவின் முக வாட்டத்தைப் போக்க வழி கண்டு பிடித்தான் ரகுவரன்.. அவனுக்காக ஏங்கும் அந்த அமைதியான பெண்ணின் ஏக்கத்தை அவளறியாமல் தீர்க்க பால்கனிக்கு வந்து நிற்க ஆரம்பித்தான்..

# 17

'உனக்கு என்னைப் பார்க்க வேண்டுமா..?'

மறைந்திருந்து அவனைப் பார்ப்பவளைப் பார்ப்பவனின் மனம் கனியும்.. அப்படி அவனிடம் என்ன அழகைக் கண்டாள் என்று கேட்க வேண்டும் போல இருக்கும்..

பூர்ணிமாவின் மனதை அறிவதற்கு முன்னால் அவன் மெக்கானிக் ஷெட்டிலேயும், ஆட்டோ மொபைல் ஷாப்பிலேயும் தான் பொழுதைக் கழிப்பான்.. அவ்வளவு சீக்கிரத்தில் கிளம்ப மாட்டான்.. பிரசன்னா தலையில் அடித்துக் கொண்டால்..

"எனக்காக எந்தப் பெண்டாட்டிடா காத்திருக்கா..?" என்பான்..

அந்த ரகுவரன் மணி ஆறடித்ததும் டாண் என்று வீட்டுக்குக் கிளம்ப ஆரம்பித்த போது..

"இப்போ எந்தப் பெண்டாட்டி உனக்காக காத்திருக் கிறாளாம்..?" என்று வம்பிழுத்தான் பிரசன்னா..

"டேய்ய்..."

அவனது கேலியை ரசித்து ரகுவரன் சிரித்த சிரிப்பு உண்மையாகவே அவனுக்காக ஒருத்தி காத்திருக்கிறாள் என்பதை பிரசன்னாவுக்கு உணர்த்தி விட்டது..

“டேய்ய்..?” பிரசன்னா ஆச்சரியமானான்..

தெருமுனையில் கார் திரும்பும்போதே வேகத்தைக் குறைத்து.. நகர்த்தியபடி பூர்ணிமாவின் வீட்டுப் பால்கனியைப் பார்ப்பான் ரகுவரன்.. இருளில் மறைந்திருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் பூர்ணிமாவின் உருவம் மெலிதான வெளிச்சத்தில் கோட்டோவியம் போல வடிவாகத் தெரியும்.. அவனுக்காக அவள் காத்திருக்கிறாள் என்பதில் அவனது ரத்த நாளங்கள் சூடேறும்.. உடலின் அனைத்துச் செல்களும் ஆர்ப்பரிக்கும்.. மெதுவாக நகர்ந்து வரும் கார் கேட்டை நெருங்கும் போது காரின் உள் விளக்குகளைப் போடுவான்.. அவனை அவள் நன்றாகப் பார்க்கும் வரை வாட்ச்மேனிடம் பேசிக் கொண்டிருப்பதைப் போல நேரத்தைக் கடத்துவான்.. நிமிடங்கள் கழிந்த பின் கேட்டைக் கடந்து காரை பார்க்கிங் பகுதியில் பார்க் செய்து விட்டு மின்னலாக படிகளைக் கடந்து அவனுடைய பிளாட்டுக்குள் புகுந்து மின்விளக்குகளை எரிய விடுவான்.. ஒளிரும் அவனது பிளாட்டின் ஒளி வெள்ளத்தில் பூர்ணிமாவின் மனம் ஒளிரும் என்பதை அவன் அறிந்து வைத்திருந்தான்.. ஏது மறியாதவனைப் போல பால்கனி விளக்கைப் போட்டு விட்டு பால்கனியில் வந்து நிற்பான்.. மறந்தும் பூர்ணிமா மறைந்து நிற்கும் திசையைப் பார்க்க மாட்டான்.. அவள் மறைந்திருந்து

பார்ப்பதை அவன் அறிய மாட்டான் என்ற அவளது நிம்மதியைக் குலைக்க மாட்டான்.. அவளுக்கு விடுதலையுணர்வைத் தருவான்..

ரகுவரன் ஒரு கொடை வள்ளல்..!

அவனுடைய பிரியத்தை யாசித்த பூர்ணிமாவுக்கு அவள் கேட்ட பிரியத்தை அள்ளியள்ளி வழங்கினான்.. அதை அவளறியாமல் செய்தான்.. அவளுடைய காதலை அவன் உணர்ந்திருப்பதைக் காட்டிக் கொண்டேயில்லை..

“ஏண்டா..?” எனும் பிரசன்னாவின் ஆதங்கத்திற்கு..

“ம்ப்ச்.. அவ தேவதைடா.. அகல்விளக்கு..! எந்த வகையிலயும் நான் அவளை டிஸ்டர்ப் பண்ணக்கூடாதுடா..” என்பான்..

காதலிப்பவளிடம் காதலைக் காட்டுவது தொந்தரவு செய்வதாக ஆகிவிடுமா..?

பிரசன்னாவின் சிற்றறிவுக்கு விளங்கவேயில்லை..

“உன் காதலைச் சொல்லாம விட்டுட்டா அவ வேற யாருக்காவது கழுத்தை நீட்டிட்டுப் போயிருவாளேடா..”

பிரசன்னாவின் இந்தக் கேள்விக்கு ரகுவரன் பதில் சொல்லவேயில்லை.. அவன் அதைத்தான் விரும்புகிறானோ என்ற சந்தேகம் பிரசன்னாவுக்கு வந்து தொலைத்தது..

ரகுவரனிடம் அச்சந்தேகத்தை வெளிப்படுத்தியபோது ஆழ்ந்த அமைதியுடன்..

“காதலிக்காக காதலை தியாகம் செய்யலாம்.. தப்பில்லை..” என்றான்..

ரகுவரனுக்கும் அந்த ஆழ்ந்த அமைதியான பதிலுக்கும் சற்றுக்கூடப் பொருந்தவில்லையென்று பிரசன்னா எரிச்சல் பட்டான்..

“நீயாடா இப்படிப் பேசற..? ஆசைப்பட்ட பெண்ணைத் தூக்கிட்டு வந்து தாலி கட்டற வீரன்டா நீ.. உன்மேல ஆசைப்படறான்னு தெரிஞ்சும் விட்டுக் கொடுத்துருவேன்னு சொல்றியே.. எப்படிடா..?” ஆத்திரத்துடன் சொன்னான்..

“அது அப்படித்தான்..”

பிரசன்னாவை நிமிர்ந்து பார்த்த ரகுவரனின் பார்வையில் ஏதோ இருந்தது.. அது என்னவென்றுதான் புரிபடவில்லை..

“என்னடா..?” ரகுவரனிடமே கேட்டான் பிரசன்னா..

“வேற ஒருத்தனுக்கு அவ கழுத்தை நீட்டுவான்னு எதை வைச்சு நீ சொல்ற..?”

“ரகு..?”

“பேசிப் பழகினாத்தான் காதலா..? அவ காதலோட லெவலே வேற.. உனக்குச் சொன்னாப் புரியாது..”

அதற்கு மேல் பூர்ணிமாவின் காதலைப் பற்றிய பேச்சை வளர்க்காமல் வேறு பேச்சிற்கு தாவிவிட்டான் ரகுவரன்.. பூர்ணிமாவின் காதலைப் பற்றி பிரண்ணாவிடம் அதிகம் பேச மாட்டான்.. பிரசன்னாவாகக் கேட்டாலும் பேச்சை மாற்றி விடுவான்.. பூர்ணிமாவின் உன்னதமான காதலை அவன் போற்றிப் பாதுகாத்தான்.. மனதுக்குள் வைத்து ஆராதித்தான்.. ஒருபோதும் அதை மற்றவர்கள் அறிய விட்டதில்லை.. யாரோ எவேரா என்று இருப்பான்..

அத்தகைய காதலை அவனுக்குள் விதைத்த பூர்ணிமா அவனைத் தேடி அவனுடைய மெக்கானிக் ஷெட்டிற்கே வந்து விட்டதில் அவனுடைய காதல் வெற்றிப் படிகளில் அடியெடுத்து வைத்தது..

‘பார்த்துக்க.. இதுதான் இவ..!’

பிரசன்னாவை வெற்றிப் பார்வை பார்த்தவனின் விழிகளில் கர்வம் ததும்பியது.. பூர்ணிமாவை காரில் ஏற்றிக் கொள்ள வழி செய்த நண்பனுக்கு விழிகளால் நன்றி சொல்லி விட்டு அவளை முன் சீட்டில் தனக்குப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு காரை ஓட்ட ஆரம்பித்தவனுக்கு சாலை அவனுக்கு ரத்தினக் கம்பளம் விரித்திருப்பதைப் போல அழகு பெற்றுத் தோன்றியது..

அருகிலிருந்த பூர்ணிமாவை சொந்தத்துடன் பார்த்தான்.. பிரியம் ததும்பும் பார்வை.. அந்தப் பார்வையில் முகம் சிவந்தவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

அவன் வீட்டிற்கு அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டால் என்ன என்ற வேகம் பிறந்தது..

**"இந்த பூலோகத்தில்**
**யாரும் பார்க்கும் முன்னே**
**உன்னை அதிகாலை**
**அனுப்பி வைப்பேன்.."**

மனதை நிரப்பிய பாடலைக் கேட்டபடி காரின் வேகத்தைக் குறைத்தான்.. எதையோ சொல்ல முயன்றவளாகத் தவித்தாள் பூர்ணிமா.. அவன் முகத்தைப் பார்ப்பதும் அவன் பார்த்து விட்டால் பதறிப் போய் கை விரல்களைப் பார்ப்பதுமாக நடுங்கினாள்..

'என்ன சொல்ல விரும்புகிறாய்..?' மனதுக்குள் கேட்டுக் கொண்டான் ரகுவான்..

எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல் என்று எப்படி அவளிடம் சொல்வான்..?

அவனுக்கு தயக்கமில்லைதான்.. அவள் தயங்குகிறாளே.. அந்தத் தயக்கத்தை உடைப்பது நாகரிகமாகுமா..?

அவனுடைய மெக்கானிக் ஷெட்டில் இருக்கும் வரை தயக்கமின்றி பேசியவள் காருக்குள்

தனிமையில் இருக்கும் போது வாயடைத்துப் போனவளாக மௌனமாகி விட்டாளே..

அவளது மௌனத்திற்கு மதிப்புக் கொடுத்து தானும் மௌனமானான் ரகுவரன்.. பக்கத்தில் அவளிருப்பதே போதுமானதாக இருக்கும்போது பேச்சு தேவையற்றுப் போனது.. அழகான அந்தச் சூழலில் இருந்து விடுபட அவனுக்கு மனமில்லை.. அதைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பினான்..

**“மயங்கினேன்.. சொல்லத் தயங்கினேன்..**
**உன்னை விரும்பினேன் உயிரே..!”**

சிடியில் பாடல் மாறியதில் அதிர்வு தோன்றியவளாக சட்டென அவனைப் பார்த்தாள் பூர்ணிமா.. அவனும் அவளைப் பார்த்ததில் மயங்கிப் போனாள்.. அவள் விழிகளில் ததும்பிய மயக்கத்தில் கரைந்து போன ரகுவரன் காரை ஓரம் கட்டி நிறுத்தி விட்டான்..

# 18

*மரங்கள் அடர்ந்த சாலையின் ஓரத்தில் உதிர்ந்த பூக்கள் சிதறிக் கிடந்தன.. பூக்களின் நிறம் ஆரஞ்சா இல்லை சிவப்பா என்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை.. ஆழ்ந்த அவனது பார்வை.. அவளை வசியம் செய்வதைப் போல இருந்ததில் நாணப் பட்டவள் பூக்களைப் பார்த்தாள்.. ஏனோ.. திரைப்படங்களில் வரும் டூயட் பாடல் காட்சியை அந்தப் பூக்கள் நினைவு படுத்தின.. ஒரு நொடி அவளும் ரகுவரனும் அந்த மரங்களைச் சுற்றி வந்து ஆடிப் பாடுவதைப் போலக் கற்பனை செய்து பார்த்தாள்.. நினைக்கும் போதே மனது இனித்தது.. அவளையுமறியாமல் பாடலுடன் இசைந்து பாடினாள்..*

***"மயங்கினேன்.. சொல்லத் தயங்கினேன்..***
***உன்னை விரும்பினேன் உயிரே..!***
***தினம் தினம் உந்தன் தரிசனம்..***
***பெறத் தவிக்குதே மனமே..!***
***இங்கே நீயில்லாத***
***வாழ்வும் வாழ்வா..? ஹோய்.."***

*அவன் முகத்தைப் பார்த்துப் பாடியவளின் விரல்களைப் பற்றினான் ரகுவரன்.. நடுக்கத்துடன் விரல்களை உறுவிக் கொண்டாள் பூர்ணிமா.. ரகுவரன் மீண்டும் அவளது விரல் தொட*

முனையவில்லை.. அவளது நடுக்கத்திற்கு மதிப்புக் கொடுத்து..

“பூர்ணிமா..” என்று மென்மையாக அழைத்தான்..

“ம்ம்ம்..” கண்மூடி முணுமுணுத்தாள் அவள்..

“இதைக் கேட்டா சினிமாப்பாட்டுப் போலவே தோணலை.. நீ பாடறதைப் போலவே இருக்கு..”

இயல்பான ஒருமை அழைப்பு அவனுக்கு கை வந்து விட்டது.. எப்படியென்று தெரியவில்லை.. அவளை ‘நீ’ என்று சொல்லி விட்டான்..

அதில் பூரித்துப் போனாள் பூர்ணிமா.. அவன் முகத்தை மறைந்திருந்து பார்ப்பதற்காக தவம் கிடந்தவளுக்கு அவனது பிரியமே கிடைத்து விட்டதை நம்ப முடியாமல் கண் கலங்கி தடுமாறினாள்..

“நான்.. வந்து..”

சொல்ல நினைப்பதை சொல்ல முடியாமல் அவள் திக்கித் திணறியதில் பரிவு கொண்ட ரகுவரன்..

“எனக்குத் தெரியும்..” என்று இதமாகச் சொன்னான்..

“தெரியுமா..? எப்படி..?” விழி விரித்தாள் பூர்ணிமா..

“எப்படியோ தெரியும்.. அதைத் தெரிந்துக்கிட்டு என்ன செய்யப் போற..? ம்ம்ம்..?” அதட்டல் போல கேட்டான்..

“இல்லை.. என் மனசுக்குள்ள இருந்ததை நீங்க எப்படித் தெரிஞ்சுக்கிட்டிங்கன்னு..” மென்று விழுங்கினாள் அவள்..

“உன் மனசுதான் வந்து சொல்லுச்சு.. போதுமா..?” கண் சிமிட்டி சிரித்தான் அவன்..

“கண்ணடிக்கிறிங்களே..” இமை கொட்டினாள்..

“ஆமாம்.. அதுக்கு இப்ப என்ன..?”

சட்டையின் கைப்பகுதியை அவன் மடித்து விட.. ‘ரௌடி..’ என்று மனதுக்குள் செல்லமாக கொஞ்சினாள்..

சடசடவென மழை தூறியது.. அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மழை வலுத்தது.. பூர்ணிமாவின் விழிகளில் பயம் வந்தது..

“வீட்டுக்குப் போகனுமா..?” அவளது மனம் அறிந்தவனாக வினவினான் ரகுவரன்..

“ம்ம்ம்..” குழந்தை போல தலையசைத்தாள் பூர்ணிமா..

அவளின் தலையசைவு வசீகரித்ததில் தன் வயமிழந்து அவளை முத்தமிட மோகித்தான் அவன்.. கொட்டும் மழையும் காரின் தனிமையும்

மனதுக்குப் பிடித்தவளின் அருகாமையும் அவனுக்குள் கிளர்ச்சியைத் தோற்றுவித்தன.. அவளைத் தொட்டு விடத் துடித்த கரங்களைக் கட்டுப் படுத்திக் கொண்டு காரைக் கிளப்பி விட்டான்..

'ஊஹீம்.. இது கூடாது..'

அவன் மனதில் உறுதி பிறந்தது.. அவள் மலரைப் போன்றவள்.. பார்க்கும் பார்வையைக் கூடத் தாங்க முடியாத அனிச்ச மலர்..! அவன் மீதுள்ள காதலினால் நம்பி அவன் காரில் ஏறியிருக்கிறாள்.. அந்த நம்பிக்கையை அவன் சிதைத்து விடக் கூடாது..

அவர்களின் வீடுகள் இருக்கும் தெருவை நெருங்கும் போது மழை நின்று விட்டது.. அடுத்த தெருவிலேயே காரை நிறுத்தி விட்டான் ரகுவரன்.. அவள் சொல்லாமலே அவளது மனமறிந்து முதல் தெருவிலேயே அவன் காரை நிறுத்தி விட்டதில் நன்றியுடன் அவனைப் பார்த்த பூர்ணிமா..

"தேங்க்ஸ்.." என்றாள்..

அவன் முகம் கடுகடுத்தது.. என்ன தவறு செய்தோம் என்று புரியாமல் அவள் திகைத்தாள்..

"என்னாச்சு..?" என்று மலங்க மலங்க விழித்தாள்.

"கைக்கு வாய் தேங்க்ஸ் சொல்றதில்லை.." முறைத்தான் ரகுவரன்..

“இவ்வளவுதானா..? நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்..” முகம் மலர்ந்தாள் பூர்ணிமா..

அவனது கோபத்தைத் தாங்க மாட்டாமல் அவள் திகைத்து விழித்ததில் கோபம் குறைந்தவன்..

“இனிமே இதுபோல மூனாம் மனுசங்ககிட்ட பேசற மாதிரி தேங்க்ஸ் சொல்லக் கூடாது..” என்று கண்டித்தான்..

“தப்புத்தான் சாமி.. கன்னத்தில போட்டுக்கறேன்..”

பூர்ணிமா தன் கன்னங்களில் நிஜமாகவே கைகளால் தட்டியதில் அவன் முகத்தில் கடுமை மறைந்து சிரிப்பு பரவியது..

“தாஜா பண்றதில கெட்டிக்காரிதான்..” என்று சிரித்தான்..

“நீங்க தாஜா பண்ண வைக்கறதில கெட்டிக்காரராய் இருக்கீங்க..” குறைபட்டுக் கொள்வது போல அவளும் முறுவலித்தாள்..

சிரிக்கும்போது விழிகளும் சிரிக்க சிரித்த அவளது அழகில் சிரிப்பை நிறுத்திவிட்டு அவளையே அவன் பார்க்க முகம் சிவந்து விரல்களைப் பார்த்தாள்..

“சிரிக்கும் போது நீ ரொம்பவும் அழகா இருக்கே பூர்ணி..”

அவளது பெயரைச் சுருக்கி 'பூர்ணி..' என அவன் அழைத்ததில் சொக்கிப் போனாள் பூர்ணிமா.. அவளது வீட்டினரும் அவள் பெயரைச் சுருக்கி அழைப்பதுண்டு.. அப்போதெல்லாம் தோன்றாத ஒரு சந்தோசம் இப்போது அவளுக்குள் உண்டானது..

"மத்த நேரங்களில் நான் அழகா இல்லேன்னு சொல்லிக் காட்டறிங்களா..?" வம்புக்கு இழுத்தாள்..

"பாருடா.. ஊமை போல வேசம் போட்டியா..? இந்தத் தாக்குத் தாக்கற.." உல்லாசமாக அவன் கண்சிமிட்டினான்..

"எதுக்கெடுத்தாலும் கண்ணடிப்பீங்களா..?" காரை விட்டு இறங்கினாள் பூர்ணிமா..

"நாளைக்கு வருவதானே..?" எதிர்பார்ப்புடன் கேட்டான் ரகுவரன்..

"வரலைன்னா என் ஸ்கூட்டியை லவட்டிக்கலாம்ன்னு ஐடியா பண்ணியிருக்கீங்களா..?" தலையை ஒருபுறமாக சரித்து அவனை உரிமையுடன் பார்த்தபடி அவனைப் போலவே புருவங்களை உயர்த்தி இறங்கினாள் பூர்ணிமா..

"ஏய்ய்.. இது நீதானா..?" வியந்து போனான் அவன்..

"நானேதான் சார்.. என்னை நல்லாப் பார்த்துக்கங்க.."

அவள் சொன்னதுதான் சாக்கென்று அவளைக் கடித்துத் தின்று விடுவதைப் போல அவன் பார்த்து வைக்க..

“இப்படிப் பார்க்கச் சொல்லலை..” என்று வெட்கத்துடன் உதட்டைக் கடித்தாள் பூர்ணிமா..

“நீதானே பார்க்கச் சொன்ன..?” அவன் நியாயம் கேட்டான்..

“ஐயா சாமி.. ஆளை விடுங்க.. நான் அடையாளம் பார்த்துக்கச் சொன்னேன்..” பூர்ணிமா உதட்டைச் சுழித்தாள்..

“ஆக.. உன்னை அடையாளம் பார்த்துத்தான் என் நினைப்பில வைச்சுக்கனும்னு சொல்ற..?” அவன் குரல் மாறிவிட்டது..

பூர்ணிமா பதறிப் போனாள்.. அவனது குரல் மாறுபாட்டை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

“நான் விளையாட்டுக்குத்தான் சொன்னேன்..”

“இதிலென்ன விளையாட்டு..?”

“என் ஸ்கூட்டியை எடுக்க வாறப்ப கொடுக்க மாட்டேன்னு சொல்லிராதீங்க.. அடையாளம் பார்த்துக்கங்கன்னு சொல்ல வந்தேன்.. நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டிங்க..”

“நீ என்னைச் சரியாப் புரிஞ்சுக்கலை..”

“ரகு..”

அவளது தழதழப்பான அழைப்பில் அவன் பேசுவதை நிறுத்தி விட்டு இமைக்காமல் அவளையே பார்த்தான்.. மிரட்சியுடன் அவள் விழித்ததில் மென்மையானவன்..

"இனிமே இதுபோல பேசாதே.." என்றான்..

"ம்ம்ம்.." குழந்தையாக அவள் தலையை ஆட்டினாள்..

"போயிட்டு வா பூர்ணிமா.. நீ என்னை நினைவில் வைத்துக்கறியோ இல்லையோ.. நான் உன்னை என் நினைப்பில இருக்கிப் பிடிச்சு வைச்சிருப்பேன்.. மறக்க மாட்டேன்.. என் காதல் உன்னைத் துன்பப் படுத்தாது.. தொந்தரவு தராது.. ஆனா.. எங்கேயும் எப்போதும் உன்னைக் காதலிக்கும்.. உன்னை மட்டும் காதலிக்கும்.."

அழுத்தம் திருத்தமாக ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி நிதானித்து மந்திரம் போலச் சொன்னான் அவன்.. பிரமித்து போய் நின்றிருந்தாள் பூர்ணிமா..

# 19

*அன்றிரவு முழுவதும் தூங்காமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தாள் பூர்ணிமா.. அவளது பிரமிப்பு அகலவேயில்லை.. இதைப் போன்ற காதலைப் பெற என்ன தவம் செய்தாள் என்று மலைப்பாக இருந்தது.. மாலையில் வீடு வந்த விஸ்வநாதன் மகளிடம் ஸ்கூட்டியை எந்த மெக்கானிக் ஷாப்பில் விட்டாள் என்று கேள்வி கேட்ட போதுதான் பதில் சொல்ல முடியாமல் தவித்துப் போனாள்..*

*'ஸ்கூட்டர் ரிப்பேர்.. மெக்கானிக் ஷெட்டில் விட்டிருக்கிறேன்..' என்று அவள் சொன்னதை பாகீரதி கேட்டுக் கொண்டாள்.. விஸ்வநாதன் கேட்டுக் கொள்ளவில்லை.. எந்தக் கேள்வியை அவள் கேட்டு விடுவாரோ என்று அவள் பயந்து நடுங்கினாளோ.. அந்தக் கேள்வியை அவர் கேட்டார்..*

*"எந்த மெக்கானிக் ஷெட்..?"*

*பூர்ணிமாவுக்கு உதறலெடுத்தது.. என்ன நடக்கப் போகிறதோ என்று திகிலாக இருந்தது.. உதடு உலர்ந்தது.. தொண்டை வறண்டது.. நாக்குப் புரளாமல் மேலன்னத்தில்*

ஒட்டிக் கொண்டது.. விழிகள் நிலைகுத்த மயக்கம் வருவதைப் போல இருந்தது..

ரகுவரனின் ஆரோ மெக்கானிக் ஷெட்டைச் சொல்லாமல் வேறு ஏதாவது ஒரு மெக்கானிக் ஷெட்டைச் சொல்லி விடலாம் தான்.. அது பொய்யாக இருக்கும்.. பூர்ணிமா பொய் சொல்ல மாட்டாள்..

வருவது வரட்டும் என்று தைரியத்தை ஒன்று திரட்டி அவள் பதில் சொல்ல வாய் திறந்தபோது விஸ்வநாதனின் செல் போன் ஒலித்தது..

“தசரதன் பேசறான்..”

அவர் அவசரமாக செல்போனை காதுக்குக் கொடுத்தபடி ஹாலுக்குப் போனார்.. தப்பித்து விட்ட நிம்மதியுடன் பூர்ணிமா நழுவி மாடிக்குப் போனாள்.. இரவு உணவுக்கு கீழே வந்த போது விஸ்வநாதன் இல்லை.. ஆனந்தி பரிமாற பூபாலன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.. என்னவோ தானே சமைத்துக் கணவனுக்குப் பரிமாறுவதைப் போல வக்கணையாக சமையல் வகைகளைச் சொல்லிப் பரிமாறிக் கொண்டிருந்த மருமகளை முறைத்தபடி வாய்க்குள் அவளைத் திட்டிக் கொண்டே ஆஷாவுக்கு ஊட்டிக்

கொண்டிருந்த பாகீரதி, மகளைக் கண்டதும் தட்டைப் போட்டாள்..

"அப்பா எங்கேம்மா..?" தயக்கத்துடன் கேட்டாள் பூர்ணிமா..

"தசரத மகாராஜாகிட்ட இருந்து அழைப்பு வந்துருச்சுல்ல.. தம்பி கூப்பிட்டா குடும்பத்தைப் பத்தி நினைப்பு இருக்குமோ..? அவன் பிரச்னைக்கெல்லாம் தீர்வு சொல்லிட்டு ராக்கோழி கூவறப்ப வீடு வந்து சேர்வார்.. நான் கண் முழிச்சு கதவைத் திறந்து விட்டு பறிமாறனும்.. ம்ஹீம்.. ஒவ்வொருத்தருக்கும் எப்படியாப்பட்ட புருசன் வாய்க்கிறான்.. எனக்கும் வாய்ச்சிருக்கே.."

ஆனந்தியைப் பொறாமையுடன் பார்த்தபடி பொருமினாள் பாகீரதி.. அது தெரியாமல் ஆனந்தி வெள்ளையாய் சிரித்தாள்.. பாகீரதிக்கு என்னவோ போல ஆகி விட்டது..

"நீங்க ஏன் கண் முழிக்கனும்..? மாமா வர்ற வரைக்கும் நான் கண்முழிக்கிறேன் அத்தை.. பாவம் நீங்க.. ஏர்லி மார்னிங்கில இருந்து மிட்நைட் வரைக்கும் உழைச்சு ஓடாத் தேய்கறிங்க.. நைட்டாவது நிம்மதியாத் தூங்குங்க.. ஒருவேலையும் செய்யாம

சும்மாதான் இருக்கேன்..? நான் பார்த்துக்கறேன் அத்தை..”

தானாக முன்வந்த மருமகளின் பொறுப்புணர்ச்சியில் பாகீரதியின் மனதிலிருந்த கோபமும், பொறாமையும் ஓடிவிட்டன.

“உனக்கெதுக்கும்மா சிரமம்..? அந்த மனுசன் ஆயிரம் நொனனாட்டியம் சொல்லுவார்.. உன்னால அவருக்குப் பதில் சொல்ல முடியாது.. நானே பார்த்துக்கறேன்.. நீ தூங்கப் போ..” என்று சொல்லி விட்டாள்..

பூர்ணிமாவின் மனதிலிருந்த பயம் அகன்றது.. தசரதன் சித்தப்பாவின் குடும்பப் பஞ்சாயத்து அத்தனை எளிதாகத் தீராது.. இரண்டு மூன்று சிட்டிங் அமர்ந்து கவுன்சிலிங் கொடுத்தாக வேண்டும்.. தொடர் ஓட்டம் போல தொடரும் பஞ்சாயத்தில் பூர்ணிமாதன் ஸ்கூட்டியை எந்த மெக்கானிக் ஷெட்டில் விட்டாள் என்ற கேள்வி பின்னுக்குத் தள்ளப்பட்டு மறந்து போய் விடும்.

‘ஹைய்யா.. தசரதன் சித்தப்பா வாழ்க.. அவரது குடும்பப் பஞ்சாயத்து வாழ்வாங்கு வாழ்க..’ பூர்ணிமாவின் மனம் குதூகலித்தது..

பாகீரதிக்கு மட்டும் இது தெரிந்தால் கரண்டியால் மகளின் தலையில் மொத்தியிருப்பாள்.. தசரதனின் மீது அவளுக்கிருக்கும் காண்டு கொஞ்ச நஞ்சமானதல்ல..

விஸ்வநாதனின் நான்கு விட்டச் சித்தப்பாவின் மகன் என்ற உறவு முறையைக் கொண்டவன் தசரதன்.. பூபாலனைவிட ஏழுவயது மூத்தவன்.. அண்ணா, அண்ணா என்று விஸ்வநாதனின் மீது உயிராக இருப்பான்.. விஸ்வநாதனுக்கு தம்பிமுறை வேண்டும் என்ற உறவுமுறை வரைபடத்தை வரைந்து பக்கத்து கிராமத்து பண்ணையார் வீட்டில் சம்பந்தம் செய்து விட்டார் தசரதனின் தந்தை.. மாப்பிள்ளைக்கு சென்னையில் வேலை என்பதில் மயங்கிப் போன பண்ணையார் பெண்ணைக் கொடுத்து விட்டார்.. திருமணம் முடிந்து பெண்ணை சென்னையில் குடித்தனம் வைக்க வந்தபோதுதான் தெரிந்தது.. தசரதன் கஸ்டம்ஸ் ஆபிசில்தான் வேலை செய்கிறான் கஸ்டம்ஸ் ஆபிசராக வேலை செய்யவில்லை என்பது.. கொதித்துப் போன பண்ணையார் பெண்ணைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு

போய் விட்டார்.. பஞ்சாயத்து விஸ்வநாதனிடம் வந்து நின்றது.. மாதக் கணக்கில் நீண்ட பஞ்சாயத்தின் முடிவில் விஸ்வநாதனின் முகத் தாட்சண்யத்திற்காக பண்ணையார் தன் மகளை தசரதனுடன் வாழ்க்கை நடத்த அனுப்பி வைத்தார்.. அத்துடன் பிரச்னை தீரவில்லை..

அடைமழை நின்றாலும் செடி மழை நிற்காது என்ற கதையாக அவ்வப்போது தசரதன் வீட்டார் பொய் சொல்லிப் பெண் கேட்ட கதை சுட்டிக் காட்டப்படும்.. பிரச்னை வெடிக்கும்.. தசரதனின் மனைவி பிறந்த வீட்டுக்குப் போனைப் போடுவாள்.. பண்ணையார் படை பரிபாலனத்தோடு கிளம்பி வந்து விடுவார்.. மாமனாரின் படையை எதிர் கொள்ளும் திராணியற்றவனாக தசரதன் விஸ்வநாதனுக்குப் போனைப் போடுவார்.. ஒன்று விட்டத் தம்பியின் மீது இருக்கும் பாசத்தில் விஸ்வநாதனும் போட்டது போட்டபடி அனைத்து வேலைகளையும் ஏறக் கட்டி விட்டுத் தம்பி வீட்டுப் பஞ்சாயத்துக்கு ஓடிவிடுவார்..

இப்படிச் சொந்தக் குடும்பத்தை மறந்து தசரதனின் குடும்பப் பிரச்னையில்

விஸ்வநாதன் உழல்வது பாகீரதிக்குப் பிடிக்காது.. மற்ற விசயங்களில் எல்லாம் மனைவி சொல்லே மந்திரம் என்று இருக்கும் விஸ்வநாதன் தசரதனின் விசயத்தில் மட்டும் மனைவியின் பேச்சைக் கேட்டுத் தள்ளி நிற்க மறுத்தார்..

“இவன் குடும்பப் பஞ்சாயத்தால எங்களுக்குள்ளதான் ஒற்றுமை போகுது..” பாகீரதி தலையைப் பிடிப்பாள்..

அந்தத் தசரதனையும், அவனது குடும்பப் பஞ்சாயத்தையும் வாழ்க என்று பூர்ணிமா மனதுக்குள் வாழ்த்துவதை அறிந்து விட்டாள் பாகீரதி சும்மா விட்டு விடுவாளா..?

மனதுக்குள் ‘லா, லா’ பாடியபடி இரவு டிபனை மொக்கி விட்டுத் தூங்கப் போய் விட்டாள் பூர்ணிமா.. தூக்கம் வராமல் விடியும்வரை புரண்டு விட்டு விடிந்தவுடன் குளியலறைக்குள் புகுந்து ஏழு மணிக்கெல்லாம் காலேஜ் கிளம்பத் தயாராகி விட்டாள்..

“அதுக்குள்ள காலேஜ் கிளம்பிட்டியா..?”

பாகீரதி மணியைப் பார்த்த போதுதான் தனது வேகத்தை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்டாள் பூர்ணிமா..

“சீக்கிரமா விழிச்சுட்டேன்மா.. குளிச்சுத் தயாராகிட்டா டென்சன் இல்லாம காலேஜீக்குப் போகலாம் பாருங்க..” பொய் சொல்லாமல் விளக்கம் சொன்னாள்..

“அதுவும் சரிதான்.. ஸ்கூட்டியை எடுக்க மெக்கானிக் ஷெட்டுக்கு வேற போயாகனுமில்ல.. பணம் இருக்கா..? ரிப்பேருக்கு எவ்வளவு ஆகும்ன்னு கேட்டு வைச்சுக்கிட்டியா..?” மகளுக்காக தோசை வார்க்க ஆரம்பித்தாள் பாகீரதி..

“கேட்கலைம்மா..”

இப்போதும் உண்மையைத்தான் சொன்னாள் பூர்ணிமா.. ரகுவரனிடம் ரிப்பேருக்கான பணம் எவ்வளவு என்று அவளால் கேட்க முடியுமா..?

“நல்ல பொண்ணும்மா நீ.. இதையெல்லாம் கேட்டு வைச்சுக்க வேணாமா..? ஒன்றுக்கு இரண்டா அப்பா, அண்ணன்னு ஆம்பளைக இந்த வீட்டில இருந்து என்ன பிரயோசனம்..? என் பொண்ணு ஸ்கூட்டி ரிப்பேரானா தானா மெக்கானிக் ஷெட்டில விட்டு சரி பண்ணிக்க வேண்டியதா இருக்கு.. உன் அண்ணன் போலிஸ் ஆபிசர்ன்னு ஹோதாக்

காட்டுவான்.. இன்னும் ஒரு மாசத்துக்கு உன் அப்பாவைக் கையில பிடிக்க முடியாது.. இருபத்தி நாலு மணி நேரமும் தம்பி வீட்டுப் பஞ்சாயத்துதான் அவர் மனசில ஓடிக்கிட்டு இருக்கும்.. இதில மகளைப் பத்தி நினைக்க அவருக்கு நேரமிருக்கா..?”

‘அப்படியே இருக்கட்டும்மா.. நீங்க கிளப்பி விட்டிராதீங்க..’

மகளின் மனதில் ஓடிய எண்ணத்தை உணராமல் தன் போக்கில் புலம்பியபடி தோசைகளை தட்டில் வைத்துச் சட்னி, சாம்பார் கிண்ணங்களை பக்கத்தில் வைத்து விட்டு மகளின் மதிய உணவுக்காக ‘பிரைட் ரைஸ்..’ செய்ய ஆரம்பித்தாள் பாகீரதி..

தாயின் கவனிப்பில் மனம் நெகிழ தோசைகளைச் சாப்பிட ஆரம்பித்தாள் பூர்ணிமா.. ரகுவரனைப் பற்றிய இனிய நினைவுகளுடன் மிச்சம் மீதி வைக்காமல் அவள் சாப்பிட்டு முடித்து விட்டதில் தன் வயிறே நிறைந்து விட்டதைப் போல திருப்தி கொண்டாள் பாகீரதி.. மகளிடம் மதிய உணவு டப்பாவை நீட்டியவள்..

“மெக்கானிக் ஷெட்டுக்கு எப்படிப் போவ..? உன் அண்ணன் இன்னும் கிளம்பலையேம்மா.. உன் அப்பா கோழி கூப்பிடறதுக்கு முன்னாடியே தசரதன் வீட்டுப் பஞ்சாயத்தைப் பேச ஓடிப் போயிட்டாரே..” என்று கவலை கொண்டாள்..

“டோன்ட் ஒர்ரிம்மா.. ஆட்டோவில் போய்க்குவேன்.”

அதற்கு மேலும் அங்கே நிற்காமல் சிட்டுக்குருவியைப் போலப் பறந்து விட்டாள் பூர்ணிமா..

# 20

ஆட்டோப் பிடிக்கத் தெரு முனைக்குப் போனபோது ரகுவரனின் கார் அவளுக்காக காத்திருந்தது.. அனிச்சையாக சுற்று முற்றும் பார்த்துவிட்டுக் காருக்குள் ஏறியவளின் மனதில் குற்றஉணர்வு வந்தது..

‘இது கள்ளத்தனமில்லையா..?’

ரகுவரனின் முகத்தைப் பார்த்ததும் அனைத்தும் மறந்து விட்டது.. அவன் அருகிலிருப்பதை நம்ப முடியாமல் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.. வலித்தது.. முகம் சுளித்தாள்..

“சின்னக் குழந்தை போலக் கையைக் கிள்ளிக்கிற..?”

வியப்புடன் அவன் சிரித்தான்.. வெட்கத்துடன் அவள் பேசாமல் இருந்தாள்.. அடிக்கடி அவளைப் பார்த்தபடி காரை ஓட்டினான்..

“ரோட்டைப் பார்த்து ஓட்டலாமே..” வெட்கத்துடன் சொன்னாள் பூர்ணிமா..

“ஏன்.. உன்னைப் பார்க்கக் கூடாதா..?”

ரகுவரன் இமை சிமிட்டியதில் தடுமாறிப் போனாள்.. அவனது அசாத்திய தைரியம் அவளைக் கவர்ந்தது.. அவனது பேச்சு, மேனரிசம், எண்ணம் என்று அத்தனையும் ஒட்டு மொத்தமாக அவளைக் காந்தம் போலக் கவர்ந்திழுத்தன..

பீச் ரோட்டில் சென்ற கார் வளைந்து திரும்பியது..

“ஏன் இங்கே திரும்புது..?” பதறினாள் பூர்ணிமா..

அவளை ஆழமாகப் பார்த்தான் ரகுவரன்.. பூர்ணிமாவின் பதட்டத்தை அவன் விரும்பவில்லை என்பதில் உதட்டைக் கடித்தாள் பூர்ணிமா.. அவளது கண்கள் கலங்கி விட்டன..

“உன்னை நான் ஒன்னும் ஸ்வாஹா பண்ணிற மாட்டேன்..” கோபத்துடன் சொன்னான்..

கடற்கரையைப் பார்த்தான்.. காலை நேர வாக்கிங், ஜாகிங் என்று ஜன நடமாட்டம் அதிகமாக இருந்ததை சுட்டிக் காட்டினான்.

“அங்கே பார்.. எத்தனை பேர் உன் பாதுகாப்புக்கு இருக்காங்கன்னு பார்த்து வைச்சுக்க..”

பூர்ணிமாவின் மனம் வலித்தது.. அவன் அவளது பாதுகாவலன்.. அவனிடமிருந்து பூர்ணிமா பாதுகாப்பை வேண்டுகிறாளா..?

“உங்ககிட்டயிருந்து யாரும் என்னை புரடெக்ட் பண்ண வேண்டாம்..” வெடுக்கென்று சொன்னாள்..

அவளையே பிரியத்துடன் பார்த்த ரகுவரனின் முகம் இளகியது..

“நிஜமாத்தான் சொல்றியா..?” என்று கேட்டான்..

“எனக்குப் பொய் சொல்லத் தெரியாது..”

பூர்ணிமாவின் பதிலில் ரகுவரனின் பிரியம் அதிகரித்தது..

“என்னிடமிருந்து உன்னைப் பாதுகாக்கனும்னு உன் அப்பாவும், அண்ணனும் நினைப்பாங்களே..” மிருதுவாகச் சொன்னான்..

பூர்ணிமாவின் முகம் வெளிறியது.. அவளது கண்களில் கலக்கம் வந்தது.. ரகுவரனின் புருவங்கள் முடிச்சிட்டன.. கடலை

வெறித்தவன் கார்க்கதவைத் திறந்து இறங்கினான்..

“ஏன்..?” பதட்டமானாள் பூர்ணிமா..

ரகுவரன் முகம் சுளித்தான்.. பூர்ணிமாவின் முகம் மாறியது.. தவறு செய்து விட்டதைப் போல விழித்தாள்.. அவனுடன் பேசும் தருணங்களில் அடிக்கடி இதைப் போல விழிக்கிறாள் என்பதை அவனது மனம் பதிவு செய்து கொண்டது..

“இது பீச்.. காருக்குள் இருந்து கடலைப் பார்க்கிறதை விட இந்தக் காலை நேரத்தில காலாற மணலில் நடந்து கடலுக்குப் பக்கத்தில் போய் நின்று அலையில காலை நனைச்சா எவ்வளவு நல்லாயிருக்கும்..? ம்ம்ம்..?”

அவன் சொல்லச் சொல்லக் கடலலை வந்து கால் நனைப்பதைப் போலவே உணர்ந்தாள் பூர்ணிமா.. முகம் தெளிய காரை விட்டு இறங்கினாள்.. அவன் பக்கத்தில் வந்து நின்றாள்..

“இஃது..”

திருப்தியாக சிரித்தவனுடன் இணைந்து நடப்பது சுகமான அனுபவமாகத்தான் இருந்தது.. கடல்காற்றில் முடி பறந்து முன்

நெற்றியில் படிய அதை அலட்சியமாகக் கோதி விட்டபடி அவள் முகம் பார்த்தவனின் கம்பீரத்தில் கிறங்கிப் போனாள்.. இவன் என் காதலை ஏற்றுக் கொண்டானா..? என்னுடையவனா..? என்று தனக்குள் பிரமிப்புடன் கேட்டுக் கொண்டாள்.. இரண்டு எட்டுக்கள்தான் வைத்திருப்பாள்.. பூர்ணிமா என்ற அழைப்பில் பதறிப் போய் சுற்று முற்றும் பார்த்தாள்..

"உன்னையில்லை.." இறுக்கமான குரலில் சொன்னான் ரகுவரன்..

அவளது பதட்டம் அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதில் உதட்டைக் கடித்துத் தலையைக் குனிந்து கொண்டாள்..

"தெரிஞ்சவங்களோன்னு பயந்துட்டேன்.." முணுமுணுத்தாள்..

"எதற்கு பயம்..?" சினந்தான் ரகுவரன்..

பூர்ணிமா பதில் சொல்லவில்லை.. கடலலையில் கால் பதிய நின்றாலும் அவள் மனதில் குதூகலம் வரவில்லை.. இனிமையான கானத்தின் நடுவே ஸ்வரம் பிசகி விட்டதைப் போல உணர்ந்தாள்..

ரகுவரனுக்கும் அதே உணர்வுதான் என்றாலும் அரிதான குறிஞ்சி மலரைப் போல வாய்த்திருக்கும் அத்தருணத்தின் நொடிகளை இனிப்பாக்கிக் கொள்ள விரும்பினான்..

“கடல்ல கால் நனைச்சாச் சிரிக்கனும்.. இப்படி உம்முன்னு இருக்கக் கூடாது..” என்றான்.

சடுதியில் முகம் மலர்ந்து சிரித்தாள் பூர்ணிமா.. அவளிடம் சிரிப்பையும் வருத்தத்தையும் அவனால் மட்டுமே கொண்டுவர முடிகிறது என்பதில் மனம் கனிந்தான் ரகுவரன்.

அவளது சிரிப்பும், வருத்தமும் அவன் வசத்தில் இருக்கின்றனவா..? இது எதை உணர்த்துகிறது..? அவளது வாழ்க்கை அவன் வசத்தில் உள்ளது என்பதைத்தானே உணர்த்துகிறது..?

**“வாழ்வதும் தாழ்வதும் உங்கள் கையிலே..**
**என் சஞ்சலமும் நிம்மதியும் உங்கள் சொல்லிலே..**
**வாழ்கவென்று நீங்கள் சொன்னால்**
**வாழும் என் மனம்**
**இல்லை மறைகவென்று வரம்**

## கொடுத்தால் மறையச் சம்மதம்..”

அந்தக் காலை நேரத்திலும் தேங்காய், மாங்காய், பட்டாணி சுண்டல் சகிதம் கடை போட்டிருந்த தள்ளு வண்டிக்காரனின் வண்டியிலிருந்து எப்.எம். ரேடியோ பாடியது..

பூர்ணிமாவின் விழிகள் உயர்ந்து ரகுவரனைப் பார்த்தன.. பாடலின் வரிகளை அவளது பார்வையில் படித்த ரகுவரன் அப்படியே நின்று விட்டான்.. என்ன மாதிரியான அன்பு இது என்ற பிரமிப்பு அவனுள் எழுந்தது.. அடிமையாகி அடிமைப்படுத்தும் அன்பு இது.. யாதும் நீயே என்று அவனுக்கு யாதுமாவது.. அடைக்கலம் நீயே என்று அடைக்கலம் கொடுப்பது..

“பூர்ணி..” அவளது கைகளைப் பற்றினான்..

“என் பிரியத்தைச் சந்தேகப்படறிங்கதானே..” அவள் விம்மினாள்..

அவர்களது பாதம் நனைத்த அலை அவர்களை ஒன்று சேர்க்க விழைந்தது போல ஓங்கி அடித்தது.. அலையில் தடுமாறியவளை அவன் தாங்கிப் பிடிக்கத் தொய்ந்து போன

பூங்கொடியாய் அவன் மார்பில் சாய்ந்தாள் பூர்ணிமா..

பற்றுகோல் தேடிய கொடி போல அவன் கழுத்தை அவளது கரங்கள் வளைத்துக் கொண்டன.. அவன் மார்பில் புதையுண்டிருந்தவளின் முதுகில் அவன் கரங்கள் படிந்து, பரவி இறுக்கிக் கொண்டன.. எதிர்பாராமல் கிடைத்த அணைப்பில் அவள் விலக முடியாமல் அவன் மார்பில் முகம் புதைத்து புதைந்து கொண்டாள்..

அவளது கூந்தலில் முகம் புதைத்து முகர்ந்து முத்தமிட்டான் ரகுவரன்.. சிலிர்த்து நடுங்கினாள் பூர்ணிமா.. தேறுதல் சொல்வதைப் போல பரிவுடன் அவள் கூந்தலை வருடிக் கொடுத்தான்..

அவனது இறுகிய அணைப்பில் அவளும்.. இறுக்கமான அணைப்புடன் அவனும் அசையாமல் தழுவியபடி அப்படியே நின்றார்கள்.. ஓங்கி அடித்து அவர்களை ஒன்று சேர்த்தக் கடலலை அவர்களின் பாதங்களை நனைத்து நகைத்தது..

பக்கத்தில் சலசலத்த பேச்சுக்குரல்கள் கேட்டதில் பூர்ணிமா விலகினாள்.. ரகுவரன் அவளுடைய விரல்களோடு விரல்களைக்

கோர்த்து இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.. அவள் விரல்களை உறுவிக் கொள்ளவில்லை.. அதைக் கவனித்தவனின் முகத்தில் சொந்தம் வந்தது..

டூரிஸ்ட் பஸ் ஒன்று நின்றிருந்தது.. அதிலிருந்து இறங்கிய சுற்றுலாப் பயணிகள் கடலோரம் சென்று நின்று கடலலைகளின் கால் பதித்து விளையாடத் தொடங்கினார்கள்.. தனிமை கலைந்ததில் பூர்ணிமாவின் மனம் சிணுங்கியது.. ரகுவரனுடனான தனிமையை அவள் மனம் தேடியது.. அவளது முகச் சிணுக்கத்தைக் கண்டு கொண்ட ரகுவரன்..

“லோகு வந்து ஷெட்டைத் திறக்க நேரமாகும்.. அதுவரைக்கும் காபி சாப்பிடப் போகலாமா..?” என்று கேட்டான்.

“ஓ..” கண்கள் ஜொலிக்கத் தலையாட்டிய பூர்ணிமா..

“வீட்டில் வயிறு புல்லா காபி, டிபன்னு மொக்கிட்டு வந்துட்டேனே..” என்றாள் குழந்தையாக..

வழக்கம்போல அவளது குழந்தைத்தனம் அவனை வசீகரித்தது.

“காபிதான் சாப்பிடனும்னு கட்டாயம் ஏதுமிருக்கா.. ஐஸ்கிரிம்கூடச் சாப்பிடலாமே..” என்று சிரித்தான்.

“அப்பச் சரி..”

அவள் சமாதனமானதில் அவனது சிரிப்பு அதிகரித்தது.. பிரியத்துடன் அவளது விரல்களை அழுத்தினான்.. முகம் சிவந்து அவள் தடுமாறியதில் முத்தமிடும் வேகம் வந்தது..

‘ஊஹீம்.. இன்னைக்கு இதுபோதும்.. பயந்துருவா..’

அவனை நம்பி வெளியே வந்திருப்பவளைக் கலவரப் படுத்தி விடக்கூடாது என்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

அவர்கள் ஐஸ்கிரிம் சாப்பிட்டபடி பேசினார்கள்.. தங்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.. அடுத்த சந்திப்பு எப்போது என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள விரும்பினான் ரகுவரன்.. அவன் கேட்டபோது தினந்தோறும் சந்திக்க வேண்டுமா என்று மருண்டாள் பூர்ணிமா.. அவளுக்குப் பிடித்தமில்லையென்றால் வேண்டாம் என்று இலகுவாக அவன் சொல்லி விட்டதில்

அவ்வளவுதானா என்று ஏமாற்றமாய் உணர்ந்தாள்..

“நாளைக்கு ஈவினிங் பீச்சுக்கு வந்துறவா..?”

தயக்கத்துடன் அவள் கேட்டதில் அவர்களது தினசரி சந்திப்பு உறுதியாகி விட்டது.. அவனுடனான அவளது காதல் வலுப்பெற்றது.

# 21

“நாளைக்கு என்னைப் பெண் பார்க்க வர்றாங்களாம்..”

ரகுவரனின் முகத்தைப் பார்க்கும் துணிவின்றி கடலைப் பார்த்தபடி சொன்னாள் பூர்ணிமா.. அவள் எதிர்பார்த்தபடியே..

“என்னது..?” என்று உறுமினான் ரகுவரன்.

நடுநடுங்கினாள் பூர்ணிமா.. சோர்ந்திருந்த அவளது தோற்றத்தில் தன்னை நிதானப்படுத்திக் கொண்ட ரகுவரன்.. அவளை உறுத்துப் பார்த்தபடி..

“உன் சம்மதத்தோடுதான் வர்றாங்களா..?” என்று கேட்டான்.

அடிபட்டவளாக அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் குற்றச்சாட்டும் மன்றாடலும் கலந்திருந்தன..

“நீங்களா இப்படிக் கேட்கறிங்க..? நான் சம்மதித்திருப்பேன்னு நினைக்கறிங்களா..?” அவளது உதடுகள் துடித்தன..

“நீ மாட்டேன்னு சொல்லியிருந்தா எப்படி அவங்க வருவாங்க...

“இன்னைக்குக் காலையிலேதான் எனக்கு விவரமே தெரியும்.. அம்மா சொன்னாங்க.. என்னிடம் சம்மதம் கேட்கலை.. தகவல் சொல்லியிருக்காங்க.. அவ்வளவுதான்.. இப்பத்தான் ஃபைனல் இயர் எக்ஸாமை எழுதி முடிச்சிருக்கேன்.. உடனே கல்யாணமா..? வேணாம்.. கொஞ்ச நாளாகட்டும்ன்னு சொன்னேன்.. நல்ல இடத்துச் சம்பந்தம்.. திடிர்ன்னு பெண் கேட்டு வரோம்ன்னு சொல்லிட்டாங்க.. அப்பாவும் வரச் சொல்லிட்டார்.. தடுத்து நிறுத்த முடியாதுங்கிறாங்க.. என்ன செய்யட்டும்..?”

“என்னிடம் கேட்கிறயா..? கெட்டிக்காரிதான்.. இதுக்கு நான் என்ன பதிலைச் சொல்வேன்னு நினைக்கிற..? மேக்-அப் பண்ணிக்கிட்டு எவன் முன்னாடியே ஷோ கேஸ் பொம்மைபோல நில்லுன்னு சொல்வேன்னு நினைக்கறியா..?”

ரகுவரனின் கடுமையில் துடித்துப் போய் விட்டாள் பூர்ணிமா.. வழி தெரியாமல் பரிதவித்த அவளது தவிப்பில் பல்லைக் கடித்தபடி யோசித்த ரகுவரன்..

“ஓகே.. நீ வீட்டுக்குப் போ..” என்றான் அழுத்தமாக..

“நாளைக்குப் பெண் பார்க்க வர்றாங்களே..” பூர்ணிமா தவித்தாள்..

“என்னிடம் சொல்லிட்டேல்ல.. நான் பார்த்துக்கிறேன்..”

தீர்மானமான அவனது குரலில் அவளுக்குத் தைரியம் வரவில்லை என்றாலும் அலைபாய்தல் குறைந்திருந்தது.. தளர்ந்த நடையுடன் நடந்தவளை யோசனையுடன் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் ரகுவரன்.. அவள் காதலிக்கிறாள் என்பதை அவளது குடும்பத்தால் ஜீரணிக்க முடியாது என்ற நிதரிசனத்தில் அவன் மனம் உறைந்திருந்தது.. அவளைக் கேட்காமலே அவளுடைய திருமணத்தை அவர்கள் நிச்சயம் செய்வதற்கு இந்த நம்பிக்கைதான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.. நாளை உண்மை வெளிப்படும் போது பூர்ணிமாவின் நிலைமை என்னவாகும் என்று நினைத்தவனின் மனம் வருந்தியது..

அகல்விளக்கின் சுடர் போல அமைதி கொண்டவள்.. எதிர்த்துப் போராடுவாளா..? அந்த வலிமை அவளிடம் இருக்குமா..?

வெகுநேரம் சிந்தித்தபடி கடற்கரையிலேயே உட்கார்ந்திருந்தான்

ரகுவரன்.. கடலைகளை வெறித்துக் கொண்டிருந்தவனின் மனம் சமனப்படவில்லை.. முரட்டுத்தனமான அவனது வாழ்க்கைமுறை அவளிடமிருந்து அவனைத் தள்ளி நிறுத்தும் என்பதில் எள்ளலளவும் அவனுக்குச் சந்தேகமில்லை..

'அதற்காக அவளை விட்டுக் கொடுத்து விட முடியுமா..?'

மனதுக்குள் கொந்தளித்தான்.. கடந்து வந்த காலத்தின் குருதிச் சுவடுகளை அவனால் மாற்றியமைத்து விட முடிந்தது.. சின்னஞ்சிறு வயதில் அவனை அநாதையாய் நிற்க வைத்த விதியை நினைத்து தொய்ந்து போகாமல் வாழ்க்கையை எதிர் கொண்டு போராடி ஜெயிக்க முடிந்தது.. அவன் நினைத்தால் பூர்ணிமாவின் வீடு புகுந்து தூக்கி வந்து அவள் கழுத்தில் தாலியைக் கட்டி வாழ்ந்து விட முடியும்..

அந்தச் சூறாவளிச் சுழலின் வேகத்தை அவளால் தாங்க முடியுமா..? தென்றல் காற்றின் சிறு வேகத்தைக் கூடத் தாங்க முடியாத அகல்விளக்கு அவள்.. அவளிடமா சூறாவளிக் காற்றின் வேகத்தைக் காட்டுவது..?

எது எப்படி இருந்தாலும் மறுநாள் மாலையில் பூர்ணிமாவைப் பெண் பார்க்க வருவதற்கு முன்னால் அவள் மனதில் ரகுவரன்தான் இருக்கிறான் என்பதை அவள் குடும்பத்தார்க்கு உணர்த்தி விட வேண்டும் என்பதில் மட்டும் உறுதியாக இருந்தான் ரகுவரன்..

அவள் அஞ்சும் தன்மையுடைய அகல் விளக்கின் சுடராக இருக்கலாம்.. அவன் சூறாவளி..! சுழன்றடிப்பான்.. அவனைக் காதலிப்பவளை விட்டுக் கொடுப்பதாக இருந்தாலும் அதைச் சொல்லி விட்டுத்தான் செய்வான்.

இரவில் பலத்த சிந்தனைகளுடன் இருந்த ரகுவரன் விடிந்ததும் குளித்து உடைமாற்றி எதிர் வீட்டுக்குக் கிளம்பி விட்டான்.. கையில் பழங்களும் பூவும் அடங்கிய வலைப்பை..!

பூர்ணிமாவின் வீட்டை அணுகும்போதே அவன் பார்வை உயர்ந்து பால்கனியைப் பார்த்தது.. அங்கே அவனது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் பூர்ணிமா.. அவனுக்காக அவள் காத்திருந்ததில் மனம் நெகிழ்ந்தான்.. இரவில் உறங்கியிருப்பாளா என்று யோசித்தான்.. இல்லை என்பது

தெளிவாக தெரிந்தது.. உறக்கமில்லாத இமைகள் வீங்கியிருப்பதைக் கண்டவனின் மனம் இரக்கம் பட்டது.

'என்னால்தானே..' வேதனை கொண்டான்..

கேட்டைத் திறந்து போர்டிகோவை நெருங்கியவனைத் தோட்டத்தில் நின்றிருந்த விஸ்வநாதன் புதிராக பார்த்தார்..

'இவன் எதுக்காக இங்கே வந்திருக்கான்..?' அவன் கையிலிருந்த வலைப்பையின் மீது அவர் பார்வை படிந்தது..

"வணக்கம்.." ரகுவரன் கரம் குவித்தான்.

பண்பாடு குறையாத விஸ்வநாதனால் பதிலுக்கு வணக்கம் சொல்லாமல் இருக்க முடியவில்லை..

"வணக்கம்.. என்ன விசயம்..?" நறுக்கென கேட்டார்..

எதற்காக என் வீட்டுப் பக்கம் வந்திருக்கிறாய் என்று கேட்காமல் கேட்ட அந்தக் கேள்வியைப் பொருட் படுத்தாமல்..

"உங்ககிட்டப் பேசனும்.." என்றான் ரகுவரன்..

என்ன பேச வேண்டும் என்ற கேள்வியை போர்டிகோவில் நிற்க வைத்துக் கேட்பது நாகரிகமில்லையென்று விஸ்வநாதனுக்குத் தோன்றியது..

"வாங்க.." என்றபடி வீட்டுப் படியேறினார்..

"ஈவினிங்குக்கு என்ன மெனுன்னு சொல்லிட்டிங்கன்னா ஹோட்டலில் இருந்து வரவழைச்சிரலாம்.. அம்மா பாவம்.. கெஸ்டுடன் உக்காந்து பேச முடியாம கிச்சனில சிரமப்பட வேண்டாமே.." என்று சொன்னபடி எதிரில் வந்த பூபாலன் ரகுவரனைக் கண்டதும் முகம் மாறினான்..

"என்னப்பா..?" விஸ்வநாதனிடம் அதட்டலாகக் கேட்டான்.

"ஏதோ பேசனும்னு சொல்றாரு பூபாலா.. என்னன்னு கேட்கலாம்னுதான் உள்ளே வந்துக்கிட்டு இருக்கேன்.." என்றார் விஸ்வநாதன்..

"அதை வாசாலிலேயே கேட்டு வழியனுப்பி வைக்க வேண்டியதுதானே.. வீட்டுக்குள்ளே வரனுமா..?" கடுமையாகக் கேட்டான் பூபாலன்..

*மாடிப்படிகளில் வேகமாக இறங்கிக் கொண்டிருந்த பூர்ணிமா அதிர்ந்து விட்டாள்.. அவளுடைய ரகுவரனுக்கு கிடைத்த மரியாதையான வரவேற்பில் அவளுக்கு அழுகையழுகையாய் வந்தது.. ஆஷாவுடன் ஹாலுக்கு வந்த ஆனந்தி அங்கே நிலவிய சூழலைக் கண்டதும் நிற்பதா, உள்ளே போவதா என்று தெரியாமல் திகைத்து நின்றாள்.. மகன் 'மெனு' கேட்கப் போனானே.. அதற்கு கணவர் என்ன பதிலைச் சொல்லப் போகிறார் என்று தெரிந்து கொள்வதற்காக ஹாலுக்கு வந்த பாகீரதி..*

*'இங்கே என்னதான் நடக்குது..?' என்று குழம்பிப்போனாள்..*

*"தப்பு பூபாலா.. அது நாகரிகமில்லை.. வீடு தேடி வந்தவர்கள வீட்டுக்குள்ள கூப்பிட்டு உட்கார வைத்துத்தான் பேசனும்.." மகனைக் கண்டித்து விட்டு ரகுவரனைப் பார்த்த விஸ்வநாதன்..*

*"உட்காருங்க.." என்றார்..*

*வலைப்பையில் வைத்திருந்த சில்வர் தாம்பாளத்தில் பழ வகைகளைப் பரத்தி ஹாலில் இருந்த டீப்பாயில் வைத்து விட்டுப் பொதுவாக கை கூப்பி விட்டு உட்கார்ந்தான்*

ரகுவரன்.. பூர்ணிமாவைத்தவிர மற்றவர்களின் முகங்கள் மாறின.. அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

மற்றவர்களை விழி சமிக்ஞையால் கட்டுப் படுத்திய விஸ்வநாதன்..

“முதன் முதலா வீட்டுக்கு வர்றதினால பழங்களைக் கையில பிடிச்சுக்கிட்டு வந்திருக்கீங்க போல.. ஃபார்மாலிட்டி தெரிஞ்சிருக்கு..” என்று சொன்னார்..

“ஃபார்மாலிட்டிதாங்க.. வெறும் ஃபார்மாலிட்டியில்லை.. உங்க மகளைப் பெண் கேட்கனும்ங்கிறதுக்காக கொண்டு வந்திருக்கும் ஃபார்மாலிட்டி..” நிதானமாகச் சொன்னான் ரகுவரன்..

“என்னடா சொன்ன..?”

டீப்பாயை பூபாலன் ஓங்கி உதைத்த உதையில் பழத்தட்டு பறந்தது.. பழங்கள் ஹால் முழுவதும் சிதறி விழுந்தன.. பயந்து போன ஆஷா ஆனந்தியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுக ஆரம்பித்தாள்.. பாகீரதிக்கு மயக்கமே வந்து விட்டது..

“யார் வீட்டுப் பெண்ணை யார் பெண் கேட்கிறது..? போலிஸ் ஆபிசரோட

தங்கையை ரௌடி பெண் கேட்கிறதா..? எவ்வளவு தைரியமிருந்தா என் தங்கையைப் பெண் கேட்டு வருவ..?”

பூபாலன் ரகுவரனின் மீது பாய்ந்து சட்டைக் காலரைக் கொத்தாகப் பிடித்து விட்டான்.. அவசரமாக ஊடே புகுந்து மகனை விலக்கி விட்ட விஸ்வநாதன் மாடிப்படியில் நின்றிருந்த பூர்ணிமாவைப் பார்த்தார்.. அவரது பார்வை அவளை ஊடுறுவியது.

பூர்ணிமாவின் மருண்ட விழிகளில் பயம் இருந்தது.. பதட்டம் இருந்தது.. தவிப்பு இருந்தது.. மன்றாடல் இருந்தது..

ஆனால் ரகுவரன் இப்படிப் பெண் கேட்டு விட்டானே என்ற அதிர்ச்சி மட்டும் இல்லை..

# 22

**வி**ஸ்வநாதன் அதைத்தான் கவனித்தார்.. எந்தவித முகாந்திரமும் இல்லாமல் ரகுவரன் பூர்ணிமாவைப் பெண் கேட்டு வந்துவிட மாட்டான் என்று அவர் யூகித்தார்.. ரகுவரனின் மீது 'ரௌடி..' என்ற முத்திரை குத்தப்பட்டிருந்தாலும் மற்றவர்களைத் துன்புறுத்தும் ரௌடியாகவோ.. பெண்களிடம் மரியாதை குறைவாக நடந்து கொள்ளும் ரௌடியாகவோ அவன் சித்தரிக்கப் பட்டிருக்கவில்லை..

மாறாக வேலைக்காரப் பெண்ணைக் காப்பாற்றி, அவளிடம் வாலாட்டியவனை மிதி, மிதியென மிதித்துத் துவைத்துப் பிழிந்திருந்தான்.. அதற்காக எது வந்தாலும் எதிர்த்து நிற்பேன் என சவால் விட்டான்.

நியாயத்துக்காக குரல் உயர்த்துபவன் ரகுவரன்.. மற்றவர்கள் செய்வது தவறு என்று தோன்றிவிட்டால் தட்டிக் கேட்காமல் இருக்க மாட்டான்.. மற்றபடி மற்றவர்களின் விவகாரங்களில் அனாவசியமாக மூக்கை

நுழைக்காதவன்.. அதி முக்கியமாக பெண்களை ஏறெடுத்தும் பார்க்காதவன்..

அந்த ரகுவரன் பூ, பழத் தட்டோடு பூர்ணிமாவைப் பெண் கேட்க வந்திருக்கிறான் என்றால் அதன் பிண்ணனி எதுவாக இருக்கக்கூடும் என்று புரிந்து கொள்ள முடியாத முட்டாளா விஸ்வநாதன்..?

'என் மகளா..?' அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது..

'மென்மையே உருவான பூர்ணிமா வன்மையின் வடிவமான ரகுவரனைக் காதலிக்கிறாளா..?'

அவர் மகளின் மனதில் காதல் வரும்.. அதுவும் முரட்டு ரகுவரனின் மீது வந்து தொலைக்கும் என்பதை நம்ப முடியாமல் திகைத்து நின்று விட்டார்..

"பொறு பூபாலா.."

தந்தையின் அதட்டலில் தேங்கி நின்ற பூபாலனின் பார்வையில் கொலைவெறி இருந்தது.. அவனுடைய தங்கையை ரகுவரன் பெண் கேட்டு வந்து விட்டானே என்ற கோபக்கனல் தெறித்தது..

ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக ரகுவரன் வெகு அமைதியாக நின்றருந்தான்..

பூர்ணிமாவின் மன்றாடலான பார்வைக்கு இமைகளை மூடித் தான் எதுவும் செய்ய மாட்டேனென்ற உத்திரவாதத்தை அளித்துக் கொண்டிருந்தான்..

"இத்தனை நாளா நம்ம வீடு இருக்கிற திசைப்பக்கம்கூடத் திரும்பாத ஒருத்தன் திடிர்ன்னு பெண் கேட்டு வந்திருக்கான்னா என்ன அர்த்தம்ன்னு நீ யோசிச்சுப் பார்க்கனும்டா.."

விஸ்வநாதன் அறிவுறுத்தியதில் பூபாலன் கொதித்து விட்டான்..

"எவனோ ஒருத்தன்.. வழியில போகிற வழிப்போக்கன்.. என் தங்கச்சியைப் போகிறப்ப வாறப்ப பார்த்துட்டு ஆசைப்பட்டுப் பெண் கேட்க வந்துட்டா என்ன அர்த்தம்ன்னு நான் யோசிச்சுப் பார்க்கனுமாப்பா..? இவனுக்குத் திமிர்ன்னு அர்த்தம்ப்பா.. இவன் ஆடற ஆட்டத்தை எதிர்த்த அபார்ட்மெண்ட்காரங்க வேணும்ன்னா விரலை சுவைத்துக்கிட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கலாம்.. நான் அப்படி இருக்க மாட்டேன்.. துவைச்சுப் பிழிஞ்சு தோரணம் கட்டித் தொங்க விட்டிருவேன்.."

“ஊஹீம்.. அவசரப்படாதே.. அதுக்கு முன்னாலே பூர்ணிமாகிட்ட ஒருவார்த்தை கேளு.. அதான் நியாயம்..”

“என்னப்பா பேசறிங்க..? எவனோ ஒருத்தன் வீடு வரைக்கும் பெண் கேட்டு வந்திட்டான்னு என் தங்கைகிட்ட நான் கேள்வி கேட்கனுமா..? அவ பத்தரைமாத்துத் தங்கம்ப்பா..”

“இல்லேன்னு நான் சொல்லலையே.. காதலிச்சா பத்தரை மாத்துத் தங்கம், பித்தளையா மாறிராது பூபாலா.. இவ்வளவு பிரச்னையும் பூர்ணிமாவோட கண் முன்னாலேதானே நடந்துக்கிட்டு இருக்கு..? இத்தனை நாளா யாரோ, எவரோன்னு இருந்தவன், இன்னைக்கு ஏன் விடிந்தும் விடியாத இந்தக் காலை நேரத்தில் பெண் கேட்டு வந்திருக்கான்..? ஒன்றை நினைவில் வை பூபாலா.. சாயங்காலம் பூர்ணிமாவைப் பெண் பார்க்க நம்ம சொந்தக்காரங்க வர்றதா இருக்காங்க..”

“அப்பா..?”

தந்தை, மகனின் பார்வைகள் சந்தித்துக் கொண்டன.. பூர்ணிமாதான் அந்தத் தகவலைச் சொல்லி ரகுவரனை வரச் சொல்லியிருக்கக்

கூடும் என்ற செய்தியை விஸ்வநாதனின் பார்வையில் கண்டான் பூபாலன்.. அப்படியும் இருக்குமோ என்ற மகனின் திடுக்கிடலுக்கு 'ஆம்' என்று பதில் சொல்லும் விதமாக இமைகளை மூடித் திறந்தார் விஸ்வநாதன்..

பூர்ணிமாவின் பக்கம் திரும்பினான் பூபாலன்.. சிவந்திருந்த தமையனின் விழிகளைப் பார்க்க முடியாமல் நடுநடுங்கி விட்டாள் பூர்ணிமா.. அனிச்சையாக அவளது விழிகள் கண்ணிரைச் சுரந்தன.. தாரை தாரையாக வழிந்த கண்ணீர் கோடுகள் கன்னங்களை நனைத்ததில் முகம் முழுவதும் ஈரமாக இரு கரங்களையும் குவித்து விட்ட பூர்ணிமா..

"என்னை மன்னிச்சிருண்ணா.." என்று கதறி அழுதாள்..

பூபாலனின் அதிர்ந்த தோற்றத்தை அவளால் கண் கொண்டு பார்க்க முடியவில்லை.. என் தங்கையா காதலித்திருக்கிறாள்..? என்ற தமையனின் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மாடிப்படியில் சரிந்து உட்கார்ந்து உள்ளங்கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்..

“என்னால நம்ப முடியலையேப்பா..” பூபாலன் அரற்றினான்..

“என்னால் மட்டும் நம்ப முடியுதா..?” வேதனையுடன் கேட்டார் விஸ்வநாதன்..

ஆஷாவைத் தோளில் சாய்ந்தபடி நாத்தனாரின் பக்கத்தில் போய் உட்கார்ந்த ஆனந்தியின் கரம் பூர்ணிமாவின் தோளின் மீது ஆதரவாகப் படிந்தது.. நடுங்கிக் கொண்டிருந்த பூர்ணிமா அண்ணியின் மடி சாய்ந்தாள்.

கண்கள் நிலை குத்த உள்ளங்கையால் வாயைப் பொத்தியபடி சுவரில் சாய்ந்து நின்று விட்டாள் பாகீரதி.. மகளைப் பெண் கேட்டுப் பெரிய இடத்துச் சம்பந்தம் வந்திருக்கிறது என்ற மகிழ்வில் இருந்தவளின் தலையில் இடி இறங்கியதைப் போல இருந்தது.. மனதுக்குள் குமுறினாள்.. மகளைத் திட்டவும் முடியாமல்.. ரகுவரன் பெண் கேட்டு வந்திருப்பதை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் திண்டாடினாள்..

சூழலைப் பார்த்த பூபாலன் தன்னை நிதானப் படுத்திக் கொண்டு ரகுவரனை முறைத்தான் வாசலை நோக்கிக் கைகாட்டி..

“போய் விடு..” என்றான்..

“எனக்கு ஒரு பதிலைச் சொல்லுங்க பூபாலன்.. அதுவரைக்கும் இந்த

வீட்டைவிட்டுப் போக மாட்டேன்..” உறுதியாகச் சொன்னான் ரகுவரன்..

“டேய்ய்.. அறியாப் பெண்ணின் மனசைக் கலைச் சிட்டோம்ங்கிற ஆணவத்தில பேசறியா..? அவ பச்சை மண்ணுடா.. அவளைப் போலவே எல்லோரும் நல்லவங்களா இருப்பாங்கன்னு நம்பறவ.. சூது, வாது தெரியாதவ..”

“நான் கெட்டவனாவே இருந்துட்டுப் போறேன்.. சூதுவாது தெரிஞ்சவனா இருந்தாத்தான் சூது வாதில இருந்து தப்பிக்க முடியும்..”

“டேய்ய்.. நீ எப்படியோ இருந்துட்டுப் போ.. எனக்கென்ன வந்துச்சு..? என் தங்கையை உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியாது.. என் பதில் இதுதான்.. நீ கேட்டதுக்குப் பதில் கிடைச்சிருச்சுல்ல..? இப்ப வெளியே போ..”

“ஊஹீம்..” தீர்க்கமான பார்வையுடன் தலையசைத்தான் ரகுவரன்..

“பூர்ணிமாவை என்கூட அனுப்பி வையுங்க.. போகிறேன்.. உங்க தங்கை இல்லாம கிளம்ப மாட்டேன்..”

“என்னது..?”

பூபாலன் மறுபடியும் ரகுவரனின் மீது பாய.. பாகீரதி முகத்தில் அடித்துக் கொண்டு அழுக ஆரம்பித்தாள்.. பயந்து போன பூர்ணிமா பாய்ந்து ரகுவரனை மறைத்து நின்று கண்ணீர் வழியும் விழிகளுடன் தமையனிடம் கெஞ்சினாள்..

“அண்ணா.. வேண்டாம்.. எனக்காக விட்டிரு..”

“நீ விலகு, சொல்றேன்..”

“வேணாம்ன்னா.. அவரை நீயடிச்சா எனக்குத்தான் வலிக்கும்..”

இடிந்து போய் விட்டான் பூபாலன்.. தங்கை இப்படிச் சொல்லி விட்டாளே என்று மனம் புண்ணாக ரகுவரனை வெறித்தான்.. ரகுவரனின் விழிகளில் வெற்றிக் குறியீடு இல்லை.. மன்னிப்பை யாசிக்கும் பார்வைதான் இருந்தது..

“மெக்கானிக்கல் என்ஜினியரிங்கை முடிச்சிருக்கேன் பூபாலன்.. சொந்த பிஸினெஸ் இருக்கு.. பணக்காரன்.. என் மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் நேர்மையானவன்.. உங்க தங்கையைக்

கல்யாணம் பண்ணிக் கொடுங்க.. கண்ணுக்குள்ளே வைச்சுப் பார்த்துக்கறேன்..”

“அதுக்கு இவ கழுத்தை நெறிச்சுக் கொன்று போட்டிரலாம்..”

“பூபாலன்..” முதன் முறையாக ரகுவரனின் குரல் உயர்ந்தது..

“பூர்ணிமாவின் மேல் விரல் பட்டாக்கூட நான் சும்மாயிருக்க மாட்டேன்.. சட்டப்படி நாங்க மேஜர்.. முறைப்படி பெண் கேட்டேன்.. நீங்க கொடுக்க மாட்டேங்கறிங்க..”

“அதுக்கு..? என்னடா பண்ணுவ..?”

“உங்க தங்கையும் நானும் ரெஜிஸ்ட்ரர் மேரேஜ் பண்ணி கோவிலில் தாலி கட்டிக்கிட்டா என்ன பண்ணுவீங்க..?”

ரகுவரனின் கேள்வியில் பூபாலனின் நரம்புகள் புடைத்தன..

“கூப்பிட்டுப் பாருடா..” உறுமினான்..

பூர்ணிமாவுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.. காதலிப்பது சுகமாகத்தான் இருந்தது.. அந்தக் காதலுக்கான எதிர்ப்பு ரணமாக இருந்தது..

காதலுக்காக உயிரை விடலாம்.. குடும்பத்தை விடலாமா..?

# 23

“பாருடா இவ முகத்தை.. திருட்டுத் தாலி கட்டிக்கிற முகமாடா இது..? தெரியாத்தனமா உன்மேல பிரியம் வைச்சுட்டாங் கிறதுக்காக நீ எது வேண்டும்னாலும் சொல்லிருவியா..? குடும்பத்தை மீறுற பொண்ணில்லடா என் தங்கை.. அறியாம பிரியம் வைச்சுட்டா.. நாங்க எடுத்துக் சொன்னாக் கேட்டுக்குவா.. நீ அதிகமா உரிமை கொண்டாதே..”

“இவ என் காதலி பூபாலன்..”

“கூடவே என் தங்கையும் இவதாண்டா.. எங்க குடும்பத்தோட அகல் விளக்கு..! எங்க சொத்து, சுகம், எல்லாமே இவதான்.. இந்த வீட்டுப்படியை இவ தாண்டினா கூடவே எங்க மானம் மரியாதையும் தாண்டிப் போயிரும்னு தெரிஞ்சவடா என் தங்கை..”

விதிர்த்துப் போன பூர்ணிமாவின் விழிகளில் தெரிந்த குற்றஉணர்வில் மறுகிப் போனான் ரகுவரன்.. அதட்டினால் மிரட்டலாம்.. ஆணையிட்டால் உடைக்கலாம்.. எதிர்த்து நின்றால் யுத்தம் புரியலாம்.. இவை எதையும் செய்யாமல் பாசத்தால் பூவேலி போடுகிறவனை என்ன செய்ய முடியும்..? எந்தப் போர்முறையில் வெல்ல முடியும்..?

இரும்புச் சங்கிலியை அறுக்கலாம்.. அன்புச் சங்கிலியை அறுக்கும் வல்லமை இப்புவியில் பிறந்தோர்க்கு உள்ளதா..?

“கூப்பிட்டுப் பாருடா என் தங்கையை.. நீ ‘வா’ன்னு கூப்பிட்டால் எங்க வீட்டுப் பெண் உன் பின்னாலே வந்து விடுவாளா..? அப்படியாடா அவளை வளர்த்து வைத்திருக்கோம்..?”

சவால் விட்டான் பூபாலன்.. பூர்ணிமாவை ஏறிட்டான் ரகுவரன்.. அவள் பதறிப் போனாள்.. அழைத்து விடாதே என்று பார்வையில் மன்றாடினாள்..

***"அழைக்காதே.. நினைக்காதே..***
***அவைதனிலே.. ஓ.. என் ராசா..***
***ஆருயிரே..! மறவேனே.."***

சூழலுக்குத் தகுந்த பாடலை டி.வி. ஒலிபரப்பியது.. ரகுவரன் பெருமூச்சு விட்டான்.. தரையில் சிதறிக் கிடந்த பழங்களையும் பூவையும் பார்த்தான்.. போய் விட்டான்..

"ஒன்னும் சொல்லாம போயிட்டாரே..."

விழிகள் விரியச் சொன்னாள் ஆனந்தி.. அவளை வெட்டவா, குத்தவா என்பதைப் போல முறைத்துப் பார்த்தான் பூபாலன்.. கணவனின் முறைப்பில் நடுங்கிப் போனவள்..

"ரௌடின்னு சொல்றீங்க.. நம்ம பூர்ணிமாவைக் காதலிக்கிறவரு.. பூர்ணிமாவும் அவரைக் காதலிக்கிறா.. கலாட்டாப் பண்ணாம போயிட்டாரு பார்த்தீங்களா..? அதைச் சொன்னேங்க.." என்று விளக்கம் சொல்ல முற்பட்டாள்..

"வாயை மூடு.." பூபாலன் போட்ட சத்தத்தில் அடங்கிப் போனாள்..

பூர்ணிமா கண்ணீருடன் குனிந்தாள்.. தரையில் கிடந்த ரகுவரன் வாங்கி வந்திருந்த சில்வர் தட்டை எடுத்தாள்.. பழங்களையும், பூவையும் சேகரித்து அதில் அடுக்கி வைத்தாள்.. பூஜையறையில் தட்டை வைத்துவிட்டு சரிந்து உட்கார்ந்தாள்.. தெய்வத் திருவுருவங்களின் படங்களைப் பார்த்தபடி மௌனக் கண்ணீரை உகுக்க ஆரம்பித்தாள்..

இப்படி உட்கார்ந்திருப்பவளிடம் என்ன கேள்வியைக் கேட்க முடியும்..? விஸ்வநாதன் சோர்வாக சோபாவில் உட்கார்ந்தார்.. சுவரில் சாய்ந்து நின்றிருந்த பாகீரதி அப்படியே சரிந்து இருந்த இடத்தில் உட்கார்ந்து விட.. அன்றைக்கான சமையல் வேலை தனது தலையில் விழுந்து விட்டதைப் புரிந்து கொண்டாள் ஆனந்தி.. ஆஷாவை இறக்கி விட்டு விட்டு

அவள் சமையலறைக்குள் பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போய் விட்டாள்.. பூபாலன்..

“அப்பா..” என்றான்..

“சொல்லு..” என்றார் விஸ்வநாதன்..

“குடும்பத் தலைவர் நீங்க.. இப்படி இடிஞ்சு போய் உட்கார்ந்துட்டா எப்படிப்பா..?”

“வேற என்னத்தைடா செய்யச் சொல்ற..?”

“ஆகிற வேலையைப் பார்ப்போம்..”

மகன் சொல்ல வருவதைப் புரிந்து கொண்ட விஸ்வநாதன் பூஜையறையில் உட்கார்ந்திருந்த பூர்ணிமாவைப் பார்த்தார்.. சோகச் சித்திரமாய் அசையாமல் மௌனக் கண்ணீருடன் அமர்ந்திருந்தாள் அவள்.. மகளை அந்தக் கோலத்தில் பார்த்திராத பெற்றவரின் மனம் வலித்தது..

‘பெண் பார்க்க வருகிறவங்க முன்னாலே இந்த மனநிலையோட இவளை நிற்க வைப்பது பாவம்..’

ஒரு முடிவோடு மகனைப் பார்த்தவர்..

“வேண்டாம்டா..” என்று மறுப்பாக தலையசைத்தார்..

“என்னப்பா பேசறிங்க.. அவங்களை வரச் சொல்லி நாமதான் சொன்னோம்..” படபடத்தான் பூபாலன்..

“இப்ப வரவேணாம்ன்னு நாமளே சொல்லிருவோம்..”

“அப்பா..?”

“உன் நம்பிக்கைக்குக் கட்டுப்பட்டு உன் தங்கை வீட்டுக்குள்ளேயே நின்னுட்டா.. அவ பார்வைக்கு கட்டுப்பட்டு அந்த ரகுவரன் வந்த வழியிலேயே திரும்பிப் போயிட்டான்.. இதுக்கு மேலே இப்ப எதுவும் செய்ய வேணாம் பூபாலா.. எல்லாத்தையும் நிறுத்து..”

“நிறுத்திட்டு..?”

பூபாலனின் கோபத்தில் எதுவும் பேசாமல் ஓர் நொடி மௌனமாக இருந்தார் விஸ்வநாதன்..

“சொல்லுங்கப்பா..” என்ற பூபாலனின் சத்தத்தில்..

“என்னத்தைடா சொல்லச் சொல்ற..?” என்று எரிந்து விழுந்தார்..

“என்மேல எரிச்சல்பட்டா என்னப்பா அர்த்தம்..?”

“வேற யார் மேல எரிச்சல் படச் சொல்ற..? உன் தங்கை மேலேயா..? அதனால நமக்கு என்ன ஆகப்போகுது..? ஆறப் போடு பூபாலா.. இப்போதைக்கு அதுதான் நல்லது..”

“மாப்பிள்ளை வீட்டுக்கு என்ன காரணத்தைச் சொல்றது..?”

“எதையாச்சும் சொல்லு.. ஆனா அவங்க நம்ம வீட்டுக்குப் பெண் பார்க்க வரக் கூடாது..”

வீட்டில் நிசப்தம் நிலவியது.. பெண் பார்க்கக் கிளம்பிக் கொண்டிருந்த மாப்பிள்ளை வீட்டாரிடம் அது, இது என எதையோ காரணம் சொல்லி வரவேண்டாம் என்று சொல்லி விட்டான் பூபாலன்.. மகளின் மனதிலும் காதல் எனும் கருமாயம் புகுந்து விட்டதே என்று தலைமீது கை வைத்துச் சுவரோடு சுவராக சாய்ந்து உட்கார்ந்து விட்டாள் பாகீரதி.. இருக்கும் துன்பம் போதாது என்று வாயில் வைக்க முடியாத வகையில் சமையலைச் செய்து அதைச் சாப்பிட்டாக வேண்டும் என்று குடும்பத்தினரைக் கட்டாயப்படுத்தி ஒருவழி பண்ணினாள் ஆனந்தி.. அத்தைக்கு மனது சரியில்லை என்று புரிந்து கொண்டதைப் போல ஆஷா பூர்ணிமாவுடன் ஒட்டிக் கொண்டிருந்ததில் மனம் நெகிழ்ந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு மாடிக்குப் போய் விட்டாள் பூர்ணிமா..

தோழியைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்பதினால் கல்லூரிக்கு கடுக்காய் கொடுத்து விட்டு..

**“கட்டடிப்போம் கட்டடிப்போம்..**
**காலேஜீக்கு..”**

என்று பாட்டுப் பாடியபடி பூர்ணிமாவின் வீட்டுக்குள் வந்த சுபா வீட்டில் நிலவிய நிசப்தத்தில் திகைத்துப் போய் விட்டாள்..

“என்ன அண்ணி இது..?” என்று ஆனந்தியைக் கேட்டாள்..

“உஷ்ஷ்..” என்று வாயின் மீது ஒற்றைவிரலை வைத்து பயமுறுத்திய ஆனந்தி மாடிப்பக்கம் கைகாட்டி..

“உன் பிரண்டு அங்கேதான் இருக்கிறா.. போய் கேளு..” என்றாள்..

“அங்கிளும் ஆண்டியும் ஏன் இப்படி இருக்கிறாங்க..?”

“அதையும் உன் பிரண்டே சொல்வா.. கேட்டுக்க.. காபி சாப்பிடறயா..?”

“ஆண்ட்டி இப்படி உட்கார்ந்திருக்காங்களே.. காபியை யார் கலந்து கொடுப்பாங்களாம்..?”

“இன்னைக்குச் சமையல் நான்தான்..”

“அப்பக் காபியே வேணாம் அண்ணி.. ஆளை விடுங்க..”

அங்கே நொடிப்பொழுது தாமதித்தாலும் ஆனந்தி காபித் தம்ளரைக் கையில் திணித்து விடுவாள் என்று பயந்து போன சுபா நாலுகால் பாய்ச்சலில் மாடிப்படிகளில் தவழ்ந்தோடி விட்டாள்..

‘ஊரே என் சமையலைக் கண்டு நடுங்குது..’ ஆனந்தி பல்லைக் கடித்தபடி சமையலறைக்குத் திரும்பி விட்டாள்..

ஆஷாவுடன் மாடி பால்கனியில் தஞ்சமடைந்திருந்தாள் பூர்ணிமா... அவள் பார்வை ரகுவரனின் பிளாட்டின் மீது படிந்திருந்தது..

“இங்கே என்னடி பண்ற..? ஏன் உன் வீடே டல்லடிக்குது..? பெண் பார்க்க வர்றாங்கன்னு சொன்னாங்க.. இப்படி உக்காந்திருக்க..?”

பூர்ணிமா உதட்டைக் கடித்தபடி தோழியைப் பார்த்தாள்.. அவளது கண்களில் கண்ணீர் திரையிட்டிருந்தது.. எதிர்த்த பிளாட்டின் பால்கனியில் ரகுவரன் வந்து நின்றான்.. பூர்ணிமா விழிகள் பளபளக்க ரகுவரனைப் பார்த்தாள்.. சுபா திகைத்துப் போனாள்..

“அவனையேண்டி பார்க்கிற..?”

“அவரைப் பார்க்காம வேறு யாரைப் பார்ப்பா..?” ஆனந்தியின் குரல் கேட்டது..

“என்ன அண்ணி சொல்றீங்க..?” புரியாமல் திரும்பிப் பார்த்த சுபா ஆனந்தியின் கையிலிருந்த காபிக் கப்பைக் கண்டதும் அரண்டு போனாள்..

“அண்ணி.. இப்பத்தான் காபி குடிச்சுட்டு வந்தேன்.. வேணாம் அண்ணி..”

“அந்தக் கதையே இங்கே வேணாம்.. நீ காபி குடிக்கிறதா இருந்தா நான் விவரம் சொல்றேன்..”

ஆனந்தியின் நிபந்தனையை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் ஏதும் தென்படாததினால் அழமாட்டாத குறையாக காபியை வாங்கிக் குடித்த சுபாவுக்கு வயிற்றைப் பிரட்டி வாந்தி வருவதைப் போல இருந்தது.. ஆனந்தி சொன்ன பூர்ணிமாவின் காதல்கதை அனைத்து அவஸ்தைகளையும் மறக்கடித்து விட்டதில் அவள் சொட்டுக்கூட மீதம் வைக்காமல் காபியை குடித்து விட்டாள்..

“உங்களால்தான்..”

சுட்டு விரலை நீட்டி ரகுவரனைக் குற்றம் சாட்டினாள் சுபா..

“அமைதியான என் பூர்ணிமாவோட வாழ்க்கையில புயலை வீச வைத்திருக்கிறது நீங்கள்தான்.. உங்களால்தான் அவள் அமைதியில்லாம தவிக்கிறா.. உங்களுக்கு காதலிக்க என் பிரண்ட்தான் கிடைத்தாளா..?”

“அவளுக்குக் காதலிக்க நான்தான் கிடைத்திருக்கேங்க.. அதுதான் உண்மை.. முள்ளை மலர் காதலிக்கிறது முள்ளுக்கான வரம்..! அது முள்ளுன்னு மத்தவங்க ஒதுக்கி வைக்கிறதினாலே மலரோடு சேர முடியாம அது தனித்து நிக்கிறது சாபம்..! வரமும், சாபமும் ஒன்னோடொன்னு ஒட்டிக்கிட்டு வந்திருக்குங்க.. நான் துரதிர்ஷ்டசாலி..”

ரகுவரனின் வேதனையில் வாயடைத்துப் போனாள் சுபா.. மனதுக்குள் அவன்மீது மதிப்பும், மரியாதையும் கொண்டவள் அவள்.. அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டாள்.. தீரம் மிகுந்த ரகுவரனின் மனதுக்குள் மண்டிக் கிடந்த துயரை அவன்

*வார்தைகளில் வெளிப்படுத்திய போது அவள் மனம் நோவு கொண்டது..*

*“நிம்மதிக்கு உத்தரவாதமில்லாத வாழ்வை சுமையாக என் தலையில் விதி ஏற்றி வைத்து விட்டதுங்க.. அதுக்கு எந்த விதத்திலும் நான் பிணையாக முடியாதுங்க.. உண்மையில் நான் ஊர் எல்லையில் தனித்து நிற்கும் ஒற்றைப் பனை..! எங்கும், எவராலும் புரியப்படாதது எனதன்புங்க.. காலம் என்னைத் தனிமைப் படுத்தியிருச்சுங்க.. மனசார நான் யாருக்கும் கெடுதல் செய்ததில்லை.. நல்லதுதான் செய்திருக்கிறேன்.. இதை பூர்ணிமாவோட குடும்பத்தார்கிட்ட யார் சொல்கிறது..?”*

*சுபா சொன்னாள்.. ரகுவரனின் மனநிலையைப் பூபாலனிடம் எடுத்துரைத்தாள்.. பூர்ணிமா காதலை முன் வைத்துக் கோடு போட்டு விட்டாள்.. ஊருக்கு ரௌடியாக தோற்றமளிக்கும் ரகுவரன் காதலி போட்டு வைத்திருக்கும் கோட்டை ஒர்நாளும் தாண்ட மாட்டான் என்பதை தெளிவு படுத்தினாள்.. எவருடனும் பேசாமல் தனக்குள்ளே ஒடுங்கி மாடியை விட்டுக் கீழே இறங்காமல் தன்னைத்தானே சிறைபடுத்தியிருக்கும் பூர்ணிமாவின் துயரத்தைச் சுட்டிக் காட்டினாள்..*

*“அகல்விளக்கு தரம் பிரிச்சுப் பார்க்காதுண்ணா.. மாட மாளிகை, கூட கோபுரம்ன்னு உயரத்தை நினைக்காது.. ஏழை குடிசையிலும் வெளிச்சத்தைப் பரப்பும்.. பூர்ணிமா அகல் விளக்குண்ணா.. அவ மனசில இருக்கிற பிரியம் வெளிச்சத்தைக் கொடுக்கிற பிரியம்.. நீங்க காட்டற மாப்பிள்ளைக்கு அவ கழுத்தை நீட்டிருவான்னா நினைக்கறிங்க..? அப்படிக் கழுத்தை நீட்டறவ இல்லண்ணா அவ.. மனசார ரகுவரனைக் காதலிச்சுட்டா.. வேற ஒருத்தரை நினைக்கக்கூட அவளால் முடியாது.. நீங்க மனுசங்களை அவங்களோட வெளித் தோற்றத்தை வைச்சு எடை போட்டிங்க.. அவ மனசை வைச்சு எடைபோட்டுட்டா.. ஒன்னு மட்டும் நிச்சயம்ண்ணா.. ரகுவரன் பார்க்கிறதுக்கு*

வேணும்னா முரட்டுத்தனமான மனுசனா இருக்கலாம்.. மனசுக்குள்ள இரக்க குணம் கொண்டவரு.. நேர்மையானவரு.. தப்புன்னு தெரிஞ்சா தட்டிக் கேட்கிற தைரியசாலி.. அவரோட இந்த அஞ்சாமையைத்தானே நீங்க ரெளடியிசம்ன்னு முத்திரை குத்தறிங்க..? உங்க மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க.. ரகுவரன் மேல உங்களுக்கு நல்ல அபிப்ராயமே இல்லையா..?"

பூபாலன் பதில் சொல்ல முடியாமல் திணறினான்.. ரகுவரன் நல்லவன்தான்.. ஆனாலும் முழுமனதாய் அவனை ஏற்றுக் கொள்ள முடியாமல் ஏதோ ஒன்று அவனைத் தடுக்கிறதே..

சுபா ஒருபுறம் கரைக்க.. பிரசன்னா மறுபுறம் பூபாலனிடம் பேச்சு வார்த்தைக்கு வந்தான்..

"ரகு ஆலமரம் சார்.. அவனோட நிழலில ஆளானவங்க நிறையப்பேர்.. அனாதையா நின்னுட்டோமேன்னு நாலு அநாதைப் பிள்ளைகளுக்கான முழுச் செலவையும் ஏத்துக்கிட்டு படிக்க வைச்சுக்கிட்டு இருக்கான்.. இவன்தான் ஸ்பான்சர்ன்னு அந்தப் பிள்ளைகளுக்குத் தெரியாது.. அவன்கிட்ட வேலை பார்க்கிறவங்களுக்கு மத்தவங்களைவிட இரண்டு மடங்கு அதிகமாச் சம்பளம் கொடுப்பான்.. கஷ்டத்தில துணை நிற்பான்.. அவங்க சந்தோசத்தைக் கொண்டாடுவான்.. அவன் கர்ண பிரபு சார்.. கொடுத்துப் பழக்கப்பட்டவன்.. அவனுக்குன்னு எதையும் கேட்டதில்லை.. அவனுக்குன்னு இருந்த அவனோட அப்பாம்மாவை தட்டிப் பறிச்சுக்கிட்ட கடவுள் பதிலுக்கு உங்க தங்கையின் காதலை அனுப்பி வைச்சிருக்கிறதா நினைக்கிறான்.. கொடுக்க மாட்டேன்னு சொல்லிராதீங்க.. பணத்திலயும், குணத்திலயும் உயர்ந்தவன்.. உங்க தங்கையின் குணத்துக்கு இவனை விடப் பொருத்தமான மாப்பிள்ளை கிடைக்கவே மாட்டான் சார்.."

மன்றாடிய பிரசன்னாவிடம் நீயெல்லாம் பெண் கேட்டு வந்து விட்டாய் என்பதைப் போல முறைத்துப் பார்த்து அனுப்பி விட்டான் பூபாலன்.. அடி மனதில் நிரடிய நிரடலை

ஒதுக்கி வைத்துவிட்டு பூர்ணிமாவின் மனம் போல திருமணத்தை நடத்தி வைக்க அவனால் முடியவில்லை..

சரியான தூக்கம், சாப்பாடு, அமைதி இல்லாமல் பூர்ணிமா காய்ச்சலில் விழுந்தாள்.. கண் திறக்காமல் கிடந்தவளை மருத்துவ மனையில் சேர்த்தார்கள்.. பாகீரதி அழுது புலம்பினாள்.. விஸ்வநாதனின் கண்கள் கசிந்தன.. பூபாலனை ஏறிட்டுப் பார்த்தவர்.

“அவனைச் வரச் சொல்லுடா..” என்று குரல் கம்மச் சொன்னார்.

“அப்பா..?”

“ரௌடின்னு பேர் வாங்கினவனுக்குப் பெண் கொடுக்க உன் போலிஸ் புத்தி யோசிக்குது.. உன் தயக்கத்துக்கு இதுதான் காரணம்.. அவன் நல்லவன்னு ஊரே சொல்லும்போது நீ ஏண்டா தயங்கனும்..? உன் தயக்கத்தை உடைச்சு எறிடா..”

“ஆனாலும் அப்பா..”

“வேண்டாம் பூபாலா.. இனியும் ஆனா, ஆவன்னான்னு நாம பேசிக்கிட்டிருக்க வேணாம்.. உன் தங்கையைப் பாருடா.. பறிச்சுப் போட்டக் கொடி போலக் கிடக்கிறா.. உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கா.. இவளோட உயிர் அவன்தாண்டா..”

“அப்பா..”

பூபாலன் கண்ணீர் விட்டான்.. பூர்ணிமாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவள் தலையைக் கோதி விட்டான்.. அண்ணா.. ரகுவரனை நான் காதலிக்கிறேன்.. அவனுக்கே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிடு என்று கேட்காமல்.. என் காதலைத் தடுக்கிறாயே என்று குற்றம் சாட்டாமல் தவசி போல நடமாடி நோயில் விழுந்து விட்டத் தங்கையின் முகத்தைப் பார்த்தவனுக்குள் குற்றஉணர்வு வந்தது..

“உன் தங்கை அகல் விளக்குடா.. நாம அப்படித்தான் இவளைச் சொல்லுவோம்.. அமைதியானவ.. மத்தவங்களுக்கு அமைதியைக் கொடுக்கிறவ.. அகல்விளக்கு

மத்தவங்களுக்கு அமைதியைக் கொடுக்கனும்.. அமைதியிழந்து தவிக்கக் கூடாது.. பூர்ணிமா வாழனும்டா பூபாலா.. இவளோட வாழ்க்கை ரகுவரன்தாண்டா..”

அதற்கு மேலும் தாமதிக்காமல் ரகுவரனுக்குப் போன் போட்டான் பூபாலன்.. செய்தியைக் கேட்டவுடன் பறந்து கொண்டு வந்தான் ரகுவரன்.. மருத்துவமனையில் கண் திறக்காமல் கிடந்த பூர்ணிமாவைக் கண்டதும் அவன் விழிகள் கலங்கிச் சிவந்து விட்டன..

அவனுக்காக அனைத்தையும் தவிர்த்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவளின் கைவிரல்களைப் பற்றினான்.. அசைவில்லாமல் கிடந்த விரல்கள் அவனது விரல் பட்ட ஸ்பரிசத்தில் நடுங்கித் துடித்தன..

“பூர்ணிமா..” கரகரத்த அவன் குரலில் அவள் கண்விழித்தாள்.

“வந்துட்டிங்களா..?” ஈனஸ்வரத்தில் கேட்டாள்..

“ஏன் இப்படி உன் ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கிட்ட பூர்ணி..?”

“எனக்கென்ன ஆச்சு..? ஒன்னும் ஆகலை.. உங்களை நான்தான் காதலிச்சேன்.. உயிராய் நினைச்சேன்.. நிம்மதியாய் உங்க வாழ்க்கையை வாழ்ந்துக்கிட்டு இருந்தீங்க.. காதல்ன்னு ஊடே வந்தேன்.. உங்க நிம்மதியைப் பறிச்சேன்.. எப்பேற்பட்ட மனுசன் நீங்க.. என்னால அவமானப்பட்டிங்களே..”

“என்ன பேசற..? இது அவமானமா..? பெத்தவங்களும் கூடப் பிறந்தவரும் உன்னை அப்படியே தூக்கி என் கையிலே கொடுத்துருவாங்களா..? அவங்க பார்வையிலே நான் ரௌடிதானே..? உன் வாழ்க்கையைப் பத்தின கவலையும், பொறுப்பும் அவங்களுக்கு இருக்கு பூர்ணிமா.. அதைக் குறை சொல்லக் கூடாது..”

பூர்ணிமா நெகிழ்ந்தாள்.. விழிகளில் கண்ணீர் மல்க தன் குடும்பத்தாரைப் பார்த்தாள்.. கேட்டுக் கொள்ளுங்கள்.. இவன் நியாயவான்.. என்று சொன்னது அவள் பார்வை..

“எனக்கும் தெரியும்ங்க.. அதனாலதான் எதிர்த்துப் பேசாம, உங்க பின்னாலே வராம வீட்டுக்குள்ளே முடங்கிட்டேன்.. ஆனா ஒன்னுங்க.. நீங்கதான் எனக்கு எல்லாமும்.. இதை உங்ககிட்ட சொல்லிரனும்னுதான் உயிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு இருந்தேன்.. என் வீட்டார் முன்னாலே இதை உங்ககிட்டச் சொல்லிட்டேன்.. இது எனக்குப் போதும்..”

நீயே எனக்குச் சகலமும் என்ற வார்த்தைகளில் ஆறி விடுகின்றன அனைத்து மன ரணங்களும்..

பூர்ணிமா அதைச் செய்தாள்.. அவள் உயிராய் நினைத்தவனிடம் நீயே எனக்குச் சகலமும் என்று சொன்னாள்.. அதையும் அவளது குடும்பத்தாரின் முன்னிலையில் சொன்னாள்..

அநாதையாய் நின்ற அந்த ஆபத்பாந்தவனின் புண்ணாகியிருந்த உள்ளம் ஆறி விட்டது.. காதலியின் கரங்களைப் பிடித்துக் கண்களின் மீது வைத்து ஒற்றிக் கொண்டான்.

மழையுமில்லாத வெயிலுமில்லாத இதமான சீதோஷ்ணம் கொண்ட சுபயோக சுபதினத்தில் பூர்ணிமாவின் கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டுத் தன் மனையாட்டிக்கிக் கொண்டான் ரகுவரன்.. பெரிய திருமண மண்டபத்தில் பிரம்மாண்டமாக நடந்த அவர்களது திருமணத்திற்கு ஊரே திரண்டு வந்து கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியது.

ஹனிமூனுக்கு சிம்லா.. மறுவீட்டு விருந்துக்கு எதிர்வீட்டு விருந்து என திருமணத்தை ஒட்டி நடந்த இனிப்பான நிகழ்வுகளுக்குப் பின்னால் ரகுவரனின் பிளாட்டில் அவனுடன் குடும்பம் நடத்த ஆரம்பித்தாள் பூர்ணிமா..

இப்போதும் அபார்ட்மெண்டில் சண்டைகள் வருகின்றனதான்.. ரகுவரன் சட்டையை மடித்துக் கொண்டு சண்டைக்குப் போகிறான் தான்.. ஆனால் அவனை ரௌடி என்று சொல்லாமல் அபார்ட்மெண்டின் செக்கரட்டரி என்று

சொல்லி அனைவரும் அவனிடம் அனுசரித்துப் போகிறார்கள்..

அன்பான அகல்விளக்கு ஒளி கொடுக்க வாழ்வில் வந்து விட்டால் அனைத்து நிகழ்வுகளும் நலமாகத்தானே அமையும்..?

- சுபம் -